பக்கங்கள்: இருபத்திரெண்டு

Registered as a Newspaper

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

03 OCT 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 புரட்டாதி 17 சனிக்கிழமை [03 - 10 - 1998] SANJEAVY- Regenerative Tamil Weekly இகரம்: 19

# மூழ்கிய விமானத்திலிருந்து சடலங்களை மீட்க முயற்சி!

## நாளை அல்லது நாளை மறுதினம் இடம்பெறும் எனத் தகவல்

கொழும்பு, ஒக்டோபர் 3

இரணைதீவுக்கு அருகே கடலில் மூழ்கிய ''லயன் ஏயர்'' விமானத்திலிருந்து பயணிகள் மற்றும் விமானச் சிப்பந்திகளின் சடலங்களை மீட்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

அனேகமாக சடலங்களை மீட்கும் பணி நாளை அல்லது நாளை மறுதினம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடலில் வீழ்ந்த விமானத்தையும், அதில் சிக்கிய பயணிகளின் சடலங்களையும் மீட்கும் முயற்சியில் சம்பந்தப்பட்ட 'லயன் ஏயர்' நிறுவனம் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அந்நிறுவனத்தின் முன் முயற்சியை அடுத்து, செஞ்சிலுவைச்சர்வதேச குழுவின் உதவியுடன் மீட்புப்பணிகளை மேற்கொள்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதாக தெரியவருகிறது.

மீட்புப்பணிவேளையில் அப்பிரதேசத்தில் கடற்படையினரோ அல்லதுவிமா

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கடலில் வீழ சில நிமிடங்களுக்கு முன்னர்

## விமானத்துக்குள் திடீரென அமுக்கவீழ்ச்சிஏற்பட்டதாம்!

### தாக்குதலே காரணம் எனச் சந்தேகம்

கொழும்பு, ஒக். 3

'லயன் ஏயர்' விமானம் இரணைதீவுக் கடலில் வீழ்வதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர், விமானத்தின் உள்ளே அமுக்கம் திடீரென இழக்கப்பட்டதால் விமானத்தின் கட்டுப்பாட்டைத் தான் இழந்து வருவதாகவும் —

அதனால் விமானத்தைத் திருப்பிக் கொண்டு வந்து பலாலி விமானத் தளத்தில் உடனே இறக்கப் போவதாகவும்—

சம்பந்தப்பட்ட விமானத்தின் விமானி பலாலி விமான நிலையக் கட்டுப்பாட்டுத் தளத்துக்கு அறிவித்திருந்தார்.

விமான அதிகாரி ஒருவரை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பின்னால் வந்து கொண்டிருந்த

## 'லயன் ஏயர்' சரக்கு விமானத்தில் காயப்பட்ட படையினர் இருந்தனர்!

கொழும்பு, ஒக். 3

''கடலில் வீழ்ந்த 'லயன் ஏயர்' பயணிகள் விமானத்துக்கு சற்றுத் தாமதமாக காயப்பட்ட படையினரை ஏற்றிக்கொண்டு 'லயன் ஏயர்' நிறுவனத்தின் சரக்கு விமானம் ஒன்றுவந்துகொண்டிருந்தது''

'லயன் ஏயர்' நிறுவன உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்தி நிறுவனம் ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டது.

அந்த நிறுவனம் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது;-

வழமையாக 'லயன் ஏயர்' நிறுவனத்தின் இரண்டு விமானங்கள் பயணிகள் சேவையில் ஈடுபட்டு வந்தன; இது தவிர 'லயன் ஏயர்' நிறுவனத்தின் சரக்கு விமானம் ஒன்றும் சேவையில் ஈடுபட்டு வந்தது.

கொழும்பிலிருந்து படையினருக்குத் தேவையான பொருள்களையும் —

பலாலியிலிருந்து அங்குள்ள உள்ளூர் உற்பத்திகளையும்—

ஏற்றிவரும் சேவையில் இந்தச் சரக்கு விமானம் ஈடுபட்டிருந்தது.

அன்றையதினம், கிளிநொச்சிச் சமரில் காயம் அடைந்த படையினர் இந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் 7 பேரின் சடலங்கள் ஒதுங்கின!

மன்னார், ஒக். 3

கடலில் மூழ்கிய ''லயன் ஏயர்'' விமானத்தின் பயணிகள் மற்றும் சிப்பந்திகளின் சடலங்களில் இதுவரை ஏழு சடலங்கள் கரை ஒதுங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

விமானப் பயணிகள் மற்றும் சிப்பந்திகளின் மூன்று சடலங்கள் நேற்று முன்தினம் இரணைதீவுக் கரையில் கரை ஒதுங்கிய பின்னர் அடக்கம் செய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியது தெரிந்ததே.

மேலும் மூன்று சடலங்கள் இரணைதீவுப் பகுதியில் நேற்று கரை ஒதுங்கியதாக மன்னார் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். - கொழும்பு இடையே

## பயணிகள் கப்பல் சேவை நடத்துவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணத்துக்கான விமானப் போக்குவரத்துத் தடைப்பட்டிருப்பதை அடுத்து கொழும்பு — காங்கேசன்துறை இடையே பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே தற்போது தரித்து நிற்கும் சரக்குக் கப்பல் ஒன்றையே பயணிகள் கப்பலாக மாற்றி இச்சேவையில் ஈடுபடுத்த சில வட்டாரங்கள் முயற்சிஎடுத்துள்ளன.

யாழ்ப்பாண வர்த்தகர் ஒருவரால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள இந்தப் புதிய கப்பல், வடக்கிற்கு பொருள்களை ஏற்றி வரும் சேவையை ஆரம்பிக்க இருந்தது.

ஆனால் தற்போது யாழ். —கொழும்பு பயணிகளுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 74 சடலங்கள் புலிகள் ஒப்படைப்பு

வவுனியா, ஒக். 3

கிளிநொச்சி பகுதி மீதான தாக்குதலின் போது தங்களால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்து மற்றுமொரு தொகுதியாக 74 சடலங்களை நேற்று விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9 மணியளவில் யோகபுரம் மகாவித்தியாலய மைதானத்தில் வைத்து உரிய மரியாதைகளுடன் விடுதலைப் புலிகளின் துணை அரசியல் பொறுப்பாளர் கரிகாலனால் இச்சடலங்கள் ஒப்படைக்கப் பட்டன என்றும் அறிவிக்கப் பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சி, மாங்குளத்தில்

## தேசியக்கொடியேற்ற வைபவங்கள் நேற்று

கொழும்பு, ஒக். 3

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் கைப்பற்றியதாகக் கூறப்படும் மாங்குளம் நகரில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்று ஸ்ரீலங்கா தேசியக் கொடியை ஏற்றினார் என்று அறிவிக்கப்பட்டது.

அதேபோல் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகக்கூறப்படும் கிளிநொச்சி நகரில் விடுதலைப்புலிகளின் சிறப்புத்தளபதி விதுஷா நேற்று முன்தினம் தமிழீழ தேசியக்கொடியை ஏற்றினார் என்று புலிகள் அறிவித்தனர்.

மாங்குளம் சந்தியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஓரிடத்தில் முப்படைத் தளபதிகள் 'வெற்றி உறுதி' நடவடிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு செல்வதற்கு

## செஞ்சிலுவை உதவி கோரும் மக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 3

பலாலிக்கும், இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை இடை நிறுத்தப்பட்டதால், பாதிக்கப்பட்டுள்ள பயணிகள் யாழ். அரச அதிபரிடமும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடமும் உதவி கோரியுள்ளனர்;

அவசர தேவைகளுக்குக் கொழும்பு செல்ல வேண்டியவர்கள், வெளிநாடுகளில் இருந்து விடுமுறையில் வந்து மீளத் திரும்ப முடியாமல் இங்கு சிக்கியோர் போன்றோரே இவ்வாறு உதவி

(8 ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T.Vக்கள் விற்பனைக்கு

Sony 2030, 2032, 2072, 2060 National நியூ ரீ.விக்கள் போன்ற பல ரகங்களில் விற்பனைக்கு உண்டு.
சகல ரீ.விக்கள், டெக், ரேடியோ, மணிக்கூடுகள் என்பனவும் திருத்தித் தரப்படும்.
மற்றும்
குறைந்த கட்டண தொலைத் தொடர்பிற்கு

**வீனஸ் டெல்கா,**
284, ஸ்ரான்லி வீதி,
(நாகவிகாரை முன்பாக)
யாழ்ப்பாணம். TEL. 2064

கிளை:- பஸ் நிலையம்,
சாவகச்சேரி.

(சி/5054)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் சசி கிருஷ்ணமூர்த்தி

(B. A. பேராதனை)
(செயலாளர், பனை அபிவிருத்திச்சபை)

சபையின் செயலாளராகக் கடமையாற்றிய சசி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 29 - 09 - 98 இல் அகால மரணம் எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
நலன்புரிச் சங்கம்,
பனைஅபிவிருத்திச் சபை.

53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

244, காலி வீதி,
கொழும்பு - 4.

(சி/5048)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 21 | | 18 |
| — |  | — |
| 09 | | 10 |
| — | | — |
| 1928 | | 1997 |

அமரர்

## ஆறுமுகம் கதிரமலை

திதி: 03 — 10 — 98

எங்களை வாழவைத்த அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

73, பெரிய தம்பிரான் வீதி,
வண். வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

(59602)

# கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 3

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் கொழும்பு செல்வதற்குப் பதிவு செய்த நோயாளர்களையும், அவர்களுடன் செல்லும் உதவியாளர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் பணிமனையில் சமுகமளித்து, பயணத்திகதியை உறுதி செய்யுமாறு யாழ். வைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(உ-139-3)

# விளையாட்டு போட்டி

சிறுப்பிட்டி மேற்கு பூமகள் நிலையத்தால் நடாத்தப்படும் பூமகள் முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1-30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் வே. பாராளன் தலைமையில் நடைபெறும்.

சர்வோதய மாவட்ட செயற்றிட்ட நிறைவேற்றுனர் எஸ். வி. சங்கரப்பிள்ளை பிரதம விருந்தினராகப் பங்குபற்றுவார்.

# கூட்டம்

உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் விவசாய சம்மேளனங்களின் தலைவர் மற்றும் செயலாளர்களுக்கான கூட்டம் நாளை காலை 10 மணிக்கு கமநல மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உலக உணவு ஸ்தாபன திட்டத்தின் வேலைத் திட்டம் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிகிறது. கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார் எனத் தெரிய வருகிறது. (உ-185)

A/L DAY CLASS
கணக்கீடு
Mr. BALA
ஆரம்பம்:- 5-10-98
Mon. 8 A M.
**SHAMROCK**
(C/5061)

**விக்னா**
கல்வி நிறுவனம்
திரு. பாலவாசன்
**A/L 2000**
தொங்கல் கணக்கு
04 — 10 — 1998
Sun. 1— 2. P. m.
(59608)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
அரவிந்தசாமி
மதுபாலா - ஸ்ரீவித்தியா
ஜனகராஜ் - நாஸர்
நடித்த
**ரோஜா**
இனிய பாடல்கள்
நிறைந்தது
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/5020)

**நாகராஜ்ஸ் சினிமா**
சுன்னாகம்
4 ஆம் திகதிவரை
தேசியவிருது பெற்ற
சிவாஜி - ராதா
சத்தியராஜ் நடித்த
முதல்மரியாதை
(ரீல்)
காட்சி: 10-30, 2-30
(59609)

# மரண அறிவித்தல்கள்

## அப்பாக்குட்டி மாசிலாமணி

பழம்றோட் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதி, முடமாவடியை வதிவிடமாகக் கொண்டவரும், தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய அப்பாக்குட்டி மாசிலாமணி (முன்னாள் கணக்காளர் R. V. D B, அம்பாறை) 01—10—98 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி அப்பாக்குட்டி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை பார்வதிப்பிள்ளையின் மூத்த மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ரஞ்சித் (U.K.), திருமதி பிருந்தா உருத்திரா (U K.), திருமதி சுகுணா பரமகுரு (U K.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி சகுந்தரம் நாகலிங்கம், திருமதி பொன்னையா தெய்வானைப்பிள்ளை, திருமதி சிவபாக்கியம் சோமசுந்தரம், திருமதி தேவசிகாமணி கனகரட்ணம், காலஞ்சென்ற சிவலோகநாதன் (C T.B.) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி லோகேஸ்வரி விநாயகமூர்த்தி, திருமதி சொர்ணேஸ்வரி சண்முகராஜா, பாலச்சந்திரன், பாலசிங்கம் (M B சுவாம் பிள்ளை & Co Colombo), திருமதி சற்குணேஸ்வரி ரூபசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03—10—98 இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
ச. குணேந்திரன்
(பெறாமகன்)

400, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(59590)

## சசி கிருஷ்ணமூர்த்தி

(B A பேராதனை)
(செயலாளர், பனை அபிவிருத்திச்சபை)

பனை அபிவிருத்திச் சபையில் நீண்ட காலமாக செயலாளராகக் கடமையாற்றியவரும், கட்டைடப்பிராயைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 9, மருதடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவருமான சசி, போஸ் என அன்புடன் அழைக்கப்படும் சின்னப்பு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 29 – 09 – 98 இல் ஏற்பட்ட விமான விபத்தில் அகால மரணம் அடைந்து விட்டார்.

அன்னார் நீலாம்பிகையின் அன்புக் கணவரும், நீலகி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சேரன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), சங்கரி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்

தகவல்:
தலைவர்,
பனை அபிவிருத்திச்சபை.

(சி–5049)

## குமாரு ஸ்ரீதரன்

ஊரெழு கிழக்கைச்சேர்ந்த குமாரு ஸ்ரீதரன் அவர்கள் 29-9-98 இல் ஜேர்மனியில் காலமானார். அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று 3-10-98 ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. விக்னேஸ்வரன்
(சகோதரன்),
யா. பல. நோ. கூ. சங்கம்.

ஊரெழு,
சுன்னாகம்.

(சி/5047)

## திருமதி சிவசம்பு கனகம்மா

(காரைநகர்)
(உரிமையாளர், M.S.T. றேடஸ், ஸ்ரீ முருகன் அரிசி ஆலை, கிளிநொச்சி)

காரைநகரைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும், தற்போது 32, இராஜசிங்க வீதி, வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய சிவசம்பு கனகம்மா 02-10-98 இல் கொழும்பில் காலமானார்.

இவர் சிவசம்புவின் அன்பு மனைவியும் தருமகுலசிங்கம், ஜெகதீஸ்வரி, புஸ்பராணி (ஆசிரியர், யாழ். கன்னியர் மடம் ம. வி.), யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பூபாலரட்ணத்தின் பாசமிகு சிறிய தாயாரும் ஞானசேகரம், சோமசுந்தரம், செல்லம்மா, கனகசபை ஆகியோரின் சகோதரியும் கமலநாதன் (திலகா ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்), திருஞானசம்பந்தன் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி), ஜெயலட்சுமி, நந்தினி, பத்மஜோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 4-10-98 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. திருஞானசம்பந்தன்
(மருமகன்)

393/21, கோயில் வீதி,
நல்லூர்.

(59611)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சைவமும் தமிழும் செய் தவப்பயனால் வந்துதித்த

# அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

### கலாநிதியாகக் கௌரவம் பெறுவதை வாழ்த்தி வணங்குகின்றோம்

### தெய்வத் தொண்டிலும் மக்கள் தொண்டிலும் ஒப்பாரின்றி மிளிரும் அன்னை நீடு வாழி!!

## சிகரமாய் நிற்கும் சிவத்தமிழ்ச் செல்வி!

சுற்றமும் பற்றும் சொந்தமும் பந்த
பாசமும் துறந்துனைத் துர்க்கை
நற்பணிக் கென்றே அர்ப்பணம் செய்தாய்;
நாடெலாம் உன்னை நன் கறியும்!
சொற்பொழி வாளர் பலரிருந்தாலும்
தொண்டர்க்கு நாயகமாக
நிற்பவள் நீயே, நெடிது நாள் வாழ்ந்து
நிமிர்த்துக எமையெலாம் அன்னாய்!

அகதிகட் குதவி, பசித்தவர்க் கன்னம்,
ஆதர வற்றவர்க் கறங்கள்,
மகளிருக் கில்லம், கலைகளுக் கூக்கம்,
வறியவர்க் கீகையென் றெல்லாம்
புகழினை நாடா தடக்கமாய் நீசெய்
புண்ணிய மாயின கண்டோம்!
சிகரமாய் எழுந்திம் மண்ணிலே நிற்கும்
சிவத்தமிழ்ச் செல்வியே, வாழி!

பல்கலைக் கழகம் நின்பெரும் பணியைக்
கணித்தொரு கலாநிதிப் பட்டம்
நல்குமிந் நாளே தமிழரெல் லோரும்
நயந்திடும் நல்லநாள்! நாங்கள்
செல்நெறி இதுவென் றுதாரணத் தாலே
சுட்டிய சிவத்தமிழ்ச் செல்வீ!
வெல்க நீ எடுக்கும் முயற்சிகள்! எல்லா
மேன்மையும் எய்துக அன்னாய்!

- கவிஞர் சோ. பத்மநாதன்

எங்கள் போஷகர் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியை கௌரவிக்கும் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கும் பேராசிரியப் பெருமக்களுக்கும் அறிஞர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்,
**துர்க்காபுரம், தெல்லிப்பழை.**

---

## 65 ஆவது பிறந்தநாள் நினைவு



### Dr. ஆ. இராசநாயகம்

தோற்றம் 03 — 10 — 1933 மறைவு 19 — 04 — 1996

மண்ணில் நின்று மறைந்தாலும் எங்கள்
மனதைவிட்டு மறைவதில்லை!

பாசமிகு குடும்பத்தினர்.

பானாவெட்டி,
தொல்புரம்.

(சி/5036)

---

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். கோண்டாவில் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் கலைவாணி வி. கவை எதிர்த்து சென். அன்ரனீஸ் வி. க. மோதவுள்ளது.

(ஐ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 3

அராலி வடக்கு சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சில்வர் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் கழக மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 4-15 மணிக்கு நாவாந்துறை சென். நீக்கிலஸ் வி. க. "பி" அணி எதிர் அராலி ஏ. எல். வி. க. 'A' அணி.

★ பிற்பகல் 5 மணிக்கு அராலி திருமகள் வி. க. அணி எதிர் துணவி சென். ஸ்ரார்ஸ் வி. க. அணி.

(ஐ-4)

---

## வீடுசேத விவரம் சேகரிப்பு

வலி.மேற்கு, ஒக். 3

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வீடுகள் இல்லாத குடும்பங்களின் விபரம் பகுதியாக சேதமடைந்த மண்வீடு, கல்வீடுகளின் விபரங்கள், முழுமையாகச் சேதமடைந்த மண்வீடு, கல்வீடுகளின் விவரங்கள் அவ்வப் பகுதி கிராம உத்தியோகத்தர்களினால் திரட்டப்படுகின்றன.

மேற்படி விவரங்களை ஜீ. ரீ. சற் நிறுவனம் திரட்டித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

(ஐ-175)

---

★ 56 விதமான ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிக்கிறோம்.
★ I. S. O. 9002 சர்வதேச சான்றிதழ் கிடைத்துள்ளது.
★ உங்கள் பிரதேசத்திற்கு எமது விற்பனை வானை அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.
★ உங்கள் வர்த்தக நிலையத்திற்குத் தேவையான ஆயுர்வேத மருந்துகளைப் புறக்கோட்டையிலுள்ள எமது நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சித்தாலேப H.
ஹெட்டிகொ. குரூப்

**ஹெட்டிகொட குறூப்**
33/3, ஸ்ரீ தர்மாராம வீதி,
ரத்மலான.

தொலைபேசி: 736910
பக்ஸ்: 735465

(சி/4898)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### சீனியர் தியாகராசா

(எஸ். ரீ. ஆர். பென்ஸி ஹவுஸ் உரிமையாளர்)

மண்ணின் மடியில் 1940 - 06 - 12 : இறைவன் அடியில் 1998 - 09 - 03

எங்கள் அன்புத் தெய்வமே!
பாசமிகுந்த அப்பாவே!
பண்பின் உறைவிடமே!
நாம் இருக்க நீர் எங்கு சென்றீர்கள்?
ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு
ஆனாலும் அப்பா என்று யாரை நாமழைப்போம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக நல்லூர் புனிதஆசீர்வாதப்பர் ஆலயத்தில் 03 – 10 - 1998 சனிக்கிழமை காலை 7. 15 மணிக்கு திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உங்கள் அனைவரையும் பூசைப்பலியிற் பங்குபற்றி எம் இல்லத்திற்கும் வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் பிரிவை மறவாத
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்.

46/11, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(59591)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய கோழிப் பண்ணையாளருக்கு

# ஐ.நா. அபிவிருத்தி திட்டம் ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். மாவட்டத்திலுள்ள சிறிய நடுத்தர அளவிலான கோழி வளர்ப்புப் பண்ணையாளர்களை ஆதரித்து அவர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் ஒரு முன்னோடித்திட்டத்தினை ஐ நா அ. நி. திட்டம் ஆரம்பித்துள்ளது. இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள 60 முட்டைகளை அடைவைத்துக் குஞ்சு பொரிக்கக்கூடிய பற்றறி உதவியுடன் இயங்கும் குஞ்சு பொரிக்கும் இயந்திரங்களை பாவிப்பதே இத்திட்டமாகும். சிறந்த பலனை அளிக்கக்கூடிய நடைமுறை விதிகளை அறிவதற்கான முயற்சியில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்கள் ஐவர் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மேற்படி பண்ணையாளர்களுக்கு தலா 2 பொரிக்கும் கருவிகள், 2 பற்றறிகள், 1 பற்றறி மின் ஊக்குக் கருவி போன்றவை வழங்கப்பட்டுள்ளன. இரண்டு மூன்று தடவைகள் பொரிக்கும் அனுபவம் கிடைத்தபின் 25 பண்ணையாளர்களைக்கொண்ட குழுவுக்கு பயிற்சி அளிக்கும் முகமாக ஓர் ஆரம்ப வேலைப்பட்டறை நடத்தப்படும். பயிற்சிபெறும் பண்ணையாளர்களுக்கு கால்நடை வளர்ப்போர் சங்கங்கள் ஊடாககடன் அடிப்படையில் பொரிக்கும் கருவிகள் வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் வீடுகளில் சாதாரண முறையில் கோழிவளர்ப்பில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு தேவைப்படும் உள்ளூர், திருந்திய இன, ஒருநாள் கோழிக்குஞ்சுகளை கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் செயற்படவுள்ளது. (ஐ)

## தேசிய அ. அட்டைக்கான படிவங்கள் தட்டுப்பாடு

வலி. மேற்கு, ஒக். 3

முதல் தடவையாக தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிப்பதற்குரிய விண்ணப்பப்படிவம் 'ஆ' விற்கு யாழ். மாவட்டத்தில் பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது.

யாழ். மாவட்டத்தில் பதினாறு வயது பூர்த்தியானதும் தேசிய அடையாள அட்டைக்கு முதல் தடவையாக விண்ணப்பிப்பதற்கு செல்கின்ற விண்ணப்பதாரிகளிடம் கிராம உத்தியோகத்தர்கள் இதற்குரிய விண்ணப்பப்படிவங்கள் முடிவடைந்துவிட்டதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த விண்ணப்பப்படிவங்கள் யாழ். செயலகத்திலும் இல்லையெனத் தெரிய வருகின்றது. வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள பெரும்பாலான கிராமஉத்தியோகத்தர்கள் இந்த விண்ணப்பப்படிவங்கள் இல்லாமையினால் பல விண்ணப்பதாரிகளை திருப்பியனுப்புவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. (ஐ-175)


ANNUAL GENERAL MEETING
OF THE
OLD GIRLS' ASSOCIATION
**VEMBADI GIRLS' HIGH SCHOOL**

The Annual General Meeting of the Old Girls' Association of Vembadi Girls' High School will be held on the 5th October 1998 in the School Hall at 10. a. m.

A fellowship lunch will follow thereafter. All the Old Girls are kindly requested to participate in this function.


Lunch tickets will be available at the School entrance.

Secretary,
Old Girls' Association,
VEMBADI GIRLS' HIGH SCHOOL.

1998 - 09 - 29

(C/5033)


## நெஞ்சகலா ஓராண்டு நினைவலைகள்



மலர்வு 25 — 05 — 1929

உதிர்வு 14 — 10 — 1997

அமரர்

**கந்தையா சிவராசா**

[ வெளிச்ச வீட்டடி — கே. கே. எஸ். ]

( இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர், சுகாதாரத் திணைக்களம், தெல்லிப்பழை. )

திதி: 03–10–1998

காலத்தின் வேகமென்ன ஒலி ஒளி வேகமா?
ஓராண்டு வந்ததுவா? நம்ப முடியவில்லை
ஓராண்டு ஒரு கணமா? எமக்குப் புரியவில்லை
நெஞ்சு வெடிக்கிறது நேற்றுப்போல் இருக்கிறது
அன்பூட்டி அறிவென்னும் அமுதூட்டி அரவணைத்து
வையகத்தில் வாழ்வாங்கு வாழவைத்த அப்பாவே!
பூத்துக் குலுங்கும் உங்கள் குலக்கொடிகள்
எங்கெங்கு படர்ந்தாலும் அங்கங்கு பாசமாய்
நினைந்து நெக்குருகி நினைவதனைக் கொண்டாடி
சாந்தி சாந்தியென்று சாந்திக்காய் சரணடைந்து
பகவானின் பாதத்தைப் பற்றியே போற்றுகின்றோம்.
பற்றற்றான் பாதத்தில் பதமுக்தி பெற்றிடுக!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(C/5035)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 3

வறுத்தலைவிளானைச் சேர்ந்தகவிஞர்தெ. கோபால்சிங்கம் எழுதிய 'பக்திரசப் பிரார்த்தனைப் பாமாலை' என்னும் நூல்வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

மகாவித்துவான், இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில் ஆசியுரையை கந்தர் மடம் ஸ்ரீசிவகுருநாதகுரு பீடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள் நிகழ்த்துவார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவ. மகாலிங்கம் வெளியீட்டுரையையும், பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவார்கள்.

முதற்பிரதியை ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதியார் கலாபூஷணம்ஆ. ஜீவரட்ணம் பெற்றுக்கொள்வார். (ஐ-7)


**D. M. I.**
STANLEY ROAD,
JAFFNA.
போட்டிப் பரீட்சைக்கான
பொது உளச்சார்பு
பொது அறிவு
வகுப்புக்கள் ஆரம்பம்
1998 - 10 - 08
வியாழன்
மதியம் 12-30 மணி
ஆசிரியர்
தவசேகர்
(இ-5050)


## அதிரடி அரங்கு

தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்கள் சிங்கள அரசுகளினால்திட்டமிட்ட முறையில் பறிக்கப்பட்டு அபகரிக்கப்படுகின்றன என்ற தமிழர்களின் மனக்கொதிப்பும் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினைப் போர் இந்தளவுக்கு வன்முறையாக வெடிப்பதற்கான காரணங்களுள் ஒன்று. ஆனால் நிலைமை திருந்துவதாக இல்லை.

வன்னிப் பிரதேசத்தில் மதவாச்சி — மன்னார் வீதியும், வவுனியா — மன்னார் வீதியும் சந்திக்கும் பறையனாலங்குளம் படையினரால் கைப்பற்றப்பட்டதும் ''சப்புமல்புர'' என்ற சிங்களப் பெயராகியது தெரிந்ததே.

இதேபோன்று குடாநாட்டில் இளவாலையில் இருந்து பண்டத்தரிப்பு நோக்கி வரும் வீதிக்கு இப்போது ''ஜெயக்கொடி மாவத்தை'' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது தொடர்பான பெயர்ப் பலகை இளவாலைச் சந்தியில் இராணுவ சோதனை நிலையத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்தியில் உள்ள அரசமரத்துக்குக் கீழ் ஒருபுறம் இந்துக்கோயில் ஒன்றுநீண்டகாலமாக உள்ளது. மறுபுறத்தில் பருத்தித்துறை வீதியைப் பார்த்தபடி பௌத்த ஆலயம் ஒன்று– அண்மைக் காலத்தில்– திடீரென எழும்பியுள்ளது.

இத்தகைய சம்பவங்கள் - இப்போதைய நிலையில் - தமிழர் மத்தியில் மனக்கசப்பையே ஏற்படுத்தும். இவை சமாதானம் ஏற்பட வழிவகுக்கமாட்டா.

முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்த - யாழ் நாக விஹாரை போன்ற - பௌத்த ஆலயங்களை மட்டுமே புதுப்பிக்க வேண்டும். புதிய பௌத்த ஆலயங்களை குடா நாட்டில் கட்டி வீண் சர்ச்சைகளை ஏற்படுத்தக் கூடாது என்பது குடாநாட்டின் இராணுவத் தலைமைப்பீடத்தின் எண்ணமாகத்தெரிகின்றது. ஆனால் சில கீழ் மட்டங்கள் இரத்தத்தில் ஊறிய தமது பண்பை விடுவதாக இல்லை என்று நிற்கின்றனவாம்.

★ ★ ★

குடாநாட்டில் அண்மைக் காலத்தில் காணாமற்போனோரின் உறவினர்கள் தற்போது படும்பாடு சொல்லி மாளாது. நெருங்கியவரை இழந்த துயர் ஒருபுறம். மறுபுறத்தில் அது தொடர்பான விசாரணையில் சாட்சியம், சத்தியக்கடதாசி தயாரித்தல் என்று அலைந்து, அலைந்து களைத்துப்போய் விட்டார்கள் அவர்கள்.

பாதுகாப்புஅமைச்சின் விசாரணைக்குழு, இராணுவப் பொலீஸாரின் விசாரணைக்குழு என்று பலகுழுக்களின் முன் பல இடங்களில் சாட்சியமளித்தாகி விட்டது. இப்போது மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை நடத்த வரவிருக்கின்றது.

அத்தோடு இப்போது புதிதாக மற்றொரு குழு வரவிருப்பதாகத் தகவல் வந்துள்ளது.

காணாமற்போனோர் குறித்து விசாரிக்க ஜனாதிபதி அண்மையில் நியமித்த– சட்டத்தரணி (திருமதி) மனோகரி சரத் முத்தெட்டுவேகம தலைமையிலான - ஜனாதிபதி ஆணைக்குழுவே அது.

அடுத்த மாதம் 12 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதி வரை தன்னுடைய விசாரணைகளை யாழ். செயலகத்தில் நடத்துவதற்கு அக்குழு உத்தேசித்துள்ளது. அனேகமாக தனிப்பட்ட நபர்கள் அல்லாமல் - மனித உரிமைகள் தொடர்பான பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் - இந்த விசாரணையில் சாட்சியமளிப்பர் எனத் தெரிகின்றது.

விசாரணைகளும், சாட்சியங்களும் மாதங்கள், ஆண்டுகளாக நீடிக்கின்றனவே தவிர உருப்படியான விளைவுகள் ஏதும் கிடைத்ததாகத் தெரியவில்லை. இந்த இழுபறி இன்னும் எவ்வளவு நாள்களுக்கு நீடிக்குமோ......?

★ ★ ★

கடந்த சில வாரங்களாக குடாநாட்டில் இடம்பெற்று வரும் அசம்பாவிதங்களை அடுத்து— ஏற்கனவே யாழ்ப்பாணத்துக்கு சேவையாற்றுவதற்காக இங்கு வந்திருந்த— தென்பகுதி டாக்டர்கள் திரும்பிச் செல்ல அவசரப்படுவதாகத் தெரிகின்றது.

பாதுகாப்புக் கருதி தங்களுக்கு உடன் தென்பகுதிக்கு இடமாற்றம் வழங்கும் படியும், தென்பகுதிக்குத் திரும்ப விசேட பயண ஒழுங்குகள் தமக்குச் செய்து தரும்படியும் அவர்கள் சம்பந்தப்பட்டோரைக் கோரியிருக்கின்றனர்.

★ ★ ★

நாளை யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா. மற்றொரு தொகுதி பட்டதாரிகள் சமூகத்துக்குள் விடப்படுகின்றார்கள். அவர்களைப் பாராட்டி வரவேற்பது பொருத்தமானது. அதேசமயம் பட்டதாரிப் பட்டம் பெறுவதற்காக மற்றொரு தொகுதியினர் - புதிய மாணவர்களாக - நுழைகின்றார்கள்.

புதிய மாணவர் வரவின் போது நடக்கின்ற 'ராக்கிங்' என்ற தப்புத் தாளங்கள் இப்போதே அங்கே இங்கே என்று அரங்கேறுவதாகத் தகவல். முக்கியமாக 'றூம் ராக்கிங்' (அறையில் நடக்கும் பகிடிவதை) ஆங்காங்கே தொடங்கியிருப்பதாகத் தகவல். பல்கலைக்கழக மாணவர் மன்றங்கள் விசேட கவனம் எடுக்க வேண்டிய விடயம் இது. அவர்களுக்கு இந்த விவகாரம் சமர்ப்பணம்.

— மின்னல்

## தினமும் மின் வசதி

சுன்னாகம், ஒக். 3

சுன்னாகம், மருதனார் மடம் பகுதிகளுக்கு தினசரி மின்சாரம் வழங்கப்படுகிறது. இதுவரை காலமும் ஒன்றுவிட்ட ஒரு தினத்துக்கே மின்சாரம் வழங்கப்பட்டது.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலுள்ள மின்பிறப்பாக்கி மூலம் வழங்கப்படும் இம்மின்சாரம் உரும்பிராய்ப் பகுதிக்கும் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உரும்பிராயில் உள்ள மின்பிறப்பாக்கி பழுதடைந்து உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிச் சமர்

# படையினருக்கு பேரிழப்பு!

**கடந்த திங்கள் அதிகாலை கிளிநொச்சி மற்றும பரந்தன் இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் தொடர்மான தகவல்களை கொழும்பிலிருந்து வெளியாகும "ராவய" சிங்கள வார இதழ் வெளியிட்டுள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம.**

முதலில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சி மற்றும் பரந்தன் முன்னணிக் காவலரண்கள் மீதும் பின்னர் கிளிநொச்சி மற்றும் பரந்தவில் அமைந்திருந்த இராணுவ முகாம்கள் மீதும் விடுதலைப் புலிகள் கடந்த திங்கள் அதிகாலை மேற்கொண்ட திடீர்த்தாக்குதல் காரணமாக படையினர் தரப்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

கடந்த திங்கள் அதிகாலை ஆரம்பமாகித் தொடர்ந்து 48 மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து கிளிநொச்சி இராணுவ முகாமை விடுதலைபபுலிகள் கைப்பற்றினர். மாங்குளம் நகரைக் கைப்பற்ற ஆரம்பிக்கவிருந்த படையினரின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு தங்கள் முழு சக்தியையும் பயன்படுத்துவதாகப் பாசாங்கு காட்டிவிட்டு விடுதலைப் புலிகள் கிளிநொச்சி மற்றும் பரந்தன் பகுதிகள் மீது ஒரே வேளையில் இந்தத் திடீர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். பரந்தன் இராணுவ முகாமைக் கைப்பற்றுவதே புலிகளின் நோக்கம் எனக் கருதிய இராணுவம் பரந்தனைப் பாதுகாக்கத் தனது முழு சக்தியையும் பயன்படுத்தி போரிட்ட போது விடுதலைப் புலிகள் தங்களது முழு ஆற்றலையும் பயன்படுத்தி கிளிநொச்சி இராணுவமுகாம் மீது தாக்குதலை மேற்கொண்டு கிளிநொச்சியிலிருந்த 541 ஆவது பிரிகேட் தலைமையகத்தைக் கைப்பற்றியுள்ளனர். கிளிநொச்சி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்தபோது காயமடைந்த படைவீரர்களால் அந்த முகாம் நிரம்பிவழிந்ததாக உத்தியோகபற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது மேற்கொளளப்பட்ட பாரிய தாக்குதலின் பின்னர் இது வரை மேற்கொள்ளப்பட்ட மிகப் பாரிய தாக்குதல் இது எனத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவ முகாமிலிருந்த அனைத்து ஆயுதங்களும், உபகரணங்களும் விடுதலைப் புலிகளின் கைகளுக்கு எட்டியுள்ளன எனவும் அவற்றுள் 2 யுத்தடாங்கிகள், 3 ஆட்டிலறிகள் பல்வேறு ரகங்களைச் சேர்ந்த 70 வாகனங்கள் ஆகியனவும் அடங்குகின்றன எனத் தெரியவருகிறது.

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலால் ஏற்பட்ட இழப்பு 35 கோடி ரூபா பெறுமதியுடையது எனவும் ஆனால் கிளிநொச்சியில் ஏற்பட்ட இழப்பு அதன் இரண்டு மடங்காக இருக்கும் எனவும் நம்பப்படுகிறது.

விடுதலைப்புலிகள் அமைப்புச் சார்பில் கடந்த மாதம் 30 ஆம் திகதி படையினரின் 600 சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளித்துள்ளனர். அந்த உடல்களைக் கையேற்பதா? இல்லையா என்பது இராணுவ உயரதிகாரிகளிடையே கருத்துவேறுபாடு நிலவியதாகவும் ஆனால் மேஜர் ஜெனரல் அசோகா டி சில்வா அந்த உடல்களைப் பின்னர் பொறுப்பேற்றார் எனவும் தெரியவருகிறது. மேலும்சில உடல்கள் கடந்த முதலாம் திகதி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிப்பதாக இருந்தது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையின் போது இடம் பெற்ற மொத்த இழப்புக்கள் குறித்து இதுவரை கண்டறியப்படவில்லை. இராணுவ நடவடிக்கையின் போது ஏற்படும் உயிரிழப்பிற்கு சம்பந்தப்பட்ட சிப்பாய்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒருலட்சம் ரூபா நட்ட ஈடாக வழங்கப்படும். ஆனால் நடவடிக்கையின் போது இறந்த சிப்பாயின் சடலம் கிடைத்தால் மாத்திரமே அந்தக் குடும்பத்தினர் குறித்த நட்ட ஈட்டிற்கு உரித்துடையவராவர். காணாமற் போனவர்கள் எனக் கருதப்படுபவர்கள் தொடர்பாக இந்த நட்டஈடு வழங்கப்படுவதில்லை. அதிகமான உடல்கள் அடையாளம் காணப்பட முடியாத நிலையில் இருப்பதால் அவற்றை எரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதலின் போது காயமடைந்தவர்களால் சில மருத்துவமனைகள் நிரம்பி வழிந்தாலும் அங்கு அனுமதிக்கப்பட்ட காயமடைந்தவர்கள் தொடர்பான எண்ணிக்கையை வெளியிட வேண்டாம் என சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகள் வேறு வார்ட்டுகளுக்கு மாற்றப்பட்டு அங்கு கடுமையான காயங்களுக்குட்பட்ட படையினர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 294 ஆகும். ஜெயவர்த்தனபுர மருத்துவமனையில் 5, 8, 10, 11, 14, 16 ஆம் இலக்க வார்ட்டுகளில் காயமடைந்துள்ள சுமார் 150 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு தெற்கு மருத்துவமனையில் (களுபோவில) காயமடைந்த 250 பேரும் அனுராதபுர மருத்துவமனையில் மேலும் 500 பேர் வரையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதை விட கொழும்பு வடக்கு மருத்துவமனை (றாகம) மற்றும் நீர்கொழும்பு மருத்துவமனைகளுக்கும் காயமடைந்தவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலுக்கு 'ஓயாத அலைகள் – 2' எனப் பெயரிட்டுள்ளனர். முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதலை 'ஓயாத அலைகள் –1' என அவர்கள் அழைத்தனர்.

இதற்கிடையில் 'வெற்றி உறுதி' நடவடிக்கையை படையினர் கடந்த மாதம் 30 ஆம் திகதி காலை 9.23 மணிக்கு மாங்குளம் நகரைக் கைப்பற்றியுள்ளனர்.

"150 நாள்களாக உட்புக முடியாதிருந்த மாங்குளம் நகரை ஒரு சில மணித்தியாலங்களுக்குள் படையினர் கைப்பற்றியுள்ளனர். விடுதலைப் புலிகள் தந்திரோபாயமாக மாங்குளம் நகரைக் கைவிட்டு கிளிநொச்சியை மீண்டும் கைப்பற்றுவதில் கவனம் செலுத்தியதாலேயேஇந்த வெற்றி படையினருக்குக் கிட்டியது என இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எஞ்சியிருந்த சுமார் 24 கிலோமீற்றர் தூர தரைவழிப் பாதையை மீட்கும் நோக்கிலேயே "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட இருந்தது. ஆனால் தற்போது கிளிநொச்சியை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதை அடுத்து இனிமேல் விடுவிக்கப்பட வேண்டிய தரைவழிப்பாதையின் தூரம் 35 கிலோமீற்றராக அதிகரித்துள்ளது என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

9 படையினர் பலியானதாகவும் 40 புலிகள் கொல்லப்பட்டனர் எனவும் நடவடிக்கைத் தலைமையகம் முதலில் தெரிவித்தது. 43 படையினர் பலியானதாகவும் 194 புலிகள் கொல்லப்பட்டதாவுகம் அடுத்த நாள் தெரிவித்தது. அதன் பின்னர் புலிகள் தரப்பில் 377 பேரும் படையினர் தரப்பில் 200 பேரும் பலியானதாக அறிவிக்கப்பட்டது. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளைத் தெரிவிக்கும் பத்திரிகையாளர்களின் மகாநாட்டில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட சடலங்களில் 400 சடலங்கள் அடையாளம்காணப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இம்மாதம் முதலாம் திகதி விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்ட படையினரின் மேலும் 10 சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் வவுனியாவில் கையளித்துள்ளனர். படையினரால் கைப்பற்றப்பட்ட 10 விடுதலைப் புலிகளின் சடலங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன. ★

**தமிழில்: கஜனி**

இதற்கிடையில்கிளிநொச்சியைப் பாதுகாக்க சுமார் ஆயிரத்து 700 படையினர் கடமையாற்றினர் எனவும் இவர்களில் சுமார் 500 படையினர் மட்டுமே முகாம் திரும்பியுள்ளனர் எனவும் இதன்படி சுமார் 500 படையினர் நடவடிக்கையின் போது காணாமற் போயுள்ளனர் எனவும் (Missing i Action) தெரிய வருவதாக கொழும்பில் இருந்து வெளிவரும் "யுக்திய" சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது. ★

## காணாமற் போனோர் பற்றி

# ஜனாதிபதி ஆணைக்குழு அடுத்த மாதம் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக். 3

காணாமற் போனோர் குறித்து ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு அடுத்த மாதம் 12 ஆம் திகதி முதல் ஆறு நாள்களுக்கு யாழ். செயலகத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்க விரும்பும் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை இயக்கங்கள் பிரஸ்தாப ஆணைக்குழுவுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு நேர ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்ளுமாறு யாழ். செயலகம் கேட்டுள்ளது.

வடக்குக்கிழக்கு மாகாணத்தில் விசாரணை நடத்திய முன்னைய ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்து அந்த ஆணைக்குழுவினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாத முறைப்பாடுகளை மாத்திரமே விசாரணைக்கு எடுத்துக்கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க விரும்புகின்ற அமைப்புக்களை நேரடியாக இவ்வாணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறும்—

அவர்களுடன் தொடர்பு கொண்டமை பற்றி தமக்கு அறியத்தருமாறும் — யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

தற்போதைய ஆணைக்குழுவின் விலாசம் "சில தனிநபர்கள் தன்விச்சை அல்லாதவாறு அகற்றப்பட்டமை, காணாமற் போனமை சம்பந்தமாக விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு", இலங்கை மன்றம், இல.27, சுதந்திர அவெனியு, கொழும்பு 7 என்பதாகும் என்றும் அதன் தொலைபேசி / பக்ஸ் இலக்கம் 699483 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ–100)

## சுன்னாகம் கடைகள் திறந்திருக்கும்

சுன்னாகம், ஒக், 3

சுன்னாகம் வர்த்தகர் சங்கப் பரப்பிலுள்ள வர்த்தக நிலையங்கள் இன்றுமுதல் 19ஆந் திகதி வரை சனி, ஞாயிறு தினங்களிலும் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி தினத்தை முன்விட்டே இவ்வேற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-27)

## பாவனைக்கு உதவாத பழவகை அழிப்பு

சட்டவிரோதமான முறையில் விற்பனைக்கெனத் தயாரிக்கப்பட்டு, சுகாதாரப் பரிசோதகரினால் கைப்பற்றப்பட்ட பழவகை, உடல் நலத்துக்குக்கேடு விளைவிக்கும் இரசாயனங்கள், தெளிகருவி முதலியன நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் சுன்னாகம் நவீன சந்தைப் பகுதியில் பொதுமக்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

சுன்னாகம் பொலீஸாரின் பாதுகாப்பிலிருந்த இப்பொருள்கள்வலி.தெற்குப்பிரதேசச் சபைத் தலைவர், பொலீஸார், பொதுமக்கள் முன்னிலையில் காட்சிக்கு வைக்கப்பட்டு, பின்னர் அழிக்கப்பட்டன. கடந்த வெள்ளியன்று பொருள்கள் சுகாதாரப் பரிசோதகர் குழுவினரால் கைப்பற்றப்பட்டமை தெரிந்ததே. (ஐ–27)

## முச்சக்கர வண்டி

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்துக்கு மூன்று முச்சக்கரவண்டிகள் சமூக சேவைப் பகுதியினரால் வழங்கப்பட்டுள்ளன. இந்த மூன்று முச்சக்கர வண்டிகளும் [illegible] முற்ற மூன்று பேருக்கு மிக விரைவில் வழங்கப்படவுள்ளன. (ஐ-175)

# வலி.தெற்கில் 60 முதியோர் கௌரவிக்கப்படுவர்

சுன்னாகம், ஒக். 3

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் 60 முதியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் 8 ஆம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் முதியோர் தினவிழாவில் வைத்தே இப்பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 60 முதியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை வலி. தெற்கு பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் வ. செல்வம் மேற்கொண்டுள்ளார்.

அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் முதியோர் தின விழாவில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் ஏ. நல்லதம்பி பிரதம விருந்தினராகவும், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் முதியோருக்கு உடுபுடைவைகள் அடங்கிய பொதிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

முதியோர் தினத்தையொட்டி உடுவில் பிரதேச பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசில்களும் இவ்விழாவில் வைத்து வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ 27)

HAIR DRESSING AND BEAUTY CULTURE
FREE SERVICE
( Only on Saturday 03 – 10 – 1998 )
From 10. 30 a. m. Till 5. 30 p. m.
ROOBALAYA
BEAUTY PARLOUR
No. 40, Kadaichamy Lane,
Neeraviyady, Jaffna.
(59604)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வான்கோழி, சில்க்கி, கினிக்கோழி, அல்சேசியன் நாய் (ஜேர்மன் செப்பேட்) 3½ மாதம் விற்பனைக்குண்டு. தொடர்பு: சீ, ஞான சேகரம், ஆனைக்கோட்டை, சாவல்கட்டு.
(59575)

ஒரு பெரிய Deep Freezer விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. தனபால சிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு). 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி நல்லூர்.
(59520)

எம்மிடம் புதிய Birala-Yamaha L.G. 2800 Self-Start, 96 மொடல், ஜெனறேற்றரும் அண்மையில் காஸ் ஏற்றப்பட்ட சிசில்-80 மொடல் பிறிச்சும் விற்பனைக்குண்டு. தொடர்பு: அம்பாள் பார்மசி, நவீன சந்தை, சாவகச்சேரி.
(சி/5016)

நீர்வேலி தெற்கு 6-வது மைல் கல்லுக்கு அண்மையில் 20 பரப்பு தேங்காய் பிடுங்கிக் கொண்டிருக்கும் தென்னம் தோட்டம் விற்பனைக்குண்டு. தொடர்பு: அம்பாள் பார்மசி, நவீன சந்தை, சாவகச்சேரி. (சி/5017)

Prima Hyline Brown பேட்டுக் குஞ்சுகள், Broiler குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 07-10-98 மாலை பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்யவும் Nallur Farm Centre (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி நல்லூர். (59521)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (59571)

புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். ஒருகிலோ ரூபா 150 மட்டுமே. 40/6, புகையிரத கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம் (செல்வ நாக பூஷணி அம்மன் கோயில் அருகில்). (59553)

## வீடு விற்பனைக்கு

ஆவரங்கால் சிவன் ஒழுங்கையில் உள்ள வசதியான வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும். திருமதி கு. மீனலோசனி(தேவி), சிவன்ஒழுங்கை, ஆவரங்கால். (59576)

## Bairaha Broilers

இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். ரேஸ்வைரா புறொயிலர் குறைந்த விலையில் கிடைக்கும் 1 Kg 150/- மட்டும். தொடர்பு: லக்கி சேல்ஸ் சென்ரர், மகவடி ஒழுங்கை, பனாவி றோட், திருநெல்வேலி.
(59595)

## தவறிவிட்டது

க. ஜீவகாருண்யம் ஆகிய எனது தேசிய, விசேட, C.T B அடையாள அட்டைகள் (தே. அ. அ. இல. 483600518V) கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும். (59573)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயதுடைய B, Sc. பட்டதாரி ஆசிரியருக்கு குடும்பப் பாங்கான படித்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஆசிரியை எனின் விரும்பத்தக்கது. விரும்புபவர்கள் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். 795, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(59569)

## 23 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 — 08 — 1917

உதிர்வு 03 — 10 — 1975

### திருமதி மேரிகிருபையம்மா இராஜக்கோன்

கண்ணை இமை காப்பது போல் எம்மைக்
காத்த எங்கள் அன்புத் தெய்வம்
விண்ணகம் தான் சென்று இருபத்து மூன்று
ஆண்டுகள் ஆனாலும்
விழுதுகள் நாம் மறப்போமா?
அன்னை செய்த தியாகங்கள்
அத்தனையும் மண்ணில் சுமந்திருப்போம்!

அன்புப் பிள்ளைகள்.

ஏழாலை வடக்கு, ஏழாலை.

38/9, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

(59517)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 29 — 04 — 1979

விண்ணில் 18 — 08 — 1998

செல்வன்

### பவளகாந்தன் விஷ்ணுராஜ்

(வினோ)

(மாணவன்! தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்.)

பாசமிகு எங்கள் செல்வமே!
உனது உருவம் எங்கள் உள்ளத்தை மறைக்குதையா
உனது செயல் திறனின் அசைவுகள் நெஞ்சை
விட்டகலா
எத்தனை கனவுகளுடன் வீதி வழியாக வந்தாயோ!
வாழை மரத் தோட்டமோ வாய்த்த நிழல் மரமோ
அண்ணன் இல்லை யென்று
ஆறாத் துயரில் அழுது புலம்பி ஆறமுன்
எண்ணாமல் அண்ணன் சென்ற வழி நீயும்
சென்றாயோ?
ஆறாது ஆற்ற முடியாது உன் பிரிவு!

உன் பிரிவால் துயருறும்:
பெரியப்பா, பெரியம்மா,
அன்புச் சகோதரங்கள்.
(லலிதா ஜுவல்லறி)

அத்தியடி, யாழ்ப்பாணம். (59593)

## முதலாம் ஆண்டு நினைவுதினம்



முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினதும்
பொதுசன ஐக்கிய முன்னணியினதும்
யாழ். கிளைத் தலைவர்

### அமரர் S. T. தர்மலிங்கம்

(சமாதான நீதிவான்)

(அகாலமரணம்)

மலர்வு 01 — 06 — 1940


உதிர்வு 03 — 10 — 1997

அறிவறிந்த நாள் முதலாய் — எம்மை
ஆசையாய் அணைத்து நின்று —
அன்பு மழை பொழிந்திட்ட எங்கள்
அருமைத் தலைவா!!
எல்லோரையும் தவிக்கவிட்டு அகாலமாய்
போனதெங்கே?
ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் அன்புமுகமும்-
கட்சியில் பற்றுச் செறிந்த தலைமைத்துவமும்
எங்களை விட்டு என்றென்றும் மாறாது
சத்தியமாய் இதனை வழிநடத்துவோம்!
நன்றி.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினதும்
பொதுசன ஐக்கிய முன்னணியினரதும்
நிர்வாகம்.

(59495)

## 15-ம் ஆண்டு நினைவஞ்சலி — 31-ம் நாள் நினைவஞ்சலி





### அமரர் முருகேசு கனகசபை

தோற்றம் 16-03-1917 — மறைவு 10-10-1983

### திருமதி கனகசபை அன்னம்மா

தோற்றம் 06-05-1918 — மறைவு 03-09-1998

எம்மை நலமுடன் வாழவைத்த தெய்வங்களே!
உங்களை என்றும் மறவோம்.

பிள்ளைகள்:
திருமதி இரத்தினசிங்கம் புவனேஸ்வரி (ஜேர்மனி),
திரு. க. சிவனேசராசா (இ. போ. ச),
திருமதி கணேசசுந்தரம் வசந்தரா (கனடா),
திருமதி தம்பிராசா புஸ்பராணி.

தகவல்:
க. சிவனேசராசா (மகன்).
குப்பிளான் தெற்கு, குப்பிளான்.

(59513)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைச் சம்பவங்கள் தொடர்பாக 19 படையினர் தொடர்ந்து காவலில்

யாழ்ப்பாணம், ஒக். 3

பல்வேறு கொலைச் சம்பவங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட 19 இராணுவத்தினரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் நேற்று உத்தரவிட்டார்.

புத்தூர் வாதரவத்தையில் கடந்த வருடம் இரு இளைஞர்கள் கொலை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படையினரான 16 சந்தேகநபர்ளும் நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை இம்மாதம் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பணித்தார்.

படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது மர்மமான முறையில் இறந்த இளைஞர் ஒருவரின் மரணம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இரு இராணுவ அதிகாரிகளும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

யாழ். கார்மேல் வீதியைச் சேர்ந்த அன்ரன் குணசேகரம் என்ற இளைஞரின் மரணம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கப்டன் ரொனி பெத்தலோமியஸ், லெப்டினண்ட் டிக்ஷன் ஆகியோரே அந்த இருவருமாவர்.

இதற்கிடையில் —

சாவகச்சேரியில் கடந்த 22 ஆம் திகதி தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

சாவகச்சேரியில் புளொட் —இராணுவத்தினருக்கிடையில் இடம்பெற்ற மோதலையடுத்து வீட்டிலிருந்த செ. தர்மேஸ் (18 வயது) என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாயையே வழக்கின் மறுதவணை வரை இராணுவப் பாதுகாப்பில் வைத்திருக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-5)

# தங்கத்துரை, மஃறூப் குடும்பங்களுக்கு நிதி

## நஷ்டஈடாக வழங்க முடிவு

கொழும்பு, ஒக். 3

படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே. தங்கத்துரை, எம். மஃறூப் ஆகியோரினதும் மர்மமானமுறையில் இறந்த கொட்பிறே பெர்னன்டோவினதும்குடும்பத்தினருக்கும் தலா பத்து லட்ச ரூபா வீதமும், அவர்களுடன் கொல்லப்பட்ட ஏனையோரின் குடும்பங்களுக்கு தலா ஐந்து லட்ச ரூபா வீதமும் வழங்குவது என நாடாளுமன்ற விவகார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இவ்வாறான கொடுப்பனவுகள் புனர்வாழ்வு அமைச்சினால் மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நந்தா எல்லாவெலவின் குடும்பத்தினருக்கும் நாடாளுமன்ற விவகார அமைச்சே பத்துலட்ச ரூபா நஷ்ட ஈடு வழங்கியிருந்தது. (உ)

# கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 3

'ஈஸ்ட் வெஸ்ற்' மார்க் கட்டிங் பிரைவேட் லிமிட்டெட் ஆதரவில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் 'டோர்கி' வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றின் கடைசி ஆட்டம் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ், வி. க அணியை எதிர்த்து கொக்குவில் ஸ்ரீ ஷி 'ஏ' அணி மோதும்.

இந்தத் தொடரின் கால் இறுதி ஆட்டம் ஒன்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து பற்றீஷியன் அணி மோதும்.

இந்தத்தொடரின் மற்றொரு கால் இறுதி ஆட்டம் நாளை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளுஸ் அணி மோதும்.

வட்டுக்கோட்டை, சுன்னாகத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் வீரர்கள், ரசிகர்கள் செல்ல வசதியாக இலவச பஸ் சேவை இரு தினங்களிலும் காலை 8 மணிக்கு யாழ். கொமேர்ஷல் வங்கிக்கு முன்பாக இருந்து ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

## விமான நிலைய ஊழியர்

# நால்வர் பலாலியில் போதைவஸ்துடன் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 3

பலாலி விமான நிலையத்தில் வைத்து போதைவஸ்து பொருள்களுடன்பொலீஸாரினால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் நான்கு சந்தேக நபர்கள் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவர்களை தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கே. ஏ. நாமல் பிரியந்த பெரேரா (வெலிக்கடை) 70 மில்லிகிராம் ஹெரோயினும், நித்தம்புவவைச் சேர்ந்தவர்களான எம். ஏ. எம். சாகுல் தீன் 20 மில்லிகிராம் ஹெரோயினும், என். எஸ். ஜெயதேவ பெரேரா 150 மில்லிகிராம் ஹெரோயினும், டபிள்யூ. ஏ. என். வசந்த பெரேரா 10 கிராம் கஞ்சாவும் வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டனர்.

இவர்கள் நால்வரும்விமான நிலையத்தில் பணியாற்றிய வகுப்புத் தொழிலாளர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்த யாழ் நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் சந்தேக நபர்களை இம்மாதம் 6 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(உ-5)

# இராணுவ மேஜர் சடலமாக மீட்பு!

மாங்குளம் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் மீது கடந்த மே மாதம் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது காணாமல் போனதாகக் கருதப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

மேஜர் சந்திர குணவர்த்தன என்ற அதிகாரியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். (உ-7)

# தாக்குதல்

திருமலை மாவட்டம்—கிண்ணியாப் பகுதியிலுள்ள பொலீஸ் காவலரண் மீது நேற்று முன்தினம் பிற்கல் விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. (உ-7)

# திருநகரில் வாந்திபேதி!

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணம் திருநகர்ப் பகுதியிலும் வாந்திபேதி அபாயம் தோன்றியுள்ளதாக தெரியவருகிறது.

அப்பகுதியில் இருந்து இந் நோய்க்கு இலக்கான இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருநகர் இராசிங்கம் வீதியைச் சேர்ந்த கிறிஸ்து ராசா பரிமளா [வயது 25] என்பவரே வாந்திபேதியால் பீடிக்கப்பட்டவராவார்.

(உ-15 139)

# உடற்கல்வியியல் கற்கைநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். பல்கலைக்கழகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உடற்கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விரிவுரைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளன.

யாழ். பல்கலைக்கழகம் இந்த ஆண்டு முதல் முறையாக அறிமுகப்படுத்தியுள்ள இந்தக் கற்கைநெறி ஒவ்வோர் ஆண்டும் புதிய மாணவர்களைத் தெரிவு செய்து தொடர்ந்தும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டு இக்கற்கைநெறிக்கு 258 மாணவர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பவற்றின் மூலம் 53 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கற்கைநெறிக்கான வகுப்புகள் கிழமை நாள்களில் தினமும் முழுநேர விரிவுரைகளாக இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடைபெறும்.

(உ-9-6)

# மனனப் போட்டி

சுழிபுரம், ஒக். 3

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான சைவசமய பாடமனனப் போட்டிகள் இன்று காலை பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையிலும் நடைபெறவுள்ளன. (உ-28)

# சிவத்தமிழ்ச் செல்விக்கு கொழும்பில் பாராட்டு

கொழும்பு, ஒக். 3

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலாநிதி பட்டம் பெறுவதையொட்டி நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தினால் கொம்டனித்தெரு ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் விசேட அபிஷேக பூசைகள் நடத்தப்படவுள்ளன.

பூசையின் பின்னர் ஆலயத்தில செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சேவைகளை பாராட்டியும், பட்டம் வழங்கிய யாழ். பல்கலைக்கழகத்துக்கு நன்றி தெரிவித்தும் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். தில்லை நடராஜா தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் உபதலைவர் சுவாமி ஆத்மகனாநந்தஜி, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் ஆர். எஸ். நடராஜா, செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், கம்பவாரிதி இ. ஜெயராஜ், திருமதி வசந்தா வைத்தியநாதன், சைவ முன்னேற்றச் சங்க செயலாளர் எஸ். பாலசுப்பிரமணியம், இந்து மாமன்ற தலைவர் எம். கைலாசபதி ஆகியோர் உரையாற்றுவார்கள்.

இந்த நிகழ்வில் சைவ முன்னேற்றச் சங்க ஆதரவில் நடைபெறும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதுடன் அன்னதானமும் வழங்கப்படும்.

இதேவேளை —

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு கலாநிதி பட்டம் வழங்கப்படுவதையொட்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவையில் [illegible] ஞாயிறு காலை 6.20 மணிக்கு சிறப்பு நிகழ்ச்சி ஒன்று ஒலிபரப்பப்படவுள்ளது. (உ-5)

# சமய சந்நிதியில்

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய ரதோற்சவம் நாளை நடைபெறும். நாளைமறுதினம் தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

(உ-15-139)

★ ★ ★

சுன்னாகம், ஒக். 3

ஆதிமயிலிட்டி காசி பூதராயர் ஆலய சங்காபிஷேகம் இன்று காலை 9 மணிக்கு சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மயிலிட்டி காசிபூதராயர் ஆலய விக்கிரகங்கள் சுன்னாகம் தெற்கு சிவபூதராயர்ஆலயத்தில் கடந்த எட்டு வருடங்களாக வைக்கப்பட்டு [illegible].

(ஐ-27)


யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## விசேட பொதுக் கூட்டம்

இடம்:- தலைமைச் செயலகம்,
119, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:- 11—10—98 ஞாயிற்றுக்கிழமை.

நேரம்:- 10-30 மணி (புதிய நேரம்).

விடயம்:- தற்போதைய நடைமுறை பற்றியது.

மாவட்ட செயலாளர்,
யாழ்.மா.பே.உ.சங்கம்.

119, பிரதானவீதி (புதிய இலக்கம்)
யாழ்ப்பாணம்,
(317, பழைய இலக்கம்) (சி/5056)



## கொம்ரெக் நிறுவனம்

சித்தன்கேணி

மின்சார வெல்டிங், மின்னிணைப்பு,
மோட்டார் சைக்கிள் திருத்துதல்,
ஆண்களுக்கான தையல் பயிற்சி,
வெளிவாரிப் பட்டப்படிப்பு, கேக் ஐசிங்,
தலை அலங்காரம், பூவேலை

மேற்படி பயிற்சி நெறிகள் அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் மூலம் கற்பிக்கப் படவுள்ளன. பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் கீழே குறிப்பிட்ட முகவரியில் ரூபா 5/- செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 1998-10-10ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறுகேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மின்சார வெல்டிங், மின்னிணைப்பு
ஆண்களுக்கான தையல் பயிற்சி,
கேக் ஐசிங், தலை அலங்காரம், பூ வேலை
ஆகிய பயிற்சிக்கான ஆசிரியர்களுக்கு
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இப்பதவிக்குரிய விண்ணப்பம் 1998-10-12 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கீழே குறிப்பிட்ட முகவரியில் ரூபா 5/- செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

நிர்வாக உதவியாளர்
கொம்ரெக்,
சித்தன்கேணி.

(சி/5059)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணிகள் கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

பயண மார்க்கம் ஏதும் இல்லாததால், இந்தக் கப்பலை பயணிகள் சேவைக்கு விட அவ் வர்த்தகர் முன்வந்திருப்பதாகத் தெரிகின்றது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை அவர் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அனுமதி கிடைத்தால், கப்பலை பயணிகள் சேவைக்கு ஏற்றவாறு மாற்றுவதற்கு உடன் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

அனுமதி கிடைத்து ஒரு வாரத்துக்குள் சேவையை ஆரம்பிக்க கூடியதாகவிருக்கும் என்றும் —

அந்த வர்த்தகருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## விமானத்துக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்)

மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி நிறுவனம் ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டது.

விமானத்துக்குள் திடீரென அமுக்க வீழ்ச்சி உருவானதற்கு விமானத்தின் ஏதேனும் ஒரு பகுதியில் பெரிய துவாரம் ஒன்று ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும் —

ஏதேனும் ஒரு குண்டுத் தாக்குதல் அதற்குக் காரணமாக இருக்கும் எனக் கருதலாம் என்றும் —

அந்தச் செய்தி நிறுவன வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [உ]

## மூழ்கிய விமானத்...

(முதலாம் பக்கத் தொடர்)

னப்படையினரோ பிரசன்னமாக இருக்க மாட்டார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கடலில் மூழ்கி மீட்புப் பணியை மேற்கொள்வதற்கு ''கொழும்பு மாஸ்டர் டைவேர்ஸ்'' நிறுவனசுழியோடிகள் கட்டணத்துக்கு அமர்த்தப்பட்டிருப்பதாக அறிய வந்தது.

'லயன் ஏயர்', செஞ்சிலுவைச்சர்வதேசக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளும், சுழியோடிகளும் கொழும்பிலிருந்து இன்று மன்னார் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அங்கிருந்து 25 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இரணைதீவுப் பகுதிக்கு நாளை அல்லது மறுதினம் படகுகள் மூலம் சென்று மீட்புப்பணியை அவர்கள் ஆரம்பிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தமீட்புப்பணியினருக்கு உதவுவதற்கு தயாராகடாரிய நோலர்களையும் சுழியோடும் திறமையுடைய மீனவர்களையும் மன்னார் செயலகம் தயார் நிலையில் வைத்திருப்பதாக மன்னார்த் தகவல்கள் தெரிவித்தன.

மீட்புப் பணிக்கு உதவும்படி அரச உயர் மட்டத்தின் பணிப்புரை கிடைத்தால், மீட்புப் பணியை துரித கதியில் செய்வதற்கான ஆயத்தங்களுடன் நாங்கள் தயாராக இருப்பதாக மன்னார் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில்—

மன்னார் அரச அதிபர் சில உயரதிகாரிகள் சகிதம் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத மடுப்பகுதிக்கு நேற்றுப் புறப்பட்டுச் சென்றார்.

இதே வேளையில் மேற்படி விமானத்தை 'லயன் ஏயர்' நிறுவனத்துக்கு வழங்கிய உக்ரைன் நாட்டு விமானக் கம்பனியின் இரு அதிகாரிகள் நேற்றிரவு கொழும்பு வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

சிலவேளைகளில் மீட்புப் பணியாளர் குழுவுடன் இவர்கள் விமானம் மூழ்கிய கடற்பிரதேசத்துக்குச் செல்லக்கூடும் என எதிர்பார்க்கப் பட்டது.

விமானத்தின் இயக்கம் பற்றிய விவரங்கள் மற்றும் விமானியின் உரையாடல்கள் பதியப்பட்டுள்ள கறுப்புப் பெட்டியை விமானச் சிதைவுகளிடையே இருந்து தேடிக் கண்டுபிடிப்பதில் மீட்புக் குழுவினர் அதிக சிரத்தை காட்டுவர் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கறுப்புப் பெட்டி கண்டு பிடிக்கப்பட்டால், விமானம் வீழ்ந்ததற்கான காரணத்தை இலகுவாகக் கண்டுபிடித்து விடலாம் எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

(உ-3-7-21-164)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதேநேரம் —

மன்னார் கடலில் மிதந்து வந்த மூன்று சடலங்களை கடற்படையினர் கண்டதாகவும் —

சில உயிர் காக்கும் அங்கிகள் கடலில் மிதப்பதை கடற்படையினர் அவதானித்ததாகவும் —

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இத்தச்சடலங்களே நேற்று இரணைதீவுப்பகுதியில் ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநகருக்கு அருகே அல்முனைப் பகுதியில் மற்றொரு சடலம் நேற்றுக் கரையொதுங்கியதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் அதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இதேநேரம்—

வலைப்பாடுக் கடலோரத்தில் விமானத்தின் இருக்கைத் துண்டுகள் மற்றும் சிதைவுகள் மிதக்கக் காணப்பட்டதாக வலைப்பாடு மீனவர்கள் தெரிவித்தனர்.

(உ-3-7-15)

ஒரு கோடி ரூபா பெறுமதி

# போதைப் பொருளுடன் இலங்கை இளைஞர் கைது

சென்னை, ஒக். 3

இலங்கை இளைஞர் ஒருவரிடமிருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான ஒரு கிலோ ''பிரவுண் சுகர்'' எனப்படும் போதைப் பொருளை சென்னை விமான நிலையப் பொலீஸார் நேற்றுக் கைப்பற்றினர்.

இந்த இளைஞர் தனது கைப்பையில் போதைப் பொருளை மறைத்துக் கொண்டு இலங்கைக்கு வருவதற்காக சென்னை விமான நிலையத்துக்கு வந்திருந்ததாகவும் —

அப்போதே அவர் விமான நிலையப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞர் கொடுத்த தகவலின் பேரில் மற்றொரு இளைஞரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

# பயணிகள் உறவினருக்கு காப்புறுதிக் கொடுப்பனவு

கொழும்பு, ஒக். 3

இரணைதீவுக் கடற்பரப்பில் வீழ்ந்த 'லயன் ஏயர்' விமானத்தில் பயணம் செய்து உயிரிழந்த 48 பயணிகளுக்கும், 7சிப்பந்திகளுக்கும் காப்புறுதிக் கொடுப்பனவு கிடைக்கும் என்று ''லயன் ஏயர்'' விமான நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விமானத்துக்கும், விமானச் சிப்பந்திகளுக்கும், அதில் பயணம் செய்த பயணிகளுக்கும் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. அதன்காரணமாக மரணமடைந்த பயணிகளின் உறவினர்களுக்குக் காப்புறுதிக் கொடுப்பனவுகள் கிடைக்கும் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பயணிகளுக்குத் தலா ஐம்பதினாயிரம் ரூபா காப்புறுதி செய்யப்பட்டிருந்ததாக ஒரு தகவல் தெரிவித்தது.

(உ-3)

## செஞ்சிலுவை...

(முதலாம் பக்கத் தொடர்)

கோரியுள்ளவர்களாவர்.

வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றவர்களும், கொழும்பு திரும்ப வேண்டிய அரச ஊழியர்களும் நேற்று யாழ். அரச அதிபரை நேரில் சந்தித்து மேற்படி கோரிக்கையை விடுத்தனர்.

பயண ஒழுங்கு செய்து தருமாறு கோரி ஏராளமானவர்கள் தமது விவரங்களைச் செஞ்சிலுவை சர்வதேசக்குழு அலுவலகத்தில் பதிவு செய்து வருகிறார்கள். (உ-3-6-175)

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

கிளிநொச்சிப் பகுதியில் கைப்பற்றப்பட்ட அறுநூறு சடலங்கள் கடந்த புதன்கிழமையும்—

மேலும் 10 சடலங்கள் மறுநாளும்—

விடுதலைப் புலிகளால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. (உ-3)

## 'லயன் ஏயார்'..

(முதலாம் பக்கத் தொடர்)

சரக்கு விமானத்தில் ஏற்றப்பட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடலில் வீழ்ந்த பயணிகள் விமானத்துக்கு சற்றுத் தாமதமாக பலாலியிலிருந்து இந்த விமானம் புறப்பட்டது.

எனவே தவறான தகவல் காரணமாக பயணிகள் விமானம் இலக்கு வைக்கப்பட்டிருக்கலாம் என்பதை 'லயன் ஏயர்' நிறுவன அதிகாரி சுட்டிக்காட்டினார்.

விடுதலைப் புலிகளின் பெயரில் அனுப்பப்பட்ட எச்சரிக்கைக் கடிதத்தை 'லயன் ஏயர்' நிறுவனம் அதிக 'சீரியஸாக' எடுத்ததாகத் தெரியவில்லை.

புலிகளின் பெயரில் தூயவன் என்பவரால் ஒப்பமிடப்பட்ட எச்சரிக்கைக் கடிதம் தங்களுக்குக் கிடைத்ததை அந்த அதிகாரி உறுதிப்படுத்தினார்.

அந்தக் கடிதம் உண்மையில் புலிகளால் அனுப்பப்பட்டதா என்பதை உறுதிப்படுத்துவதற்காகத் தாங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் புலிகளுடன் தொடர்பு கொள்ள முயன்றதாக அந்த அதிகாரி சொன்னார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் இது குறித்து புலிகளுடன் தொடர்பு கொள்ள முயன்றிருந்த சமயத்தில் பயணிகள் விமானம் கடலில் வீழ்ந்து மூழ்கியுள்ளது என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

'புலிகளின் எச்சரிக்கை குறித்து விமானப்படையினருக்கும் அறிவித்தோம். அவர்கள் பாதுகாப்புக் கருதி எமது விமான சேவைப் பாதையை மாற்றும்படி தெரிவித்தனர். அதன்படி எமது பாதையைப் பாதுகாப்பான வழியில் மாற்றினோம்.''— என்றும் அவர் கூறினார்.

—இவ்வாறு அந்த செய்தி நிறுவன வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன. (உ)

## தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்)

கைக்கு பொறுப்பான தளபதிகள், படைவீரர்கள் சூழ நிற்க பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கொடி ஏற்றி வைத்தார்.

அங்கு பேசிய அமைச்சர்— ''கிளிநொச்சியில் படையினரால் இழக்கப்பட்ட பிரதேசத்தை விரைவில் மீட்டுவிட முடியும். மாங்குளம் படையினரால் விடுவிக்கப்பட்டமை புலிகளுக்குப் பலத்த அடி.

''மாங்குளம் மீதான படையினரின் கவனத்தைத் திசை திருப்பும் நோக்குடனேயே — புலிகள் கிளிநொச்சி மீது தாக்குதல் நடத்தினர்'' — என்று தெரிவித்தார்.

அமைச்சருடன் சென்ற சில செய்தியாளர்கள் மாங்குளம் நகரைச் சுற்றிப் பார்வையிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது

விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட கிளிநொச்சி நகரில் அமைந்திருந்த இராணுவ தலைமையகத்தில் தமிழீழத் தேசியக் கொடி பொதுமக்கள் சூழ நிற்க ஏற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

இந்த நிகழ்வில் விமான எதிர்ப்புப் படையணியின் அணிவகுப்பு இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கொடியேற்ற நிகழ்வு இடம் பெறும் வேளை விமானக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறும் என எதிர்பார்த்து விடுதலைப் புலி விமான எதிர்ப்புப் படையினர் அங்கு முழு ஆயத்த நிலையில் இருந்தனர் எனவும்—

எனினும் அத்தகையதாக்குதல் எதுவும் நடைபெறவில்லை எனவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-7)


அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின்

**பட்டமளிப்பு விழா**

பட்டதாரிகளுக்கான பிரத்தியேகமான

**ஸ்ருடியோ வசதி**

எமது பல்கலைக்கழக பொது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் சகல பட்டதாரிகளுக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!

பட்டமளிப்பு விழாவின் பின் தங்களின் பிரத்தியேக ஸ்ருடியோ புகைப்படப்பிடிப்புக்களை உடனடியாகவே மேற்கொள்வதற்காக யாழ். முன்னணி புகைப்படப் பிடிப்பாளர்களால் சகல வசதிகளுடன் கூடிய ஸ்ருடியோ வசதி கலைப்பீட மாணவர் பொது அறையில் ஒன்றியத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணி முதல் மாலை 5-30 மணி வரை ஸ்ருடியோ திறந்திருக்கும்.

துரிதகதியில் புகைப்படங்களைப் பெற்றுத் தர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக
மாணவர் ஒன்றியம்

(59601)



**சங்கானையில்**

புதியதோர் பட்டுச் சோலை

அதுதான் யாழ். ராகம்ஸ் பட்டுச்சோலையின் கிளையகம்!

வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்,
நண்பர்கள் நலன்கருதி
யாழ். நகரில் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில்
எண்ணற்ற வாடிக்கையாளப்
பெரு மக்களைத் தன்னகத்தே கொண்ட

**ராகம்ஸ் பட்டுச் சோலை**

எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை
நண்பகல் 12.02 மணி தொடக்கம் 1.05
மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,
தனது கிளை நிலையத்தை
சங்கானை பிரதான வீதியில்
(பஸ்நிலையத்திற்கு அண்மையாக)
திறந்து வைக்கின்றது.



**ராகம்ஸ்**
**பட்டுச் சோலை**

24, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

(சி/5040)



INSTITUTE OF INFORMATICS STUDIES — IIS Jaffna, Sri Lanka

பரீட்சை
பிற்போடப்பட்டுள்ளது

இன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற இருந்த 5MS, N3MS. CMS பிரிவுகளுக்கான MS-WORD பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 11-10-98 ஞாயிற்றுக்கிழமை அன்று மு. ப. 10.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

MSEXCEL பரீட்சை திட்டமிட்டபடி 05-10-98 (திங்கள்) அன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

\- DIRECTOR

IIS,
[illegible] CLOCK TOWER ROAD,
JAFFNA. (சி/5058)




இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-10-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கரென் [SINGEREN]



தையல் இயந்திரம் திருத்தகம்

யாழ். சின்னக் கடையில் இயங்கிய சிங்கரென் (SINGEREN) தையல் இயந்திரம் திருத்தகம் வாடிக்கையாளரின் நன்மை கருதி யாழ். பஸ் நிலையம் முன்பாக ராணி தியேட்டர் அருகில் இயங்கி வருகிறது.

மாஸ்ரர் என். சகாயராஜா
123, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(59502)

## கருத்துக் கலசம்

மயூரா

### கௌரவப் பட்டம்

நாளை நடைபெறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில், சமய சமூகப் பணிகளில் முன்னின்று உழைப்பவர்கள் — மக்கள் மதிப்பைப் பெற்றவர்கள் — கலாநிதிப் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளனர்.

அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமன்றி சமூக, சமய சேவைகளில் — மக்கள் சேவைகளில் — ஈடுபடும் பெரியவர்களுக்கும் கௌரவப் பட்டங்களை வழங்கி கௌரவிப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்; பாராட்டப்பட வேண்டிய செயலுமாகும்.

பல்கலைக்கழகங்கள் அங்கு பயிற்றுவிக்கும் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகிய ஆசான்களுக்கும், மாணவர்களுக்குமே உரித்துடைய உயர் கல்விச் சாலையாக மட்டும் விளங்கலாகாது.

அது இப்பகுதி வாழ் மக்களின் கல்வி உயர்ச்சிக்கு மட்டுமின்றி சமூக, சமய, பொருளாதாரவளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிக்கும் நிறுவனமாகவும் அது பணியாற்ற வேண்டும்.

பாடவிதானங்களின் அடிப்படையில் பரீட்சைகளை நடத்திப் பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் ஆலையாக மட்டும் பல்கலைக்கழகம் இருக்கலாகாது.

மக்களின் — சமூகத்தின் — வாழ்க்கை முன்னேற்றத்துக்கு, பொருளியல் அபிவிருத்திக்கு, கல்வி வளர்ச்சிக்கு, கலை, கலாசார, பண்பாட்டு மேம்பாட்டுக்கு, உழைக்க வல்லவர்களை உருவாக்கும் உயர்பீடமாகவும் அது மிளிர வேண்டும்.

சமூக வளர்ச்சிக்கு உதவுவதும் பல்கலைக் கழகத்தின் பிரதான பணிகளில் ஒன்றாக அமைந்தால் மட்டுமே, அதனால் மக்களுக்கும், சமூகத்துக்கும் பயனுண்டு. அதே போன்று அது உயர்கல்வி நிலையம் என்ற தற்பெருமையுடன் சமூகத்தில் இருந்து ஒதுங்கி, தனித்து நிற்காமல் சமூகத்துடன் நெருங்கிச் செல்ல வேண்டும்.

பல்கலைக் கழகத்துக்கு வெளியே சமூக, சமய சேவை செய்யும் பெரியார்களைக் கௌரவிப்பதன் மூலம் மக்களுக்கும் அதற்கும் இடையேயான உறவு, இணைப்பு நெருக்கமாக வளரும். பல்கலைக்கழகத்தால் கௌரவிக்கப்பட வேண்டிய பலபெரியோர்கள் அவ்வாறு செய்யப்படாமல்உண்டான இடைவெளி இப்போதாவது நீக்கப்பட்டிருக்கிறது. இது தொடரவேண்டும்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்குப் பின்னர் கௌரவ கலாநிதிப் பட்டம் பெறும் பெரியோர்களைப் பாராட்டுகிறோம். மக்கள் மதிப்பைப் பெற்ற இவர்களைக் கௌரவிப்பதன் மூலம் ஏனையோரையும் பல்துறைச் சேவைக்குத் தூண்டுவது ஆகுகிறது.

யாழ். பல்கலைக்கழகம் மக்களுடனான தனது உறவை மேலும் நெருக்கமாக்கி பிரதேச வளர்ச்சிக்கு என்றும் உதவுவதாக!

# அடுத்த நூற்றாண்டில் நிஜமாகும் அதிசயங்கள்!

இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு ஆயுள் இன்னும் 15 மாதங்கள் மட்டும். எம்மிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டின் சாதனைகள் அளவிடமுடியாதவை. அவற்றை ஒரு முறை திருப்பிப் பார்த்தால்......

இந்த நூற்றாண்டின் விஞ்ஞான வளர்ச்சியால் மனிதன் நிலவில் உலாவினான். தொடர்புசாதனங்களின் மூலம் உலகம் கையடக்கமாகச் சுருங்கிவிட்டது. இரண்டு உலக மகா யுத்தங்களைக் கண்டாகிவிட்டது. சோதனைக் குழாயில் கரு உற்பத்தி ஆரம்பமாகிவிட்டது. கணனிகள் மனிதனின் வேலைகளைப் பாதியாக்கிவிட்டன. செவ்வாய்க்கு ''பாத் பைண்டர்'' சென்று இறங்கி படங்களும் அனுப்பியாகிவிட்டது. உச்சமாக, அணுகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு அதனை ஜப்பான் மீது வீசிப்பார்த்துமாயிற்று,

இவ்வாறான ஆக்கத்துக்கும் அழிவுக்குமான பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைத் தந்தது இந்த நூற்றாண்டு. இருபதாம் நூற்றாண்டின் சாதனைகளை இன்னும் நீண்ட பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்.

ஆனாலும் நாங்கள் மட்டும் இன்றும் விடிந்தால் நிவாரணம் கிடைக்குமா? ஜெயசிகுறு நிலைவரம் என்ன? —என்ற சிந்தனைகளுடன் நின்றுகொண்டிருக்கின்றோம். இந்த நூற்றாண்டின் விஞ்ஞானம் பற்றியோ இன்றைய உலகம் பற்றியோ சிந்திப்பதில்லை.

உலக விவகாரம் என்று போனால் நாம் முக்கியமாக விவாதிப்பது கிளின்டன்—மொனிக்கா உறவு பற்றித்தான். அதற்குமேல் போவதில்லை.

நாம் எவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும், எவற்றைத் தவிர்க்கவேண்டும் என்பது பற்றிய தெளிவு இன்னமும் எம்மிடமில்லை.

இன்றைய விஞ்ஞான உலகில் மேற்கு நாடுகளைவிட நாம் 50 ஆண்டுகள் பின்தங்கி இருக்கின்றோம். அதாவது எமது நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த 1948 ஆம் ஆண்டுகளில் நாம் எப்படி இருந்தோமோ, இன்றும் அந்நிலையில்தான் இருக்கின்றோம்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் எமது இருப்புப் பற்றிய கேள்வியுடனேயே இருக்கும் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய விடயங்கள் பல உள்ளன.

இன்றைய நூற்றாண்டின் இறுதியில் நின்றுகொண்டிருக்கும் மேற்குலகம், அடுத்த நூற்றாண்டை வரவேற்பதற்கு ஆரவாரத்துடன் தயாராகிவிட்டது. அத்தோடு மட்டுமல்லாது அடுத்த நூற்றாண்டு எப்படி இருக்கும் என்ற எதிர்கால மதிப்பீடுகளிலும்[Futurology] ஆர்வங்காட்டத் தொடங்கிவிட்டார்கள் மேற்குலக மேதைகள்.

உலகின் வல்லரசான அமெரிக்காவிலுள்ள ஜோர்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகம், பல்வேறு துறைசார் அறிஞர்களிடையே ஓர் ஆய்வு நடத்தி புதிய நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சி எவ்வாறு இருக்கும் என்பது தொடர்பாக ஆரூடம் கூறியுள்ளது.

இவை வெறும் ஊகங்கள் மட்டுமல்ல; இன்றைய விஞ்ஞானத்தின் அபார வளர்ச்சியைக் கொண்டு கணிப்பிடப்பட்ட எதிர்கால மதிப்பீடுகளும் கூட. அவற்றுள் சில துளிகள் இங்கே...

### மருத்துவம்

புதிய நூற்றாண்டில் கணனிகளைக் கொண்டு நம் உடலின் நோயை நாமே அறிந்து கொண்டு, அதற்குரிய நிவாரணத்தைத் தேடலாம். வைத்தியரை நாடிச் செல்லும் தேவை இல்லை. மிக அவசியமானால் [illegible] மூலையிலும் உள்ள வைத்திய நிபுணரையும் நமது கணனி மூலம் பேட்டி கண்டு அறிவுரை பெறலாம். இது 2007 ஆம் ஆண்டில் சாத்தியமாகும்.

பெற்றோர் தமக்கு எப்படிப்பட்ட குழந்தை வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அவ்வாறான குழந்தைகளை மரபணு மாற்றத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளலாம்.

பரம்பரை நோய்களை மரபியல் அணுகு முறை (Gene Therapy) மூலம் குணப்படுத்தலாம். இது 2013 இல் சாத்தியமாகும்.

2019 இல் உடலின் ஒவ்வொரு பாகமும் தனித்தனியே உற்பத்தி செய்யப்படும்; அதனைப் பயன்படுத்தி மாற்று அறுவைச் சிகிச்சை இடம் பெறும். 2013 இல், இன்று தீர்க்க முடியாதது எனறு கருதப்படும் புற்று நோய், எய்ட்ஸ் போன்றவற்றுக்கு மருந்து கண்டு பிடிக்கப்படும்.

நமது கண்ணுக்குள் கணனிகள் பொருத்தப்பட்டு எல்லாப் பார்வைக் கோளாறுகளையும் சமாளிக்கும் காலம் 2014 இல் வரும்.

### போக்குவரத்து

மின்சாரத்தையும் பெற்றோலியத்தையும் சேர்த்து இயங்கும் புதிய வாகனங்கள் 2006 இல் உற்பத்தி செய்யப்படும். அதே ஆண்டில் பட்டாரியில் இயங்கும் கார்கள் சுமார் 30 வீதமாக அதிகரிக்கும்.

- அன்ரன் -

ஒலியின் வேகத்தில் செல்லும் ரயில்கள் 2007 இல் உலகெங்கும் ஓடும்.

நெடுஞ்சாலைப் பாதைகள் தாமாகவே போக்குவரத்தை ஒழுங்கு செய்யும் தொழில் நுட்பத்தை (Automated Highways) 2018 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கலாம்.

2023 இல் பல நகரங்களில் போக்குவரத்துக்கே தேவையிருக்காது. வீட்டில் இருந்தே அலுவலக வேலைகளைப் பார்க்க முடியும்.

ரயில் பாதையில் கார் போன்ற அமைப்பிலான கூண்டுகள் மிக வேகமாக நம்மை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு 2024 இல் அழைத்துச் செல்லும். விமானங்கள் ஒலியின் வேகத்தைவிட 5 மடங்கு அதிக வேகத்துடன் 2025 முதல் பறக்கத் தொடங்கும்.

### சுற்றுப்புற சூழ்நிலை

நமது நாடுகளில் காணப்படும் கழிவுப் பொருள்களில் அரைவாசிப்பகுதி 2016 இல் மீண்டும் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

2010 முதல் உற்பத்தியாகும் பொருள்களில் பெரும்பாலானவை புதுப்பிக்கப்பட்டவையாகவே (Recycled) இருக்கும். தொழிற்சாலைக் கழிவுப் பொருள்கள் பெருமளவு குறைக்கப்படும்.

### எரிபொருள்

2010 ஆம்ஆண்டு முதல் சூரிய ஒளி, காற்று, கடல், வெப்பம் போன்றவை நமக்குத் தேவையான எரிசக்தியில் பத்து சத வீதம் வரைதரும்.

பெற்றோல் எரிசக்தியின்திறன் 50 வீதம் அதிகரிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு வரும்.

எரிவாயு அல்லது எண்ணெய் சிறு பற்றறி போன்று உருவாக்கப்படும். அதிலிருந்து மின்சாரத்தை பெற்றுக் கொள்ளலாம். இது 2017 இல் நடைமுறைக்கு வரும்.

2020 ஆம் ஆண்டு முதல் ஐதரசன் வாயு பரவலாக எரிசக்தியாக பயன்பாட்டுக்கு வரும். அணுசக்தி நமது மின்சாரத் தேவையின் 50 சத வீதத்தை 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யும்.

### விவசாயம்

மரபியல் மாற்றத்தின் மூலம் அதிக விளைச்சல் தரும் தானியங்கள், அதிகமாகப் பால் தரும் கறவையினங்கள் என்பன உற்பத்தி செய்யப்படும். இது 2008 இல் சாத்தியமாகும்.

இரசாயன உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளின் உபயோகம் 50 வீதமாகக்குறையும்—இது 2010 ஆம் ஆண்டில்.

விவசாயத்தில் நீர்ப்பாசனம், விதை விதைத்தல், உரமிடும் அளவு, பூச்சிமருந்துதெளிக்கும் அளவு ஆகியவை எல்லாம் கணனிமூலம் ஒழுங்குபடுத்தப்படும். இது 2020 இல் இடம்பெறும்.

நகர்ப்புற மக்கள் தமக்கு வேண்டிய பழம், காய்கறி, மலர் போன்றவற்றை தாமே உற்பத்தி செய்யும் தொழில் நுட்பம் 2015 முதல் பரவலாகும். செயற்கை மாமிசம், பழம், காய்கறி, ரொட்டி என்பன 2027 முதல் பரவலாகப் பயன்பாட்டுக்கு வரும்.

### கணனி

2008 முதல் அனேகமாக கையடக்கக் கணனி ஒவ்வொரு குடிமக்களின் கைகளிலும் இருக்கும். தனிப்பட்ட கணனி, தொலைக் காட்சி, வீடியோ, தொலைபேசி என்பன ஒருங்கிணைக்கப்பட்ட கருவி ஒன்று 2005 ஆம் ஆண்டு முதல் வெளிவரும்.

கணனிகள் தாம் விரும்பும் செயல் கட்டளைகளை (Soft Wares) தாங்களே தயாரித்துக்கொள்ளக் கூடியவையாக 2007 ஆம் ஆண்டில் இருக்கும். உங்கள் கணனி மற்றவர்களின் குரல், கையெழுத்து, உருவம் போன்றவற்றை அறிந்து செயற்படும் திறனுடன் இதே யாண்டில் உருவாக்கப்படும்.

கணனி மூலம் ஒலியையும் செலுத்தும் திறன் 2008 இல் வெளிவரும். ஒரு மொழியில்இருந்து வேறொரு மொழிக்கு எளிதாக மொழி பெயர்க்கும் திறன் 2015 இல் கணனிகளுக்கு ஊட்டப்படும்.

நமக்கு வேண்டிய சினிமாத் தொலைக்காட்சித் தொடரை நமது கணனி மூலம் எப்போது வேண்டுமானாலும் காணும் வசதி 2003 இல் சாத்தியமாகலாம்.

நமக்கு வேண்டிய புத்தகங்களை வீட்டில் இருந்துகொண்டு கணனி மூலம் படிக்கலாம்; பதிப்பிக்கலாம். இது 2007 இல் சாத்தியமாகும்.

இப்போதுள்ள தாள் நாணயம், குற்றி நாணயம், ''செக் — புக்'' என்பன 2009 இல் தேவையற்றதாகி விடும். மின்னணு மாற்றத்தின் மூலம் பணம் கைமாறும். (Electronic Banking)

மாணவர்கள் கல்லூரிகளுக்கோ பாடசாலைகளுக்கோ செல்லாமல் ஆசிரியரிடம் பாடத்தைக் கேட்கலாம்; சந்தேகங்களைத் தீர்க்கலாம்; ஆசிரியரோடு அள்வளாவலாம். இது 2019 இல் சாத்தியமாகலாம்.

### தொழில் உற்பத்தி

ஆலைத் தொழிலாளர் எண்ணிக்கை 2010 இல் அரைவாசியாகக் குறையும்.

2010 ஆம் ஆண்டில் 80 சதவீதமான பொருள்கள் கணனிகளின் கண்காணிப்பில் இயங்கும். இதே ஆண்டில் உபயோகிப்பாளரின் தனிப்பட்ட தேவையைக் கருத்திற் கொண்டு பெரும்பாலான பொருள்கள் உற்பத்தியாகும்.

2020 ஆண்டளவில் ரோபோ எனப்படும் இயந்திர மனிதன் பல வேலைகளை நமக்காகச் செய்வான்.

### மூலப் பொருள்கள்

பெரும்பாலான வாகனங்கள் 'பீங்கான்' (Ceramic) போன்ற மிருதுவான மூலப் பொருளில் தயாரிக்கப்படும். இது 2014 இல் இடம்பெறும்.

தற்போது நாம் பயன்படுத்தும் கார்கள் பழையதானால் பழைய இரும்புக் கடைகளுக்கு அனுப்புகின்றோம்.

(XIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி மனிதப் புதைகுழிகள் மாரிக்கு முன்னர் தோண்டப்படும் சாத்தியம் இல்லை

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை யாழ்ப்பாண நகரத்தில் திடீரெனப் பெரும் பரபரப்பு. பலாலியில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட ''லயன் ஏயர்'' விமான சேவை விமானம் காணாமற் போய்விட்டது என்ற செய்தி காட்டுத் தீ போலப் பரவியது. ''லயன் ஏயரின்'' இரண்டாவது சேவையில் ஈடுபட்ட விமானமே காணாமற் போனதாகக் கூடவே மேலதிக தகவலும் சேர்ந்து 'செய்தி'யாகியது.

அதற்கு முதல் நாள் திங்கட்கிழமை, இரவு பத்து மணியுடன் வெளிமாவட்டங்களுக்கான தொலைபேசிச்சேவை சீர்குலைந்து போனதால் கொழும்புடன் தொடர்பு கொண்டு தகவல் அறியமுடியாத நிலை மக்களுக்கு. யாழ்ப்பாணத்தில் உள்ள ''லயன் ஏயர்'' அதிகாரிகள் கூட விமானம் காண முடியாமற் போனது குறித்தும் அது தொடர்பான ஏனைய விவரங்கள் பற்றியும் எதுவும் அறிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தனர்.

எனினும் பலாலியில் இருந்து அன்று (செவ்வாய்) நண்பகல் 1.30 மணிக்குப் புறப்பட்ட ''லயன் ஏயர்'' பயணிகள் விமானம், புறப்பட்ட சுமார் 10 அல்லது 15 நிமிடங்களில் காணாமற் போயிற்று என்பதனை ஊர்ஜிதம் செய்யும் தகவல் பி.ப. 5 மணியளவில் உதயனுக்குக் கிடைத்தது. அதி உயர் அரசாங்க அதிகாரி ஒருவர் மக்கள் மத்தியில் பரவிய ''கதை'' சரியானதே என்று உறுதிப்படுத்தினார்.

சம்பவம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டதாயினும் விமானத்துக்கு நேர்ந்தது என்ன, அதில் பயணம் செய்த மக்களுக்கு என்ன நடந்தது என்ற இரு முக்கிய தகவல்களையும் பெறமுடியவில்லை.

தொலைபேசித் தொடர்பு அறுந்திருந்தமையால் மேலதிக விவரங்கள் மெதுமெதுவாகவே கிடைத்தன. எனினும் விமானத்தினதும் பயணிகளினதும் நிலை குறித்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வியாழன் மாலையே கிடைத்தன. ஆனாலும் உத்தியோக பூர்வமாகவும் பயனுள்ள தகவல்கள் எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

மன்னாரில் இருந்து பதினைந்து கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இரணைதீவுக்கும் இருபத்தைந்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ள நாச்சிக்குடாவுக்கும் இடையில் விமானம் ஒன்று தலைகுத்தியவாறு கடலுக்குள் வீழ்ந்ததைக் கண்டதாக அப்பிரதேசத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்த பேசாலை மீனவர்கள் மன்னார் செயலக அதிகாரிகளுக்குச் செய்தி கொடுத்ததாக புதன்கிழமை பிற்பகலில் ஒரு தகவல் கிடைத்தது.

சுமார் ஐந்து மீற்றர் (பதினைந்தடி) ஆழமான கடற்பகுதியில், கரையிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் விமானம் விழுந்ததாகவும் மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

மூன்று பயணிகளினது சடலமும் ஒரு பயணியின் அடையாள அட்டையும் வியாழனன்று அப்பகுதியில் கரை ஒதுங்கியதை அடுத்து மேற்படி தகவல் ஓரளவு ஊர்ஜிதமாகியது.

### ஏக்கமும் சோகமும்

'லயன் ஏயர்' நிறுவனத்தினர் சேவையில் ஈடுபடுத்திய விமானம் அன்ரனோவ் (ஏ. என். 24) ரகத்தைச் சேர்ந்தது. உக்ரேயின் நாட்டைச் சேர்ந்த விமானிகளே அதனைச் செலுத்திச் சென்றனர். வழமைபோன்று 48 பயணிகளை விமானம் ஏற்றிச் சென்றது. விமானிகளையும் சேர்த்து சிப்பந்திகள் ஏழு பேர்.

மூன்று நாள்களாக, இந்த விமானத்தில் பயணம் செய்த பொதுமக்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து சரியான தகவல்கள் கிடைக்காததால் அவர்களின் உறவினர் பதகளித்துக் கொண்டிருந்தனர்.

பயணிகளுக்கு ஒன்றும் நடந்திருக்கக்கூடாது என்ற பிரார்த்தனையுடன் ஒருசாராரும் —

இரண்டு, மூன்று நாள்களாக சரியான தகவல் தெரியாததால் அவர்களுக்கு ஏதாவது நடந்திருக்கும் என்ற மனநிலையில் சோகமே உருவாக மறுசாராரும் — இருந்ததை அவதானிக்க முடிந்தது.

''லயன் ஏயர்'' விமானத்தில் பயணம் செய்த மக்களுக்குக் கெட்டதாக எதுவும் நடந்துவிடக்கூடாது; தப்பியிருக்கவேண்டும்; உயிரோடு வந்துவிடவேண்டும் என்ற உணர்வையே ஏனைய பலரும் வெளியிட்டனர். அதுவே அவர்களின் வேண்டுதலாகவும் இருந்தது.

விமானத்தில் பயணம் செய்தவர்களின் வீடுகளில் குடும்ப உறுப்பினர்கள் அன்னம், தண்ணீர் இல்லாமல் வாடினர். ஏக்கமும் சோகமுமே பரவி விரவி நிற்கின்றன. உறவினர்கள், நண்பர்கள், பழகியவர்கள், தெரிந்தவர்கள் என்று பலரும் அவர்களுக்கு ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்தனர். ஆனால் இறுதியில் அவர்கள் கதி நிர்க்கதியாயிற்று.

தமிழ் மக்கள் அனுபவிக்கும் அவலங்கள் இன்னல்களுக்கு மேலாக, அவை போதாது என்றா இது போன்ற துன்பமும் வருகிறது என்று வேதனைப்படும் மனங்களே யாழ்ப்பாணத்தில் கண்ணுக்குத் தெரிகின்றன.

துன்ப துயரங்கள் என்னென்ன வகைகளில், வழிகளில் எல்லாம் வந்து ஈழத் தமிழனை வாட்டுகிறது? துன்பப்படுவதற்கென்றே பிறந்தவனா தமிழன் என்று மனம் வெதும்புகிறார்கள் மக்கள்.

ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவோரின் நடவடிக்கைகள் எல்லாவற்றாலும் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் மக்களே. மத்தளத்தைப் போன்று அவர்களுக்கு இரண்டு பக்கங்களாலும் அடி விழுகிறதே! இந்தக் கஷ்டமும் துன்பமும் எப்போது நீங்கப் போகின்றன என்பதே மக்களின் விரக்தியாக மாறியுள்ளது.

## 'அன்ரனோவ்' விமானம் குறித்து மக்களின் நான்கு ஊகங்கள்

### ஊகங்கள் நான்கு

வியாழன் இரவுவரை விமானத்துக்கு என்ன நடைபெற்றது என்பது சரியாகத் தெரியாததால் மக்கள் நான்கு சாத்தியங்கள் குறித்துத் தமக்குள் பேசிக் கொண்டனர்.

★ திங்கட்கிழமை இரவே தூரதர்ஷன் தொலைக்காட்சியின் செய்தியில் தமிழகத்தை அடுத்த 48 மணி நேரத்துக்கு கடும் மழை தாக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதே போன்று தமிழகத்தில் மழை பெய்தது. அதன் தாக்கம் யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் இருந்தது. செவ்வாய்க்கிழமை காலையில் ஒரே மப்பும் மந்தாரமுமாக இருந்தது. நண்பகலில் இடிமின்னலுடன் மழையும் பெய்தது.

**உள்ளும் புறமும் — குறுமுனி**

ஆகையால் காலநிலை காரணமாக விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம். இது மக்கள் கருதிய, பேசிக்கொண்ட முதலாவது சாத்தியம்.

★ விமானத்தில் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக அது விபத்துக்கு உள்ளாகி இருக்கலாம் என்பது இரண்டாவது ஊகம்.

★ விமான சேவை நடத்தக்கூடாது என்று விடுதலைப் புலிகள் ''லயன் ஏயர்'', ''மொனரா'' விமான சேவைகள் இரண்டினதும் முகவர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்களை எழுதியிருந்தனர். அதனைத் தொடர்ந்து தமது தொழிலை முகவர்கள் நிறுத்தியமை, மக்களுக்கு அறிவித்தமை ஆகிய சூழ்நிலையில் விடுதலைப் புலிகளே விமானத்தைத் தாக்கியிருக்கலாம் என்பது மூன்றாவது சாத்தியம்.

★ பொது மக்கள் விமானத்தில் பயணம் செய்ததால் விமானத்தைத் தாக்காமல் அதனைக் கடத்திச் சென்றிருக்கலாம் என்பது மக்களின் நான்காவது ஊகமாக இருந்தது.

இதில் நான்காவது ஊகம் சரி என்று இப்போது தெரிந்துவிட்டது.

''மொனரா'', ''லயன் ஏயர்'' விமான சேவைகளின் முகவர்கள் தமது தொழிலில் இருந்து வாபஸ் பெற்றதன் பின்னரும் விமான சேவைகள் நடைபெற்றன. மக்களும் அவசர அவசிய தேவைகள் கருதி கொழும்பு செல்ல வேண்டியதால் விமானப் பயணத்தை ஒதுக்கிவிட முடியவில்லை. மாற்றுப் போக்குவரத்து ஏற்பாடு எதுவும் இல்லாமையால் விமானப் பயணத்தையே நாடினர்; நாடுகின்றனர்.

விடுதலைப் புலிகள் விமானப் பயணம் குறித்து விமானசேவை முகவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பியதோடு நிற்கவில்லை, மக்களுக்கும் கணனியில் அச்சிடப்பட்ட வேண்டுகோள் பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டனர்; விநியோகித்தனர்.

மக்களுக்கென விமான சேவையை நடத்தி, அரசாங்கம் மக்களிடம் பணத்தைச் சுரண்டுவதோடு இராணுவப் போக்குவரத்து, உளவு பார்த்தல் ஆகிய இராணுவ நோக்கங்களுக்கும் அரசு அதனைப் பயன்படுத்துவதாகவும் —

அதனால் மக்கள் இனிவரும் காலங்களில் விமான சேவைகள் ஊடான போக்குவரத்தைத் தவிர்த்து கப்பல்கள் ஊடாகப் பயணம் செய்வது கூடுதலான பாதுகாப்பாக இருக்குமென்றும் — அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், மக்கள் ''லயன் ஏயர்'' விமானத்துக்கு என்ன நேர்ந்தது என்பது சரியாக ஊர்ஜிதப்படுத்தப்படாத நிலையிலும் —

விமானப் பயணம் செய்யத் தயாராகவே இருந்தனர். புதன், வியாழக்கிழமைகளில் விமான மூலம் பயணம் செய்வதற்கு நான் முந்தி, நீ பிந்தி என்று மக்கள் அவசரப்பட்டுக்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

ஆனால், இதனை எழுதி முடிக்கும் வேளையில் கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பயணிகள் விமான சேவைகளை முற்றாக நிறுத்துவதற்கு அமைச்சரவை முடிவு செய்ததாகக் கொழும்பில் இருந்து தகவல் ஒன்று கிடைத்தது.

★ ★ ★

செம்மணிப் புதைகுழி விவகாரம் ஆறிய கஞ்சியாகி விடுமோ என்று இப்பத்தியில் முன்னர் ஐயம் எழுப்பியிருந்தோம். அநேகமாக அப்படி ஒரு நிலையே உண்டாகும் என்று எண்ணத் தோன்றுகிறது.

இது விடயத்தில் அரசாங்கம் மெதுவாக நகர்வதால் குடாநாட்டு மக்களின் சந்தேகம் வலுக்கிறதே அன்றிக் குறைவதற்கு வாய்ப்பில்லை. அந்த வகையில் காணாமற் போனோரின் பெற்றோர்கள், மனைவிமார்கள், சகோதரர்கள் மற்றும் உறவினர்களின நிலை மேலும் அனுதாபத்துக்கு உரியதாகிறது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் ஏனைய ஐந்து மனித நேய அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணக் கிளையின் முன்னால் மறியற்போராட்டம் நடத்தியது. அன்னையர் முன்னணி, நீதிக்கும் சமாதானத்துக்குமான மக்கள் குழு, இந்து இளைஞர் பேரவை, கத்தோலிக்க மறைமாவட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான குழு, யாழ், மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் போன்ற அமைப்புக்களை உள்ளடக்கிய மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த மறியல் போராட்டத்தில் ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் பங்குகொண்டனர். இவர்களில் பெண்களே அதிகமானோர்.

சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் சோமசுந்தரம் அவெனியுவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கிளை அலுவலகத்தின் முன்னால் சோகமே உருவாக அவர்கள் அமர்ந்திருந்தனர்.

மறியல் போராட்டத்தில் கலந்து கொண்ட ஆண்களில் மிகப் பலரும் நீண்டு வளர்ந்த தாடிகளுடனும், சீவப்படாத தலைமயிர்களுடனும் காணப்பட்டனர். தமது பிள்ளைகள் திரும்பி வரும்வரை முகச்சவரம் செய்வதில்லை என்று விரதம் இருப்பவர்களே இவர்களில் பலர்.

பெண்களோ பொலிவிழந்து கவலை ரேகைகளை முகங்களில் படரவிட்டவர்களாக காய்ந்து போன செடிகளைப்போல் வாடி வதங்கியிருந்தனர். ஒரு சில பெண்களின் நெற்றிகள் பொட்டின்றி வெட்டைவெளியாக அமங்கலமாகத் தெரிந்தன.

'மழைக்கு முன் புதைகுழி தோண்டுவதற்கு முன்னுரிமை வழங்குக!'' 'நாங்கள் அன்புசெய்தவர்கள் எங்கே?', 'எங்கள் உழைப்பாளிகள் எங்கே?, போன்றன உட்பட பல சுலோகங்களைத் தாங்கியவாறு அவர்கள் போராட்டம் நடத்தினர்.

படம் எடுத்த புகைப்படக்காரர்களைப் பார்த்த பெண்கள் கூட்டம், ''நீங்கள் எத்தனை தடவைகள் எங்களைப் படம் எடுத்துப் போட்டீர்கள்? எங்களை வைத்து எல்லோரும் வேடிக்கை பார்க்கிறார்கள். உருப்படியாக எதுவும் செய்யவில்லையே''! என்று விரக்தியுடன் தெரிவித்தனர்.

மறியல் போராட்டம் செய்ததோடு மட்டுமின்றி, மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமையக அதிகாரிகளுடன் பேச வேண்டும் என்று போராட்டக்காரர்கள் விடாப்பிடியாக நின்றதால் —

அவர்களின் பிரதிநிதிகளுடன் ஆணைக்குழுவின் தலைவர் ஓ. எல். எம். செனிவிரத்னாவே தொலைபேசியில் உரையாடினார். போராட்டக்காரர்களின் குறைகளை, கோரிக்கைகளை நேரில் கேட்டறிவதற்கு ஆணையாளர் ஒருவரை அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார்.

அதன் பிரகாரம் இம்மாதம் நான்காம் திகதி — அதாவது நாளை — ஆணைக்குழுவின் உபதலைவரான முன்னாள் நீதியரசர் ரி. சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம் வருவதாக இருந்தது. விமான சேவைகளில் ஏற்படக்கூடிய தடங்கல்களை முன்னிட்டு அவரது யாழ். விஜயம் தாமதமாகப் போகிறது.

அவர் இங்கு வந்திருந்தாலும் கூட குடாநாட்டு மக்கள் விரும்புவது போல பருவ மழை தொடங்குவதற்கு முன்னர் புதைகுழிகளைத் தோண்டும் சாத்தியம் சிறிதேனும் கூட இல்லை என்பது மட்டும் நிச்சயம் உறுதி.

ஏனெனில் அதற்கான வழிமுறைகள் மிக நீண்டவை; வகுத்து வகுத்துச் செய்யப்பட வேண்டியவை — என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் விளக்கமளித்தன.

செம்மணி விவகாரத்தில் தேசிய மனித உரிமை ஆணைக் குழுவுக்கு உதவிசெய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை விருப்பம் தெரிவித்துள்ளது. ஐ. நாவின் விருப்பம் கடந்தவாரமே வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இனிமேல் வெளிவிவகார அமைச்சு ஐ. நாவின் உதவியைப் பெறுவதற்கு சம்மதம் தெரிவித்துப் பதில் அனுப்பவேண்டும்.

வெளிவிவகார அமைச்சின் பதில்— அழைப்பு—கிடைத்த பின்னர் பூர்வாங்கப்பணிகளை மேற்கொள்வதற்காக ஐ. நா அதிகாரிகள் ஒருவர், இருவர் வருவர். அவர்கள் இங்குள்ள நிலைமைகளைப் பயின்று, பின்னணித் தகவல்களைச் சேகரிப்பதோடு தமக்குத்தேவையான ஆளணி, உபகரணங்கள் குறித்து முடிவுசெய்வர். அதுசம்பந்தமான அரசின் அங்கீகாரமும், சம்மதமும் கிடைத்த பின்னரே பணிகளைத் தொடங்கமுடியும்.

ஐ. நா. நிபுணர்கள் தமது பணிகளைத் தொடங்குவதற்கான ஆயத்தகளத்தைத் தயார்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு, பணி தேசிய மனித ஆணைக்குழுவினுடையதாகவே இருக்கும்.

ஐ. நா. நிபுணர்கள் புதை குழிகளைத் தோண்டும்போது வெளியே எடுக்கப்படும் சடலங்களை இனங்காண்பதற்கு, இறந்ததாகக் கருதப்படுவோரின்—காணாமற்போனதாகக் கருதப்படுவோரின்— உறவினர்களாலேயே இயலும்.

ஆகையால் முதலில் செம்மணிக்கு மிகஅண்மித்தபகுதிகளான அரியாலை.

(XIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசனானாலும் ஆண்டியானாலும்.....

இஸ்ரேல் தேசத்துக் கதை இது.

ஒரு காலத்தில் அந்த நாட்டில் அரசனைத் தேர்ந்தெடுப்பது தெய்வத்தின் செயலாக இருந்ததாம்.

ஒரு விசித்திரமான பறவை இருந்ததாம். அதற்கு 'சந்தோஷப் பறவை' என்று பெயராம்.

ஏற்கனவே இருக்கும் அரசன் இறந்து போனால், உடனே அந்தப் பறவை வானவெளியிலிருந்து பறந்து வருமாம். அப்படி அது பறந்து வந்து யார் தலையில் முதலில் உட்காருகிறதோ, அவன் தான் அந்த நாட்டுக்கு ராஜாவாம்!

இது அங்கே வழக்கம்.

ஒரு சமயம் அந்த நாட்டின் ராஜா இறந்து போனார். எல்லோரும் ஆகாயத்தைப் பார்த்தார்கள். சந்தோஷப்பறவை பறந்து வந்தது.



'யார் தலையில் அது உட்காரப் போகிறதோ?' என்று அனைவரும் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அந்தப் பறவை நேராகப் பறந்து வந்து, அங்கே நின்று கொண்டிருந்த ஓர் அடிமையின் தலையில் போய் உட்கார்ந்தது.

அந்த அடிமை எந்தக் கோலத்தில் இருந்தான் தெரியுமா?

தோளில் மத்தளம்... இடுப்பில் ஆட்டுத்தோல் உடை... தலையில் இறகுகள் வைத்த தொப்பி!

வீடுகளில் ஏதாவது விசேஷம் என்றால் ஆடிப் பாடுபவன் அவன்.

யாராக இருந்தால் என்ன? சந்தோஷப் பறவை உட்கார்ந்தால், உட்கார்ந்ததுதானே! அந்த அடிமையை உடனே அந்த நாட்டு மக்கள் அரசனாக ஏற்றுக்கொண்டார்கள்.

அரண்மனைக்கு அழைத்துச்சென்று அரியணையில் உட்கார வைத்தார்கள்.

அந்த அடிமை ராஜா என்ன பண்ணினான் தெரியுமா?

அரண்மனைக்குப் பக்கத்திலேயே ஒரு சிறிய குடிசை கட்டச் சொன்னான். அந்தக் குடிசைக்குள் தன்னிடம் இருந்த மத்தளம், ஆட்டுத்தோல் உடை, தொப்பி போன்ற எல்லாவற்றையும் பத்திரமாக வைத்தான். அதற்குப் பக்கத்திலேயே ஒரு பெரிய நிலைக் கண்ணாடியையும் வைத்தான்!

இவன் இப்படிச் செய்ததைப் பார்த்ததும்... அங்கிருந்த அமைச்சர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம்.

இருந்தாலும் யோசனை செய்தார்கள்.

ஒரு நாட்டுக்கு அரசராக இருப்பவர் இப்படியெல்லாம் செய்வது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர்களெல்லாம் சேர்ந்து அரசனிடம் மெதுவாகக் கூறினார்கள்.

''அரசே! நீங்கள் தனியாக இருக்கும் போது கூட உங்களுடைய ராஜ கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் வேண்டும்!'' என்று ஆலோசனை தெரிவித்தார்கள்.

அதற்கு அந்த அரசன். ''அரசனாக ஆவதற்கு முன்பு நான் ஓர் அடிமையாகத்தான் இருந்தேன்! இப்போதும் அடிக்கடி அதை நினைவுபடுத்திக் கொள்கிறேன்! அப்போதுதான் உங்களையும் மற்றவர்களையும் விட நான் உயர்ந்தவன் அல்லன் என்பது எனக்கு உறைக்கும்! என் மனதிலும் அகங்காரம் உண்டாகாது!'' என்று கூறினான்.

இது இஸ்ரேல் தேசத்துக்கதை.

அதனால்... நம்முடைய நாற்காலிகள் மாறலாம்! அதற்காக... நம்முடைய பண்பு மாறிவிடக்கூடாது, மனிதர்களுக்கு இடையே இருக்க வேண்டிய மரியாதை குறைந்து விடக்கூடாது. ★

## குட்டிக் கதைகள் கூறும் தத்துவங்கள்

# பெரிய பைத்தியம்!

ஓர் ஊரில் ஒரு பைத்தியக்காரன் இருந்தான். அவன் தன் சட்டையைத் தானே கிழித்துக்கொள்வான். அவன் உடலில் அவனே கீறிக்கொண்டும் அடித்துக் கொண்டும் காயத்தை ஏற்படுத்துவான். ஊர்மக்கள் எல்லோரும் அந்தப் பைத்தியத்தின் செயலைப்பார்த்துச் சிரித்தார்கள்.

நாள்கள் சில சென்றன. ஊர் மக்களுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. எல்லோரும் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டார்கள். எல்லோர் உடலிலும் காயம். சட்டைகள் கிழிந்திருந்தன. ஒருவரை ஒருவர் கேவலமான சொற்களால் திட்டிக் கொண்டனர். துரத்திக் கொண்டு ஓடுவதும் கத்துவதுமாக இருந்தனர்.

இப்போது அந்தப் பைத்தியக்காரன் அவர்களைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்துக்கொண்டிருந்தான்.

# தித்திக்கச் செய்வது எது?

ஒரு குருவிடம் நெடுங்காலம் படித்த சீடர் ஒருவர், இன்னொரு குருவிடம் சென்று மேலும் கற்க விரும்பினார்.

முதல் குரு மிகவும் கர்வம் பிடித்தவர். ''நான் உனக்குச் சொல்லிக் கொடுக்காதது இன்னும் என்ன மீதி இருக்கிறது? வேறு குருவை நீ எதற்காக நாடவேண்டும்?'' என்று கேட்டார்.

அப்படி அவர் சொன்னதை சீடன் பொருட்படுத்தவில்லை,

''சரி, இதை நீ எடுத்துக்கொண்டு போய் உன் புதிய குருவிடம் காட்டு'' என்று கூறி அவர் ஒரு குடம் நிறையத் தண்ணீர் நிறைத்து அவனை அனுப்பினார்.

புதுக்குரு அதைப்பார்த்தார். உடனே விஷயத்தைப் புரிந்து கொண்டார்.

''நான் என் சீடனுக்கு எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்து, அவனை நிறைகுடமாக ஆக்கி இருக்கிறேன். வேறு எவருடைய உபதேசமும் அவனுக்குத்தேவை இல்லை'' என்று பழைய குரு சொல்கிறார் என்று ஊகித்தார்.

உடனே அவர் அந்தத் தண்ணீரில் சில கற்கண்டுக் கட்டிகளைப் போட்டு, ''உன்பழைய குருவிடம் இதை கொடுத்து ருசி பார்க்கச் சொல்'' என்று திருப்பி அனுப்பினார்.

சீடன் கொண்டு வந்த தண்ணீரைப் பழைய குரு ருசிபார்த்தார். நாக்கில் இனித்தது விஷயம் விளங்கியது. அவரது கர்வம் அடங்கியது. ''ஆம். நான் குடத்தில் நிரப்பிய தண்ணீர் தாகத்தை மட்டும் தீர்க்கும். ஆனால் அதில் இனிப்பான ருசி இல்லை. நான் என் சீடனுக்கு வெறும் அறிவைமட்டுமே சொல்லிக் கொடுத்தேன். ஆனால் அத்துடன் 'பக்தி' என்ற கற்கண்டு போட்டுத்தரவில்லை. அதைச் சுட்டிக்காட்டவே புதிய குரு இப்படிச் செய்திருக்கிறார்'' என்றுஅறிந்து கொண்டார். ★

# இந்திரன் கட்டிய அரண்மனை

ஆசைப்படுவதில் தவறு எதுவும் இல்லை. ஆனால் அந்த ஆசை தேவைக்குத் தகுந்த ஆசையாக இருக்க வேண்டும்.

தேவைக்கு மீறிய ஆசைகள் தேவையில்லாதவை.

இந்தக் கருத்தை வலியுறுத்தும் கதை இது:-

ஒரு சமயம் தேவேந்திரனுக்கு திடீர் என்று வீடு கட்ட வேண்டும் என்ற ஓர் ஆசை வந்தது.

வீடு என்றால் நாம் கட்டுவது போன்ற சாதாரண வீடு இல்லை! தேவேந்திரன் வீடு என்றால் சும்மாவா?

'ஒரு பிரம்மாண்டமான அரண்மனை கட்ட வேண்டும். இது போன்ற அரண்மனை இந்த மூன்று உலகங்களிலும் கிடையாது என்று எல்லோரும் வியந்து பாராட்டும் வகையில் நான் கட்டும் அரண்மனை பிரம்மாண்டமாக அமைய வேண்டும்' என்று இந்திரன் நினைத்தான்.

உடனே அவன் தேவதச்சரான விஸ்வகர்மாவைக் கூப்பிட்டான்; உத்தரவு போட்டான்.


விஸ்வகர்மா தன்னுடைய உதவியாளர்களையெல்லாம் கூப்பிட்டு ஒன்றாகச் சேர்த்துக் கொண்டார். படாத பாடுபட்டு பிரம்மாண்டமான ஒரு பெரிய அரண்மனையைக் கட்டினார். அதைக் கட்டி முடிக்க ஆயிரம் வருடங்கள் ஆயிற்று!

தேவேந்திரன் வந்து அரண்மனையைப் பார்த்தான். அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை.

''என்னுடைய அந்தஸ்துக்கு இது மிகவும் சாதாரணமான கட்டடம்! இதைவிட இன்னும் பெரிதாகக்கட்டு!'' என்றான்.

தேவதச்சர் திணறிப் போய்விட்டார்... அவரால் அதற்கும் மேலே எதுவும் செய்ய முடியவில்லை. 'என்ன செய்யலாம்?' என்று யோசித்தார். நேராக நாரதர் காலில் போய் விழுந்தார். ''நீங்கள்தான் என்னை இந்தப் பிரச்சினையிலிருந்து காப்பாற்ற வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

நாரதர் யோசித்தார். ''சரி, கவலைப் படாதே'' என்று ஆறுதல் கூறி தேவதச்சரை அனுப்பி வைத்தார்.



பிறகு அவர் நேராக இந்திரனிடம் சென்றார்.

இந்திரன் நாரதரைப் பார்த்தவுடனே, ''வாருங்கள்'' பக்தியுடன் வரவேற்று உபசரித்தான்.

பிறகு அவரை அழைத்துச் சென்று தான் கட்டிய அரண்மனையைக் காட்டினான்.

[illegible]

(XIII ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கக் கணக்கு

கலீபா ஹசரத் அலி ஆன்மிக வாழ்க்கையில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்.

அவர் ஒருநாள் தன்னுடைய அரசாங்கக் கணக்கு வழக்குகளை ஆராய்ந்துகொண்டிருந்தார்.

அப்போது அவரைப் பார்ப்பதற்கு கனவான் ஒருவர் வந்தார். வந்தவர் தன்னுடைய சொந்த வேலை காரணமாக வந்திருக்கிறார் என்பது கலீபாவுக்குத் தெரிந்தது.

உடனே கலீபா, தாம் உபயோகித்துக்கொண்டிருந்த விளக்கை அணைத்துவிட்டு, அதே இடத்தில் வேறு ஒரு விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டார். கலீபாவின் இந்தச் செயல் பார்வையாளருக்கு விநோதமாகப்பட்டது; என்றாலும் அவர் தன்னுடைய ஆவலை அடக்கிக்கொண்டு கலீபாவிடம் தான் வந்த அலுவலை முடித்துக்கொண்டார்.



பார்வையாளரின் வேலை முடிந்த மறுகணமே கலீபா, அந்த இரண்டாவது விளக்கை அணைத்துவிட்டு முதல் விளக்கை ஏற்றிவைத்துக் கொண்டார்.

இதைக் கண்ட பார்வையாளர் தன் ஆவலை மேலும் அடக்க முடியாமல், கலீபாவிடம் அவரது செயலுக்கான காரணத்தை வினவினார்.

அதற்கு கலீபா, ''ஐயா! தாங்கள் வந்தபோது நான் என்னுடைய அரசாங்க அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அதற்காக அரசாங்கம் தந்திருக்கும் விளக்கை உபயோகித்தேன். உங்களுடன் சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசும்போது அரசாங்கப் பணத்தைச் செலவழிக்கலாமா? அதனால்தான் உங்களுடன் பேசுகையில் என்னுடைய சொந்த விளக்கை உபயோகித்தேன்'' என்று பதில் கூறினார்.

இப்போது பொது சேவையில் இருப்பவர்களுக்கு இது புரியுமா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுக்குள்ளே!

மின் கம்பிகள்
விழிப்படைந்தன,
வீதிகள் யாவும்
விடுதலையடைகின்றன.
ஹலோ சொல்ல
தொலைபேசிகள்
முளைத்தன.
விரைந்த பயணத்திற்கு
விமானங்கள் வந்தன.
வண்ணங்கள் காட்ட
திரைகள் வந்தன.
எத்தனை சொகுசுகள்
வந்த போதிலும்
கடந்து போன
அந்த அனுபவங்கள்
அன்றாடம்
நெஞ்சுக்குள்ளே
கனத்துக் கொண்டுதான்
இருக்கின்றன.

- இணுவை றொட்றிக் -

# அறிவாயா நீ மனிதா?

படைத்தவன் படைத்தான்
பாரினில் விட்டான்
பண்புடன் வாழ் மனிதா!

அன்பையே துணையாய்
கொண்டே நீயும்
அகிலத்தில் வாழ் மனிதா!

ஆசையை அடக்கி
கோபத்தை விட்டு
உலகினில் நடமனிதா!

இன்பமும் துன்பமும்
இயற்கையின் வழியே
இறைவனைத் துதி மனிதா!

ஈகையே என்றும்
உன்னுடன் வருமே
இதை உணர் நீ மனிதா!

உண்மையே பேசி
உலகினில் வாழ்ந்து
உவகையேகொள் மனிதா!

உன்னையே நம்பி
உயிர்களைப் படைத்தான்
கொல்வதை ஒழி மனிதா!

உற்றமும் சுற்றமும்
இடை வழி நீங்கும்
உண்மையைப் புரிமனிதா!

ஊரினில் போடும்
வேஷத்தை நீக்கி
உள்ளத்தால் வாழ் மனிதா!

எல்லாச் செயலும்
இறைவனுக்கு என்றே
செய்திடு நீ மனிதா!

ஏற்றமது வந்தால்
இறககமது வருமே
கர்வத்தை விடு மனிதா!

ஐயத்தை விட்டு
ஐயமது இட்டு
ஜெயம் கொண்டு வாழ் மனிதா!

ஒருவனே கடவுள்
ஒருவனே தேவன்
கடவுளை அடை மனிதா!

ஓதியதை என்றும்
மனதிலே மீட்டு
வாழ்ந்திடு நீ மனிதா!

ஔடதம் இன்றியே
உடல் நலம் பேணி
சுகம் கொண்டு வாழ் மனிதா!

செய்கின்ற கர்மம்
நரகத்தை தருமே
நம்பிடு நீ மனிதா!

செய்கின்ற தர்மம்
சொர்க்கத்தில் சேர்க்கும்
அறிவாயா நீ மனிதா?

— இ. சி. தெட்சணா மூர்த்தி —

# சோதனையின் சுவடு

பொய் மானைத் தேடியதோர் சீதைதானும்
போர் முனையில் மீண்டதுயர் பொழிப்பதாகும்
மெய் மானைத் துச்சமாய் மொய்த்த பேர்க்கு
மெத்தியதோர் மாமிசம்தான் சுவையதாச்சு
கொல்லான்பால் ஈசன்தான் இரக்கம் கொண்டு
சொல்லானேயானாலும் செறிப்பான் வாழ்வு
பொய்யான மானுடம் தான் புணர்ந்த செல்வம்
பொய்தானே பொருந்தாத புணர்வு சேரின்
நன்றான வாழ்வுதனை நாசம் செய்ய
நய வஞ்சகமான நாவு போதும்
சொல்லாலே நானிதனைச் சொல்லவில்லை
சோதனைகள் கண்ட சில மூத்தோர் வாக்கு
பற்றின்றேல் நீயிதனைத் தூக்கிவீசு
பரிவுண்டேல் என்வழியில் வாக்கை மாற்று
சொற்பதங்கள் தவறிலதேல் தூய அன்பில்
சோகமாங்கில்லைக் கண்டீர் வாய்மை வெல்லும்
சுயபுத்திதானும் மாறநேரும் சோதனையும் சூழும்
சோர்வு கண்டு விளிம்பினில் சொக்கிநிற்க நேரும்
தேசத்தின் சூழலையே உவமையாகக் காட்டி
தேடிவரும் செல்வமெல்லாம் தேரிடத்தை மாற்றி
கோசத்தை வலுவாகக் கோர்த்த மலர்மாலை
கோப்பவிழ்ந்து காப்பிளகிக் குழம்பிநிற்க நேரும்
பாசத்தை வலுக்கொண்டு வாழுமெந்தநாடும்
பசுமையின் வாழ்வு பெறும் நியதியதுதானே!

— மாவை செங்கோடன் —

# இடர் கெடுக்க வேண்டும் இனி!

(இறைவியிடம் ஒரு வேண்டுதல்)

செங்களத்திற் தம்குருதிச் சேற்றினிலே நீச்சலிட
மொங்குமொலி கொண்டவெடி குண்டுகுழி வீழ்வதனால்
பொங்குதமிழ் ஈழமது பொசுங்குஇனப் போரினிலே
சங்கெடுத்து வெற்றிபெறத் தமிழரினைப் பார், திரும்பு!

மோதலுடன் சண்டையிடும் மோகந்தரும் எங்களது
காதலிகள் கழுதையெனக் காலெடுத்து உதைவதனால்
பேதலித்து எம்மனது பேய்பிடித்து வதைபடலை
மோகினியே மாற்றிவிடு, முடிவுதனைக் காட்டிவிடு!

அம்மா இவ்வுலகம் அவசரத்தில் சுற்றுவதால்
சும்மா உருவாகும் சுரைகழன்ற தலைகளுக்கு
சிம்மா சனத்திருக்கும் சீதேவி—அறிவேற்றிச்
சன்மானப் பரிசாகத் தன்னிறைவு தந்துவிடு!

வாணீ, நடுத்தெருவில் வாலாட்டும் குரங்குகளின்
வால் நீ அறுத்தெடுக்க வாநீ எனக்கேட்க,
போ, நீ எனச்சொல்லிப் புறந்தள்ளல் முறைதானோ?!
தா நீ ஆறறிவு தந்துவிடின் நன்றியடி!

போட்டிகளும் பொறாமைகளும் பூதலத்தைக் கண்டபடி
ஆட்டவிடத் திருவுளமோ? ஆரணியே கண்விழித்து
காட்டிடடி நல்வழியைக் கண்ணகியே புன்னகையில்
கோட்டையரண் உள்ளிருந்து கொடுந்தளையை நீக்கிவிடு!

நெஞ்சினிலே நீயிருந்தால் நெடுமலங்கள் நீறாகும்
பஞ்சருகே தீயிருப்பின் பற்றிவிடும், கொற்றவையே
நஞ்சிருக்கும் நெஞ்சுகளை நாம்விலக்கி நல்லவரைத்
தஞ்சமெனக் கொண்டிடவே தாள்பணிவோம் தாரணியே!

மந்திரித்து மாங்கனியை மரத்திருந்து வீழ்த்துகின்ற
தந்திரங்கள் கேட்பமென்றா தாமதித்து நீயொளிந்தாய்?!
இந்திரியே ஏழலகும் ஏற்றமுற இடர்கெடுத்து
அந்தரிக்கும் சிற்றுயிரை ஆதரித்து அருளிடடி!!!

— கி. குருபரன் —

# உயிர்கள் உய்யக் கடமை செய்வீர்!

நச்சுப் பொய்கை நீர்ப்பாய்ச்சி
நன்றாய் வளர்த்து விட்டபயிர்
குச்சுக் குள்ளும் செழித்தோங்கி
குலைகள் தள்ளி நிற்பதனை
அச்சமின்றிப் பார்க்கின்ற அற்பர்
காவி சுமந்தின்னும்
துச்சமாக உயிர் வதைக்குத்
தூப மிடலா மாஇறைவா?

மனிதர் உள்ளம் பூவாகும்
கருணை அன்புச் சொல்லொன்று
இனிதாய் உரைத்தால் இடர்தீரும்
எங்கும் தாழ்வுளக் குறைதீரும்
கனியாய் இனித்தால் சுவையாகும்
காரம் குணத்தில் சார்ந்திருக்கும்
மனிதா பெற்றுப் பெருக்கி இன்று
பன்றிக் குறவெனத் திகழ்வானேன்?

இறைவர்க் கனைத்துயிர் ஒன்றாகும்
எல்லாம் ஓரெழிற் பூவாகும்
நறுந்தேன் சுவையும் கரும்புக்குள்
சாறாய்த் தெரியும் உடலுக்குள்
இருந்தேன் என்னும் உயிருக்கு
எரியும் உடல்பின் வேறாகும்
உணர்ந்தால் உடலுயிர் உறவெல்லாம்
உலகின் நன்மைக் கன்புசெய்யும்!

அண்ணன் தம்பி உறவுண்டு
ஆனால் அவர்க்கு வயிறிரண்டு
அவரவர் பாகம் அவரவர்க்காய்க்
கொடுத்தல் பெற்றவர் கடனாகும்
வண்மை யாளன் அண்ணனெனில்
தம்பி யூழ்வினை அடிமையா?
உண்மை உணர்ந்து உயிவழி
உயிர்கள் உய்யக் கடமைசெய்வீர்!

— புலவர் முத்து இராசரத்தினம் —

# வெளிச்சங்கள்

வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் — எங்கள்
வெற்றியின் விளை நிலங்களே!
உள்ளக் கமலத்தைப் போற்றிடும் — எங்கள்
உயர்ந்த வாழ்வின் நித்திலங்களே!

வாழ்க்கையை வாழ்வுக்காய் வாழாமல் — எங்கள்
வாழ்வுக்காக வாழ்ந்த வள்ளல்களே!
புத்தகங்கள் திறந்த புத்தகங்களே — நாங்கள்
பூச்சூடிய கல்வியின் வித்துவங்களே!

ஆசிரியராய் வாழ்கின்ற அர்த்தங்களே!
அகங்களை ஆளுகின்ற அற்புதங்களே!
வீசி எழும் தென்றலின் விவேகங்களே— நாங்கள்
வாழ்த்தி வணங்கும் வெளிச்சங்களே!

தமிழ் தந்த தங்கக் கலசங்களே — தங்கள்
தாள்களைப் பற்றி வணங்குகின்றோம்
அமிழ்தென வாழ்விக்கும் அமுதங்களே - தங்கள்
அடிகளைத் தினமும் வணங்குகின்றோம்.

- நல்லை அமிழ்தன் -

# கனவே கனவே! காதல் கனவே!

மங்கையே காதல் தங்கையே
என் மனதிலுறையும் தங்கமே
என் இதயத்திலுனக்கொரு பக்கமே
அதை வாதாடி வைத்தேன் நீ தங்கவே.

வசந்தகாலப் பறவை நீ
வானத்து வெண்ணிலவும் நீ
வரும் தென்றல் காற்றும் நீ
வசந்தம் வழங்கும் வள்ளல் நீ

இன்பம் தரும் இனிய இதழ்
அன்பைத் தரும் இனிய குணம்
கனவில் வரும் இனிய வனம்
கார்கூந்தல் தரும் இனிய மணம்

மெல்லிடை நடை நடந்து
பல்லிடை சொல் துவண்டு
சிற்றிடை மேனி சிலிர்த்திட
காற்றிடை கண் கலந்தது

பற்றிய அன்பு நானும்
பற்றிய நெருப்பைப் போல
பற்றியே என் நெஞ்சை—அவள்
பற்றியே வாட்டியது

இத்தனையும் சொல்லி முடிய
எந்தையாள் அருகில் வந்து
முத்துப்பல் தெரிய முறுவலித்தாள்
சீக்கிரம் நான் ‘சீரியஸ்’ ஆகினேன்

‘அன்பே!’ என அழைத்தேன்
அருகில் என், அம்மைதான்
‘அன்பு மகனே! அவலப்படாதே
அது வெறும் கனவு தானென்’றாள்

— புஸ்பகுமார் —

# உலகமே உன்னைத்தான்!

கண்ணுக்குள் கனவொன்று
கரைந்திருக்குப் பாரு! — எம்
மண்ணுக்குள் மனிதரெலாம்
மறைந்திருக்கார் தேடு!

இங்கத்து ஆட்களெல்லாம்
சுதந்திரமாம் கேளு! — பெரு
வங்கத்துச் சாமியொராள்
சொல்லிப்புட்டார் ஜோரு!

காலத்தின் காலடியில்
எங்களது பேரு!
கண்ணீராய்க் கரையுது பார்
செந்தமிழன் சாறு!

சோகத்தின் முகவரியாய்
எங்களது ஊரு! — எம்
சொந்தங்களின் குருதியினால்
செம்மணியில் சேறு!

எமக்கென்று எதிர்காலம்
இருக்கிறதா வேறு?
இதைக் கண்டு நியாயமொன்றை
உலகமே நீ கூறு!

- ரீ.ரீ. மயூரன் -

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மரகஜ நாடு

**சஞ்சீவி சிறுகதை**

**புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளை மட்டும் தாங்கி 'அம்மா' என்ற பெயரில் சஞ்சிகை ஒன்று பிரான்ஸில் வெளியாகின்றது. அதன் 'ஆனி — 97' இதழில் பார்த்திபன் என்பவர் எழுதிய சிறுகதை இது.**

**போரின் பின்னணியில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் உள நெருக்குதல்களை இக்கதை சித்திரிக்கிறது.**

**(ஆ-ர்)**

1987 மே, 22. வடமராட்சி. ஊர் அமைதியாக இருந்தது. விலங்குகளும் சத்தம் போடவில்லை. பாதை விளிம்புகளில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு உறக்கத்தில் இருந்தன. எந்த வீடும் வெளிச்சமாயிருக்கவில்லை. பாடசாலையிலிருந்து மூன்று வீடுகள் தள்ளியிருந்த அந்த வீடும் அமைதியாயும், இருளாயும் இருந்தது. வீட்டில் உருவங்கள் சத்தமில்லாமல் நடமாடின. பழகிப் போய் விட்டதால் இருளில் நடமாடுவதற்கு அந்த உருவங்கள் தடுமாறவில்லை.

''அம்மா பயமாயிருக்கம்மா...'' மிக மெதுவாக அந்தச் சிறுவன் பயப்பிட்டான்.

''உஸ்...பயப்பிடாத ஒண்டும் நடக்காது.'' அவன் அருகில் இருந்த அம்மாவின் குரலிலும் கலக்கம் கலந்திருந்தது. கடிகாரம் பெரிதாகச் சத்தம் போடுகிறதோ என்று நினைக்க வந்தது.

''அப்பா எங்கேம்மா?'' மீண்டும் பெரிதாக சிறுவனின் குரல் கேட்டது.

''மெல்லமா அப்பா இப்ப வந்துடுவார்.'' நேரம் நீளமாகப் போய்க் கொண்டிருந்தது எங்கும் அமைதி. எதுவுமே அசையவில்லை. வீடுகளுக்குள் பதுங்கியிருந்த மனிதர்கள் எதையோ எதிர்பார்த்து பயப்பட ஆரம்பித்தார்கள். பயந்தார்கள், பயந்து வியர்த்தார்கள்.

''பயமாயிருக்கம்மா.....''

சிறுவன் மறுபடியும் பயப்பட்டான். சிறுவனுக்கு பத்து வயதிருக்கலாம். பெயர் கணேசமூர்த்தி. கணேசன் என்றுதான் கூப்பிடுவார்கள். முதலாம் வகுப்புவரை மட்டுமே ஒழுங்காகப் படித்திருந்தான். இராணுவ அட்டகாசங்கள் அவன் பாடசாலைக்குப் போய்படிப்பதை தடை செய்திருந்தன. இதனால் அவனுக்கு பொது அறிவு போதுமானதாக இருக்கவில்லை. அவனுக்கு எதுவும் புரியவில்லை.

''ஏன் பயப்பிட வேணும்?''

''ஆருக்கு பயப்பிட வேணும்?''

''ஏன் ஆக்களை சாகக் கொல்லுறார்கள்?''

எதுவும் அவனுக்கு தெரியாது. யாரும் அவனுக்கு இந்த விவரங்களை தெரிவிக்கவில்லை. தானாக அறிவதற்கும் வயது அவனுக்கு பொருத்தமானதாக இருக்கவில்லை. அவனுககு நினைவு தெரிந்த நாளிலிருந்து பயம் ஒன்றைத்தான் அவன் பரிபூரணமாக அறிந்திருக்கிறான்.

''கவனமாகப் போ!''

''ஆமிக்காரங்கள் வருவாங்கள்.''

''ஆமிக்காரங்களை கண்டா ஓடி ஒழி''

''ஹெலிகொப்ரர் வந்தா மரங்களுக்கு கீழ போய்நில்.''

''றோட்டில் ஆக்கள் ஒருத்தரும் இல்லாட்டி பக்கத்தில் இருக்கிற வீடுகளுக்க போய் நில்.''

பாடசாலைக்கு போகும், அல்லது வெளியே போகும் ஒவ்வொரு தடவையும் இப்படியான எச்சரிப்புகள், கவனங்கள், கவலைகள் கணேசனில் பயத்தை உண்டாக்கி விடும். உடனே திரும்பி வந்து விடுவான்.

இந்தப் பயம் சில நாள்களில் நிரந்தரமாகவே மனதைப் பற்றிக் கொண்டது. வீட்டில், பாடசாலையில், பாதையில், கடையில், படுக்கையில் எப்போதும் பயம், பயம், பயம் அந்தப் பயத்தினால் விசேட ஜாக்கிரதைகள்.


பழைய 'அம்புலிமாமா,' 'ரத்னமாலா'க்களில் தேவர், அசுரர் சண்டைகளைப் பற்றி கணேசன் எழுத்துக் கூட்டி வாசித்திருக்கிறான். ஆனால் இப்போது நடக்கும் சண்டை யாருக்கிடையில் என்பதை உண்மையாகவே அந்தச் சிறுவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

''ஆமிக்காரன்கள் பொல்லாதவன்கள்''

''ஆக்களைக் கண்டால் சுட்டுப் போடுவான்கள்.''

''ஆக்களைக் கண்டபடி வெட்டுவாங்கள்''

இவை மட்டுமே கணேசனுக்குத் தெரியும். ஆமிக்காரங்களின் கண்களில் படாமல் தான் தப்பிக்கொள்ள வேண்டும் என்பது அவனுக்குத் தெரிந்தது. ஆனால் இன்று வரை ஓர் ஆமியையும் அவன் தன் கண்களால் பார்க்கவில்லை! தங்களைப் பயப்படுத்துபவர்கள் எப்படியிருப்பார்கள் என்றே, தெரியாதிருந்தது. புராண கதைகளில் வரும் அசுரர்களைப் போலவே ஆமிக்காரங்களின் உருவத்தையும் தற்காலிகமாக அவன் கற்பனை செய்து வைத்திருந்தான்.



திடீர், திடீரெனத் தெருக்களில் சனங்கள்ஓடுவதையும், திடீர், திடீரென்று பிரேத ஊர்வலங்கள் போவதையும் வீட்டுக்குள் இருந்தவாறே கணேசன் பார்த்துக்கொண்டிருப்பான். அப்போதெல்லாம் அவனுக்குப் பயமாயிருக்கும்.

''நாங்களும் செத்துப் போவோமா?''

தனியே இருக்கப் பயந்து ஓடிவந்து அப்பாவையோ, அம்மாவையோ கட்டிப்பிடித்துக்கொள்வான். உடல் நடுங்கும்; வியர்க்கும். பிரேத ஊர்வலம் பார்த்த இரவு பயங்கரக் கனவெல்லாம் வரும். சில வேளைகளில் நித்திரையிலே கத்திவிடுவான். விழித்துக் கொண்டபின் தூக்கமே வராது.

படிப்பில்லை; நண்பர்களுடன் விளையாட்டில்லை; வெளியே போய்வரத் துணிவுமில்லை; அனுமதியுமில்லை, கணேசனுக்கு சீ என்றிருந்தது. வேலைக்குப் போவதற்கு அப்பா வெளியே புறப்படுகை அவனுக்குப் பீதியாயிருக்கும்.

''அப்பா போகாதையுங்கோ, ஆமிக்காரங்கள் சுட்டுப்போடுவான்கள்'' என்று ஒருநாள் சொல்லி அம்மாவிடமிருந்து நன்றாக அடிகள் வாங்கிக் கொண்டான்.

''சனியன் வெளியில போகேக்க இப்படியே சொல்லுறது.''

இதன் பின் கணேசன் வாய்விட்டு எதுவும் சொல்லாவிடினும் அப்பா வெளியே போகும் ஒவ்வொரு தடவையும் மனதுக்குள் பயந்து கவலைப்படுவான். அப்பா திரும்பி வரும் வரையும் வெளிக் கதவருகே காவல் இருப்பான். அவனைப் பயப்படாதே என்று சொல்லுமளவிற்கு அம்மாவுக்குத் தெரியமில்லை. அப்பாவுக்கு நேரமில்லை.

''அப்பா எங்கேம்மா?'' கணேசன் மறுபடியும் கவலைப்பட்டான். ''வந்திடுவார்.'' அம்மா சுருக்கமாகப் பதிலளித்தார்.

எங்குமே நிசப்தம். அசாதாரண அமைதி. எல்லா வீடுகளிலும் ,எல்லோரும் ஒரே மாதிரியாகப் பயந்து போயிருந்தார்கள். கவலைப் பட்டுக்கொண்டிருந்தார்கள்.

நேரம் போய்க்கொண்டிருந்தது. கணேசன் மீண்டும் ஏதோ கேட்க முயற்சிப்பதுக்குள் அம்மா அவனைப் பேசாமலிருக்கும்படி சைகை செய்துவிட்டு காதைக் கூர்மையாக்கினாள். தூரத்தில் மிக மெலிதாகஅந்த சத்தம் ஆரம்பித்தது. எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட சத்தம்.

அம்மா பரபரப்பானாள், கணேசனை ஒரு கையால் இறுக்கப் பிடித்தாள். இருளில் அங்கும் இங்கும் மோதியபடி வெளிக் கதவைத் திறந்து ஓடினாள். கணேசனும் இழுபட்டான். வேலியோடிருந்த வேப்பமரத்தின் அருகே வெட்டப்பட்டிருந்த பதுங்கு குழிக்குள் அம்மா குதிக்க தொடர்ந்து கணேசனும் [illegible]

[illegible] முனகினாள். ''நோகுதோ?'' அம்மா பரிவோடு கேட்டாள்.

முழங்காலில் வந்திருந்த சிராய்ப்புக் காயத்தைக் கைகளால் தடவியபடியே இல்லையென்றான். சிறிது நேரத்தில் காதைச் செவிடாக்கும் ரீங்காரம். இராட்சத பறவைகள் மிகத் தாழ்வாகப் பறந்து திரிந்தன. குண்டு முட்டைகள் போட்டன. அக்கம் பக்கத்து வீடுகளில் ஆட்கள் பரபரப்பாய் படும் சத்தங்கள், பதுங்கு குழிக்குள் குதிக்கும் சத்தங்கள், திடீர், திடீரெனப் பெரிய சத்தங்களுடன் நிலம் அதிர்ந்தது. கணேசன் பயத்துடன் அம்மாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டான்.

கண்ணைப் பறிக்கும் வெளிச்சங்கள். யார் யர்ரோ அழும் சத்தங்கள். மீண்டும் மீண்டும் வெடிச்சத்தங்களும் நில அதிர்வும். கணேசன் கண்ணை மூடிக்கொண்டான். அப்போது பயம் இன்னும் அதிகரிக்க உடனே கண்களைத் திறந்து கொண்டான். நேரம் போய்க் கொண்டிருந்தது ..... இருள்

முற்றாகப் பரவியிருந்தது. காலில் ஊர்ந்த ஏதோ ஒன்றைக் கணேசன் உதறினான்.

பூச்சியோ?, மட்டத்தேளோ?, பாம்பும் வருமா? எதற்குப் பயப்பிடலாம்? பயப்பிடாமல் இருக்கவே முடியாதா? வியர்வையில் மண் ஒட்டி உடம்பு முழுதும் பிசுபிசுத்தது. கற்கள் குத்தி வலித்தன. நன்றாக இருக்கவும் முடியாமல் அவர்கள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

1987. மே. 23, பதுங்குகுழி. வெளிச்சம் தயங்கியபடி பிரவேசித்தது, தூங்காத கண்களுடன் கணேசனும் அம்மாவும் கூசினார்கள். ''அப்பா எங்கேம்மா?'' அன்றைய முதல் கேள்வியைக் கேட்டான் கணேசன். ''மாமா வீட்டில நிண்டிருப்பார். இண்டைக்கு கட்டாயம் வருவார்'' மகனுக்கு சமாதானம் சொன்னாலும் 'இவர் எங்கே?' என்ற கேள்வி அவளைக் கலங்க வைத்தது.

''வீட்டுக்கு போவோமா?'' கணேசன் கேட்டான்.

''கொஞ்சம் பொறு'' என்று அம்மா காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

வித்தியாசமான சத்தங்கள் எதுவும் கேட்காததால் ''எழும்பு போவோம்'' என்றாள்.

முதலில் அம்மா பல்முறை சறுக்கியபின் வெளியே வந்தாள். சற்றுத் தூரத்தில் குவியல்களாகக் கிடந்த கடதாசிகள் அவளைக் கவர அவற்றை நோக்கிப் போனாள்.

''அம்மா என்னைத் தூக்கி விடுங்கோ'' கணேசன் பதுங்குகுழிக்குள் இருந்து குரல் கொடுத்தான். குவியல்களில் இருந்து ஒன்றை எடுத்துப் பார்த்த அம்மா திடுக்கிட்டாள்! நான்கு நாள்களுக்குத் தொடர்ச்சியாக ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் வெளியே நடமாடுவோர் சுடப்படுவர் என்றும் சுத்தமான தமிழில் எழுதப்பட்டிருந்தது.

மறுபடியும் வானத்தில் ஆரவாரம்...!

விமானங்கள் தெரிய ஆரம்பித்தன. அம்மா திரும்பவும் பதுங்கு குழிக்குள் இறங்கினாள். ''என்னம்மா?'' கணேசன் பதட்டத்தோட கேட்டான். ''ஒருத்தரையும் வெளியில திரிய வேண்டாமாம். கண்டா சுட்டுப் போடுவாங்களாம்.''

கணேசனுக்கு ஏன் என்று கேட்கத் தெரியவில்லை. இருவரும் அப்படியே இருந்தார்கள். விமானங்கள் வந்தன, குண்டுகள் போட்டன, பறந்து போயின. விமானங்கள் வந்தன, குண்டு...

1987 மே 24, பதுங்குகுழி.

கணேசனும், அம்மாவும் சோர்ந்து போயும் களைத்துப் போயும் இருந்தார்கள். தூங்காத கண்கள் சிவப்பாகியிருந்தன. எறும்புகள் கடித்ததால் உடம்பில் ஆங்காங்கே பரவலாக மேடுகள் உண்டாகியிருந்தன. கணேசன் கொட்டாவி விட்டான். இது எத்தனையாவது என்று அவனுக்கு மறந்து போய்விட்டது. அவனுக்கு பசித்தது, மிகவும் நன்றாகப் பசித்தது. தலையைச் சுற்றியது, தூக்கம் வந்தது.

இவையெல்லாவற்றையும் மீறி பயம் நிறைந்திருந்தது. அம்மாவுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது. அவன்தான் என்ன செய்ய முடியும்? வெளியில் போகச் சுட்டுக் கொன்று விடுவார்களே. கவச வாகனங்களின் இரைச்சல் கூட மிக துல்லியமாகக்கேட்டது. இராணுவம் அண்மையில் வந்து விட்டதை அவள் அறிந்து கொண்டாள்.

யுத்த ஆரவாரம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தன. இராணுவத்தின் பிடிக்குள் தாம் சிக்கிக் கொண்டதாக எல்லோரும் அனுமானித்துக் கொண்டார்கள்.

கணேசனுக்கு பசி வயிற்றை பிராண்டியது. உடம்பெங்கும் எரிந்தது. தலை சுற்றியது. அம்மா அவனைப் பார்த்து கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள். பகல் போய் இரவு வந்தது. அவர்கள் அப்படியே இருந்தார்கள்.

1987 மே 25, பதுங்கு குழி.

வெடிச் சத்தங்களுடன் விடிந்தது. கணேசன் சுருண்டு படுத்திருந்தான். கண்கள் அரைகுறையாக மூடியிருந்தன. அம்மா அவனைப் பரிவுடன் தடவினாள். உடம்பு மிக வெப்பமாக இருந்தது. நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். அங்கும் அதே வெப்பநிலைதான். காய்ச்சலா? அவன் தலையை தூக்கி மடியில் வைத்தாள்.

''என்ன செய்யுது ராசா?''

''பசிக்குதம்மா...'' கணேசன் மெலிதாக முனகினான். அம்மா கொஞ்ச நேரம்

(XIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகம் கௌரவிக்கும் இலக்கியக் கலாநிதிகள் இருவர்

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி



கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக சொற்பொழிவுப் பணி, ஆலய ஆறங்காவற் பணி, குழந்தைகளுக்கும் முதியோருக்கும் நிறைவாழ்வளிக்கும் பணி ஆகியன நன்குசெய்து வருபவரும் ஒரு மூகவியல் கலாநிதிப் பட்ட ஆய்வுக்கே பொருளாக அமைந்த வருமான சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்படுவதை முன்னிட்டு அவரை அறிமுகம் செய்வது பெருமைக்குரியதாகும்.

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழையில் 1925 ஆம் ஆண்டு தை மாதம் 7 ஆம் நாள் பிறந்த சிவத்தமிழ்ச் செல்வி, மல்லாகத்தில் அமெரிக்க மிசன் பாடசாலை, விசாலாட்சி வித்தியாலயத்திலும் அளவெட்டி சதானந்த வித்தியாலாயத்திலும் தொடக்கக் கல்வியினைக் கற்றார். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலே இடைநிலைக் கல்வி பயின்று இராமநாதன் சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலே பயிற்சி பெற்றார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்திய 'பண்டிதர்' தேர்விலும், சைவ சித்தாந்த சமாஜம் நடாத்திய 'சைவப்புலவர்' தேர்விலும் வெற்றி பெற்றார். பண்டிதையாகவும் சைவப்புலவராகவும் திகழ்ந்த சிவத்தமிழ்ச் செல்வி மட்டக்களப்பு சென்ற் சிசிலியா ஆங்கிலப் பாடசாலை, கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலை, அளவெட்டி சதானந்த வித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியவற்றிலே ஆசிரியப் பணி செய்துள்ளார்.

சிவத்தமிழ்ச் செல்வியின் சொற்பொழிவுப்பணி அவருடைய அறிவுத் திறனையும் புலமையினையும் வெளிப்படுத்துவதாகும். சைவ இலக்கியம், சைவ சித்தாந்தம், சமய ஒழுக்கம் முதலாக பல விடயங்கள் பற்றி இவர் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் பல இடங்களிலும் சொற்பெருக்காற்றினார். எளிமையான தமிழ்; இனிமையான குரல் — எல்லோரையும் வசீகரித்தன. ஒவ்வொரு சைவத்தமிழ் வீட்டிலும் 'தங்கம்மா' என்னும் பெயர் இடம்பெறலாயிற்று. 'தங்கம்மா அப்பாக்குட்டிக்குப் படிக்கப் போகிறேன்' என்று பிள்ளைகள் கூறுமளவுக்கு அவருடைய சொற்பொழிவுப்பணி அமைந்தது. சிதம்பரத்தில் உள்ள உயர் பாடசாலை ஒன்றிலே அவர் ஆற்றிய உரை தமிழகமெங்கும் அவருடைய பெயர் விளங்கக் காலாயிற்று. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே அவர் பேசிய பொழுது தலைமை வகித்த பேராசிரியர் சோ. சுப்பிரமணியபிள்ளை பின்வருமாறு கூறினார்.

''இங்கே பேசியவர் ஈழத்துத் தங்கம். ஈழத்துத் தங்கம் என்றால் மிகுந்த மதிப்புடையது. 22 கரட் பெறுமதியுடையது. நம்பிக்கைக்குரியது. இந்தத் தங்கத்தின் விளக்கத்தை நீங்களும் கண்டீர்கள்.'' இவ்வாறு தமிழகத்திலே அறிமுகம் பெற்ற சிவத்தமிழ்ச் செல்வி மலேசியா, சிங்கப்பூர், இலண்டன் ஆகிய நாடுகளிலே சொற்பெருக்காற்றி பலருடைய ஆதரவினையும் கௌரவங்களையும் பெற்றுக் கொண்டார். தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் சைவசித்தாந்த மாநாட்டுக்கு ஈழத்திலிருந்தும் அறிஞர்களை அழைப்பது வழக்கம், சிவத்தமிழ்ச் செல்வியின் ஆசிரியர் ஸ்ரீசுந்தரராஜா அய்யங்கார், பண்டிதர் நாகலிங்கம், சேர். கந்தையா வைத்தியநாதன் என்னும் வரிசையிலே சிவத்தமிழ்ச் செல்வியின் பெயரும் சேருகின்றது.

தெல்லிப்பழையில் சிறிதாக இருந்த ஒரு கோயில் பெரிதாக வளர்வதற்கு காலாயிருந்தவர் சிவத்தமிழ்ச் செல்வி. ஆசிரியராகவும் சமயப்பிரசாரகராகவும் இருந்த அவருடைய செல்வாக்கு தெல்லிப்பழையிலே இளைஞரும் முதியோரும் ஒருங்கிணைந்த ஒரு பெரிய தொண்டர் சபை உருவாகக் காலாயிற்று. தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் வானளாவ எழும்பியது. இந்த அன்னையினுடைய ஆளுமை அந்த ஆலயத்தின் வளர்ச்சியுடன் சமூக வளர்ச்சியையும் சேர்ப்பதற்கு வழிகாட்டிற்று. ஆலய அறங்காவற்பணியும் சிறுவர் முதியோர் நிறைவாழ்வுப்பணியும் இணைந்தன. தேவி உறையும் ஆலயம் மக்கள் சேவை செய்யும் நிறுவனமாக எப்படி அமையும் என்பதற்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் அதன் அரவணைப்பிலேயுள்ள துர்க்காபுர இல்லங்களெல்லாம் சான்றுகளாக அமைகின்றன. இந்த ஆலய வளர்ச்சியும் சமூக வளர்ச்சியும் எவ்வாறு இவராலே இணைக்க முடிந்ததென்பதனை ஆராயவேண்டுமென எங்கள் பல்கலைக் கழக சமூகவியல் விரிவுரையாளர் விரும்பினார். அவருடைய கலாநிதிப்பட்ட ஆய்வுகளுக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயமும் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆளுமையும் அந்த ஆய்வேட்டுக்குரிய கலாநிதிப்பட்டமும் இந்தப்பட்டமளிப்பு விழாவிலே வழங்கப்படுகின்றதென்று கூறுவதிலே மகிழ்ச்சியடைகிறேன். என்ன இனிமையான நிகழ்வு!

தங்கம்மா அப்பாக்குட்டிக்கு 14 நிறுவனங்கள் பட்டங்கள் வழங்கியுள்ளன. இவற்றுள் காரைநகர் மணிவாசகர் சபை 1970 இல் வழங்கிய 'சிவத்தமிழ்ச்செல்வி', ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் 1974 இல் வழங்கிய 'துர்க்காதுரந்தரி' என்பவை பெருவழக்குடையன. இலங்கை அரசு இவருக்கு சமாதான நீதிபதி, கலாசூரி, தொண்டுசீர்மாமணி ஆகிய கௌவரவப் பட்டங்களை வழங்கியுள்ளன.

இருபத்தியேழு சொற்பொழிவுகள், பத்துச் சொற்பொழிவுகள், கந்தபுராணச் சொற்பொழிவுகள் என எட்டு நூல்களுக்கு இவர் ஆசிரியர். இவற்றுள் கந்தபுராணச் சொற்பொழிவுகள் 1978 இல் சாகித்திய மண்டலப்பரிசினைப் பெற்றது. சமய இதழ்களிலும் கோயில் மலர்களிலும் பத்திரிகைகளிலும் பெருந்தொகையான கட்டுரைகள் எழுதியுள்ளார்.

எங்கள் சமூகத்திலே ஒரு சாதாரண ஆசிரியையாகத் தொடங்கிய ஒருவர் கல்வி கேள்விகளிலே வல்லவராகவும் ஆலயப்பணியையும் சமூகப்பணியையும் இணைத்து உலகளாவிய புகழ்பெற்றவராகவும் தனக்குப் பின்னே இப்பணிகளைச் செய்ய ஒரு பரம்பரையையே உருவாக்கியவராகவும் சமயத்தொண்டுக்கும் சமூகத் தொண்டுக்கும் சைவ இலக்கிய சாஸ்திர சொற்பொழிவுத் தொண்டுக்கும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவராகவும் விளங்குகின்ற சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிக்குக் கலாநிதிப் பட்டம் வழங்குவது மிகப் பொருத்தமானதே.

**- பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

## பண்டிதர் முத்தர் கந்தையா



சைவ சித்தாந்தத்தைக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் ஆராய்வதற்கும் தன்னுடையவாழ்நாளின் பெரும் பகுதியை அர்ப்பணித்தவரும் இன்று சைவசித்தாந்தத்தில் நாடு போற்றும் தலைசிறந்த அறிஞருள் ஒருவராகவும் திகழும் பண்டிதர் முத்தர் கந்தையா அவர்களுக்கு கௌரவ இலக்கியக் கலாநிதி பட்டம் வழங்கப்படுவதை முன்னிட்டு அவரை அறிமுகம் செய்வது பெருமைக்குரியது.

யாழ்ப்பாணத்தில் ஏழாலை கிராமத்திலே 1911 ஆம் ஆண்டு ஆனித் திங்களில் பிறந்த கந்தையா தமிழறிவும் வடமொழி அறிவும் ஆங்கில அறிவும் மிக நிரம்பியவர். மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வில் 1943 ஆம் ஆண்டு சித்தி பெற்று பண்டிதர் பட்டம் பெற்றார். இலண்டன் பல்கலைக்கழகத்து வெளிவாரித் தேர்விலே வெற்றி பெற்று வடமொழியில் சிறப்புக் கலைமாணிப் பட்டமும் பெற்றார்.

சைவ சித்தாந்தம் தொடர்பான ஐயங்களைத் தீர்த்து வைக்கும் அறிஞர் பண்டிதர் கந்தையா. பொ. கைலாசபதியின் சிந்தனைகளை விளக்குவதற்குப் பொருத்தமான அறிஞர் இவரே என இனங்கண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூதவை பண்டிதர் கந்தையாவிடம் அப்பணியை ஒப்படைத்தது. மூதவையின் அழைப்பை ஏற்று கைலாசபதி அவர்களுடைய சிந்தனைகளை விரிவாக விளக்கி, 'சைவசித்தாந்த நோக்கிற் கைலாசபதி ஸ்மிருதி' என்னும் பெயரில் அவர் எழுதிய நூல் விரைவில் வெளிவரவுள்ளது. 1994 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று 'சைவசித்தாந்த விளக்க விருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள்' என்னும் பொருள் பற்றித் திருவாட்டி லீலாதேவி இராமநாதன் நினைவுப் பேருரையை ஆற்றினார்.

பல இடங்களில் ஆசிரியராகப் பணியாற்றிய பண்டிதர் கந்தையா மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றி 1973 இல் ஓய்வு பெற்றார். பண்டிதர் கந்தையா அவர்கள் பல நூல்களை எழுதியுள்ளார். சித்தாந்த விளக்கியற் சைவக்கிரியைகள் (1978), சித்தாந்த செழும் புதையல்கள் (1978), அரியவும் பெரியவும் (இருபாகங்கள்) (1983; 1984), சைவசித்தாந்தத்தில் மாயை (1989), சித்தியார்த் திறவுகோல் (1991), திருக்கேதீச்சர மான்மியம் (இருகாண்டங்கள்) (1989; 1992), பெரிய புராண சூசகம் (அப்பூதியடிகள் முதல் வெள்ளானைச் சருக்கம் முடிய) (1993), பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் நான்கு, சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி (1998) ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. பெரிய புராண சூசனம் நாவலர் பெருமான் விட்ட குறையை நிரப்பியமை பெருந்தொண்டாகும். இதனை மலேஷிய சைவசித்தாந்த சமாஜம் வெளியிட்டுள்ளது,

பண்டிதர் தமது நூல்களுக்கு இலங்கை சாகித்ய மண்டலத்துப் பரிசும் சான்றோருக்கான உயர் பரிசும் பெற்றவர். மேலும் பண்டிதமணி நினைவு நிதியப் பரிசும் பெற்றவர்.

சைவசித்தாந்தத்தை வளர்த்து வரும் தென்னகத்துச் சைவமடங்கள், ஆதீனங்கள் பண்டிதர் அவர்களின் சைவசித்தாந்த அறிவைப் போற்றி நிற்கின்றன. சைவசமய விவகாரங்களில் பல நிறுவனங்களுக்கு ஆலோசகராகவும் பணிபுரிகின்றார்.

சைவசித்தாந்தத்தில் புலமைத்துவம் பெற்றவரும் ஆய்வு விற்பன்னருமாகிய ஏழாலையூர்பண்டிதர் மு. கந்தையா அவர்களுக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்குவது மிகவும் பொருத்தமானதாகும்.

**- பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர்**

# மீண்டு…

பிரிட்டிஷ் எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு (Salman Rushdie) எதிராக விதிக்கப்பட்ட மரணதண்டனைத் தீர்ப்பை தெஹ்ரான் அரசு உத்தியோபூர்வமாக நீக்கியதைத் தொடர்ந்து பிரிட்டனும் ஈரானும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ராஜதந்திர உறவில் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈரானின் வெளிவிவகார அமைச்சர் கமால் கராஸியும், பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் றொபின் குக்கும் நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்த ராஜீக உடன்பாடு ஏற்பட்டதாக மேற்குலக செய்தி நிறுவனங்கள் அறிவித்தன.

ருஷ்டியின் உயிருக்கு ஆபத்து வரக்கூடிய விதத்தில் கொலை அச்சுறுத்தல் விடுப்பதையோ, தண்டனையை விதிப்பதையோ தடை செய்யும் அதேவேளை அவரைக் கொலைசெய்ய அல்லது அவருக்கு அச்சுறுத்தல் விடுக்க முயற்சிப்பவர்களுக்கு உதவியோ உந்துதலோ அளிப்பதில்லை எனவும் இரு நாடுகளும் இணக்கம் கண்டன.

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் சென்றிருந்த ஈரானிய அதிபர் முஹமட் கதாமி எதிர்பார்க்கப்பட்டபடி ருஷ்டி விவகாரம் குறித்து ஈரானின் பிந்திய நிலைப்பாட்டை ஏற்கனவே வெளியிட்டார்.

ருஷ்டி விவகாரம் முற்றுப் பெற்றுவிட்டது; அவர் மீதான மரணதண்டனை உத்தரவை நிறைவேற்றும் எண்ணம் ஈரானுக்கு இல்லை என்று கதாமி செய்தியாளர் மாநாட்டில் கூறியிருந்தார்.

ஈரானியர்களின் அதிஉயர் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லா றுஹோல்லா கொமேனியால் விடுக்கப்பட்ட 'பத்வா' (Fatwa) எனப்படும் ஆன்மீக ஆணையை இதன் மூலம் நிராகரிக்கிறீர்களா எனச்செய்தியாளர்கள் அவரிடம் திருப்பித் திருப்பிக்கேட்டனர். ஏனெனில் ஈரானியர்களைப் பொறுத்தவரை ஆன்மீகத் தலைவரின் ஆணையை மறுதலிப்பது என்பது தற்கொலைக்கு ஒப்பானது. எனவே சீர்திருத்தங்களை விரும்பும் ஈரானின் புதிய அதிபர் கதாமி இது விடயத்தில் வார்த்தைகளை மிக அவதானமாக வெளியிட முயன்றார்.

# விவகா…

'ஆன்மீகத் தலைவரின் ஆணையை ஈரானிய அதிபர் நிராகரித்தார்' என்ற மாபெரும் தலைப்புச் செய்திக்காக மேற்குலக செய்தித் தொடர்புச் சாதனங்கள் வாயை அகலத்திறந்து காத்திருந்தன. ஆனால் கதாமி அவதானமாகப் பேசினார்.

'சல்மான் ருஷ்டி விவகாரம் முற்றுப்பெற்று விட்டது. ருஷ்டி மீதான மரணதண்டனை உத்தரவை நிறைவேற்றும் எண்ணம் அரசுக்கு (ஈரானுக்கு) இல்லை' என்று மட்டும் கூறினார் அவர். அவரது இந்தப் பதில் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் பத்திரிகையாளர்களுக்கு திருப்தி அளிக்கவில்லை.

எழுத்தாளர் ருஷ்டி விவகாரம் கடந்த ஒரு தசாப்த காலமாக ஈரானுக்கும், மேற்குலக நாடுகளுக்கும்— குறிப்பாக பிரிட்டனுக்கும்— இடையேயான ராஜீக உறவுகளை வெகுவாகப் பாதித்திருந்தது.

சல்மான் ருஷ்டி பிறப்பால் இந்தியர் ஆவார். 1947 ஆம் ஆண்டு மும்பாயில் பிறந்தவர். லண்டன் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். பின்னர் பிரிட்டனில் தங்கி வாழ்ந்தார். தற்போது அவர் பிரிட்டிஷ் பிரஜாஉரிமை பெற்றுள்

மறுபக்கம் வார வி…
நல்லூர்…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...நிம்

...வ பிரிட்டிஷ் பிரஜை
...ஈரான் விதித்த மரண
... உத்தரவு பிரிட்டனை
...நேசநாடுகளையும் சீற்ற
...ன. பயங்கரவாத நட
...க்கு ஆதரவளிப்பதாகக்
...வே ஈரான் மீது நீண்ட
...ளாதாத்ர தடையை
...எதிரிநாடான அமெரிக்
... விவகாரத்தில் பிரிட்ட
...ந்து நின்று ஈரானுக்கு
...க்கக் குரல் எழுப்பியது.

**...னின் கவிதைகள்**

...anic Verses என்ற சர்ச்
...ாவலை ருஷ்டி 1988ஆம்
...ரியிட்டார். அது ஒரு
...ாவல் அல்ல; தத்துவ
...பனைத் தேடல்களைக்
...ன் சேர்த்து புனையப்
... அது. அதன் கேளிக்கை,
...ன்மை என்பன வாசகர்
...வாகக் கவரத் தக்கவை.
... இஸ்லாமியர்களின்
...ன குரானையும், முஹ
...ர்களையும் கேலி செய்
... அதில் சில விடயங்கள்
...ற்றுள்ளன. இஸ்லாம்
... சட்டங்களை விமர்சிக்
...லும் அவை அமைந்

...ால் வெளியான சில
...ஸ்லிம் உலகில் அதற்கு
...ல[illegible] கண்டனக் குரல்
...ன. தீவிர இஸ்லாமியர்
...ல் இறங்கி ஆர்ப்பாட்
...ார். உலக முஸ்லிம்களின்
...ண்படுத்தி விட்டதாகக்
...களில் உள்ள முஸ்லிம்கள்
...தனர். அதன் விளை
...ா, பாகிஸ்தான், தென்
... சவுதிஅரேபியா உட்
...கள் அந்த நாவலைத்
...வதாக அறிவித்தன.
...ர இஸ்லாமியர்களின்
...டங்கவில்லை.
...தொடர்ந்து 1989ஆம்
...ான் ருஷ்டி மீதும் அவ
... வெளியிடுவோர், அத
...டர்புடையோர் மீதும்
...ன்மீகத் தலைவர் ஆயத்
...ஹோல்லா கொமேனி
...னை விதித்தார். அது
...மீக ஆணை. விதித்தவர்
...னை வாபஸ் பெற
...ால் [illegible] ஆன்மீகத் தலை
...னி [illegible]ன்னர் இறந்து

# ...ரம்

...வர் விதித்த ஆணை
...செய்யப்படமுடியாமல்
... கொமேனியின் வழி
...றும் உலக இஸ்லாமி
...யின் தலைக்கு விலை
...னும் இடத்தில் அவ
...வேண்டியது ஒவ்வொரு
...ும் கடமை என்றும்
... ஆன்மீகத் தலைவர்
...பால் ருஷ்டி தலைமறை
...டயிடையே பத்திரிகை
...ட்டி அளித்து வந்த

**...மர்சனம்**
**...தாஸ்**

...ந்த 9 ஆண்டுகளாக
...பிடம் ரகசியமாகவே
... வந்தது. அவரைப்
...பிரிட்டனுக்குப் பெரும்
... உருவெடுத்தது.
... பொலீஸார் அவரைப்
...ந்தனர்.
... நாவலை வெளியிட—
...ர்க்க — முயன்ற பலர்
... இலக்காகினர்; சிலர்
...னர். ஈரான் — பிரிட்
... தொடர்ந்து மோச

...ப அடிப்படைவாதம்
...ள ஒரு தருணத்தில்
...ரம் தற்போது மீண்
...பட்டுள்ளது. மரண
...த்தரவை நிறைவேற்



மரண தண்டனையை நிறைவேற்றுவதில் இருந்து விலகிக் கொள்ளப்போவதாக ஈரான் அறிவித்ததை அடுத்து லண்டன் வீதி ஒன்றில் சல்மான் ருஷ்டி முதல் முறையாக பாதுகாப்பு ஏதும் இன்றிப் பத்திரிகையாளர்களைச் சந்தித்த காட்சி.

றப் போவதில்லை என ஈரான் தெரிவித்துள்ளதால் ருஷ்டியின் உயிருக்கு பாதுகாப்பு ஏற்பட்டுவிட்டது எனக் கருதிவிட முடியாது. ஏனெனில் மத உணர்வுகளின் தீவிரத் தன்மையின் அடிப்படை அப்படிப்பட்டது. தங்கள் ஆன்மீகத் தலைவர் இட்ட கட்டளையை எப்படியாவது நிறைவேற்றி விட வேண்டும் என்ற தீவிர எண்ணம் கொண்ட இஸ்லாமியர்

கடும் கண்டனத்துக்கு உள்ளாவது வழமையே. எனினும் இஸ்லாமிய மத உணர்வுகள் பாதிக்கப்படும்போது விளைவுகள் விபரீதமாகி விடுகின்றன. பங்களாதேஷின் பெண் எழுத்தாளர் தஸ்லீமா நஸ்ரீன் விவகாரமும் இதற்கு நல்ல எடுத்துக் காட்டு ஆகும். எனினும் இத்தகைய சர்ச்சைக்குரிய எழுத்தாளர்கள் தமது கருத்துச் சுதந்திரத்தைப்

# ருஷ்டி

கள் உலகெங்கும் உள்ளனர்; ஏன் ஈரானிலேயே இன்னும் உள்ளனர். எனவே ருஷ்டி தனது வாழ்நாள் முழுவதும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியே இருக்கும்.

இஸ்லாமிய மத அடிப்படை வாதத்தில் ஊறித் திளைத்த ஈரானில் அடிப்படை உரிமைகள் மதத்தின் பெயரால் கட்டுப்படுத்தப்பட்டு வருவது உண்மையே. இஸ்லாமிய ஆட்சியாளர்கள் அதிகாரத்தில் உள்ள பெரும்பாலான நாடுகளில் மதத்துக்கே அதிமுன்னுரிமை வழங்கப்படுகிறது.

பாதுகாத்துக் கொள்வதற்காக மேற்கு நாடுகளின் கைப்பொம்மைகளாக மாறிவிடுகின்றனர்.

இஸ்லாமிய அடிப்படை வாதத்துக்கு எதிரான மேற்குலக பிரசாரத்துக்கு ருஷ்டியும், தஸ்லீமா நஸ்ரீனும் நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளனர். அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் கீழைத்தேச நாடுகளில் சர்ச்சையில் சிக்கும் எழுத்தாளர்களுக்கு அடைக்கலம் அளிப்பதில் அதி தீவிர அக்கறை காட்டுகின்றன. பெரும்பாலான மனித உரிமை அமைப்புகளும் மேற்குலகம் சார்ந்து

சல்மான் ருஷ்டியைப் போலவே கடும் சர்ச்சையிலும் உயிராபத்திலும் சிக்கியிருப்பவர் தஸ்லீமா நஸ்ரீன் என்ற பங்களாதேஷ் நாட்டுப் பெண் எழுத்தாளர்.

'லஜ்ஜா' (வெட்கம்) என்ற தனது நூலில் இஸ்லாமியச் சட்டங்களை, சடங்குகளை அவதூறு செய்தார் என அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் முஸ்லிம்கள் அவரது தலைக்கு விலை பேசினர். இஸ்லாத்தை அவமதித்ததற்காக அவரைக் கைது செய்து தூக்கில் இடுமாறு கோரி 1994 ஆம் ஆண்டு தஸ்லீமா மீது வழக்கு தொடுக்கப்பட்டது. அதனையடுத்து அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படவே அவர் தலைமறைவாகி ஐரோப்பாவில் தஞ்சமடைந்தார். பின்னர் அமெரிக்காவில் தங்கி வாழ்ந்தார்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி நியூயோர்க்கிலிருந்து அவர் தாயகம் திரும்பியுள்ளார். அதனையடுத்து அவரை கைது செய்து கல்லால் அடித்துக் கொல்லுமாறு பங்களாதேஷ் இஸ்லாமிய அடிப்படைவாதத் தலைவர்கள் கோரி வருகின்றனர். தஸ்லீமாவைக் கைது செய்யுமாறு முன்னர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நிறைவேற்றுமாறும், அவரது சொத்துக்களைக் கைப்பற்றுமாறும் டாக்கா நீதிமன்றம் ஒன்று மீண்டும் உத்தரவிட்டுள்ளது.

★

'மதத்தை (இஸ்லாத்தை) நிந்தனை செய்வோர் எவராயினும் அவரைக் கொல்க' என்பது ஆன்மீக ஆணையாக உள்ளது.

மத உணர்வுகளைப் புண்படுத்தும் நாவல்கள், நாடகங்கள், திரைப் படங்கள் எப்போதும் ஒரு சாராரின்

இயங்குவதால் அவைகளும் இத்தகையோருக்காக உரத்துக் குரல் கொடுக்கத் தவறுவதில்லை.

[illegible] பிரதான காரணங்களாகும்.

★

# காலத்தை வென்ற தருமர்

பஞ்சபாண்டவர்கள் முக்கிய ஆலோசனையில் இருந்த போது, அந்தணர் ஒருவர் தானங்கேட்டு வந்தார்.

''அந்தணரே! நாளை வாரும்'' எனக் கூறிவிட்டார் தர்மர். உடனே அங்கிருந்த பீமன், முரசை எடுத்து வேகமாக அறைந்து ஒலி எழுப்பினான்.

''பீமா! ஏன் இப்போது முரசறைந்தாய்?'' என்று தர்மர் கேட்டார்.

''அண்ணா! நீங்கள் காலத்தை வென்று விட்டீர்கள். அதைத் தெரிவிக்கத்தான் முரசறைந்தேன்'' என்றான் பீமன்.

''என்ன பீமா சொல்கிறாய்? நான் காலத்தை வென்றேனா? எப்படி?'' என்றார் தர்மர்.

''ஆமாம், நாளை இருப்பது நிச்சயம் என்று நீங்கள் நம்புவதால்தான் அந்தணரைத் தானம் பெற நாளை வரச் சொல்கிறீர்கள். ஆகவே நீங்கள் காலத்தை வென்றவர்தானே!'' என்றான்பீமன்.



பீமனின் பதில் தர்மருக்கு உண்மையை உணர்த்தியது. உடனேயே அந்தணர்க்கு தானம் அளித்துச் சிறப்பித்தார் தர்மர். ★

# ஹிட்லரை மன்னிப்பு கோர வைத்த தமிழர்!

**84** ஆண்டுகளுக்கு முன்னால்......1914 ஆம் ஆண்டு செப்டெம்பர் 22 ஆம் நாள்...... அமைதிக்குப் பெயர் போன சென்னை மாநகரத்தை அதிர்ச்சி அலைகள் ஆட்கொண்டன.

முதலாம் உலகப்போரின் போது, ஜேர்மனியப் போர்க் கப்பலான ''எம்டன்'' சென்னை நகரைநெருங்கிக் குண்டு வீசிய நாள்தான் இந்த செப்டெம்பர் 22! உலகப் போர்த் தாக்குதல்கள் தென்னிந்தியாவரை ஊடுருவ இயலாது என்றிருந்த எண்ணங்களைத் தகர்த்து ஆங்கிலேய ஆதிக்கச் சின்னமாக விளங்கிய செயின்ட் ஜோர்ஜ் கோட்டையை நோக்கிக் குண்டுகளை வீசியது ''எம்டன்.''

எம்டனின் இத்தாக்குதல் சென்னை மக்களை அதிர்ச்சியுடன் கூடிய வியப்பிலாழ்த்தினாலும், அப்போது முதல் 'துணிவு, வீரதீரம்' ஆகியவற்றைக் குறிக்க ஒரு புதிய சொல் புழக்கத்திற்கு வந்தது. ''பலே எம்டன்!'', ''பெரிய எம்டனப்பா இவன்!'' என்றெல்லாம் முழக்குகள் தோன்றி இன்றும் வழங்கப்பட்டு வருகின்றன.

'எம்டன்' என்கிற அப்போர்க் கப்பலுக்குத் தலைமை ஏற்று வந்ததும் ஒரு தமிழர்தான்! 'ஜெய்ஹிந்த்' செண்பகராமன் பிள்ளை என்பவரே அவர்.

நாஞ்சில் நாட்டில் பிறந்த செண்பகராமன், இளம் வயதிலேயே, ஐரோப்பிய நண்பர் ஒருவரின் உதவியால் ஜேர்மனி சென்றார். வெளிநாட்டிலிருந்து பணியாற்றி, ஜேர்மனியின் உதவியுடன், ஆங்கில ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுவித்திடவேண்டும் என்று உறுதி பூண்டார்.

ஜேர்மானியக் கடற்படையில் பணியாற்றிய காலத்தில்தான், முதல் உலகப்போரில், ஆங்கில ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த துறைமுக நகரங்களைத் தாக்கித் தீன் எதிர்ப்பைக் காட்ட முடிவு செய்த செண்பகராமனுக்குச் சென்னையின் செயின்ட் ஜோர்ஜ் கோட்டையையும் தாக்கும் எண்ணம் ஏற்பட்டது. அவரின் இலக்கு இந்திய மக்களல்ல; ஏகாதிபத்தியம் நடத்திக்கொண்டிருந்த பிரிட்டிஷார் மட்டுமே!

அந்நிய மண்ணிலிருந்து கொண்டு அன்னை நாட்டிற்காகப் போராடிய செண்பகரராமனின் வாழ்வு, இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னமேயே முடிந்து போனது.

இருப்பினும் அவரின் வாழ்வு நமக்குக் கற்றுத்தரும் துணிகரச் செய்திகள் பற்பல.

''ஜெய்ஹிந்த்'' என்கிற வீரமுழக்கத்தை, முதன் முதலில் 1907 ஆம் ஆண்டிலேயே கொடுத்தவர் செண்பகராமன். பின்னால் பல ஆண்டுகளுக்குப்பிறகு, நேதாஜி சுபாஸ் சந்திர போஸைச் சந்தித்தபோது, செண்பகராமன் இதனை அவரிடம் கூற, ''ஜெய்ஹிந்த்'' என்பதை விடுதலைப் போராட்டப் பெருமுழக்கமாகப் பரவவிட்டார் நேதாஜி.

ஜேர்மானிய உதவியோடு இந்திய நாட்டிற்கு விடுதலை பெற்றுவிட வேண்டுமென்று அயராது உழைத்தார் செண்பகராமன். தேச விடுதலை பெற அவரவர் தத்தமக்குப் பொருத்தமாகத் தோன்றிய வழிகளிலெல்லாம் போராடிக் கொண்டிருந்த காலம்; அடக்கமான ஆரவாரமற்ற முறைகளில் சிலரும் அஹிம்சா வழிகளில் சிலரும், இன்னும் பற்பல வகைகளில் சுதந்திரம் பெறத்துடித்த காலம்! ஜேர்மன் நாட்டிலே பலகாலம் தங்கி, அங்கேயே கல்வி பயின்று, அந்நாட்டுப்படையின் உதவிபெற்றபோதும், தாயகம் தவறாகப் பேசப்பட்டால் பொறுத்துக் கொள்வதென்பது செண்பகராமனின் அகராதியில் இருக்க வில்லை.

''இந்தியாவிற்கு விடுதலை பெறும் அருகதை இல்லை'' என்கிற ரீதியில் ஹிட்லர் ஒருமுறை பேசிவிட, அதைக்கேட்டு கொந்தளித்துவிட்டார் செண்பகராமன். தான்சொன்ன சொல் தவறு என்று ஆனானப்பட்ட ஹிட்லரே மன்னிப்புக்கேட்கும்வரை விடவில்லை. விளைவு? யாருக்கும், எதற்கும் அஞ்சியிராத ஹிட்லர், பகிரங்கமாகப் பொது மன்னிப்புக் கேட்ட ஒரு நிகழ்ச்சி, செண்பகராமனால் வரலாற்றில் இடம்பெற்றது.

வழிகள், முறைகள் மாறுபட்டாலும், 'தேசம்' என்பது கேள்விக்குறியாகும்போது அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்பதை செண்பகராமனின் வாழ்க்கை விளக்கும். இத்தகைய ஒற்றுமைச் சிந்தனை இந்திய தேசியத்தின் ஆணிவேர். பிற்காலத்தில் இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்னால்—ஜப்பான் வீழ்ந்து விட்டபின்னால்— இந்திய தேசியப் படையின் அதிகாரிகள் தில்லான், ஷா நவாஸ் சான், செய்கல் ஆகியோர் ராஜதுரோகக் குற்றத்திற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தால் கைதுசெய்யப்பட்டனர்.

பிரபலமான ''செங்கோட்டை விசாரணை'' தொடங்கியது. எந்தக்காங்கிரஸ் போர்க்காலத்தில் பிரிட்டிஷ் அரசோடு துணை நின்றதோ, அதே காங்கிரஸ், தன் நாட்டு அதிகாரிகளை விட்டுக் கொடுக்கத் தயாராகவில்லை. புலாபாய்தேசாய், ஜவஹர்லால் நேரு, சர்தார் பட்டேல் உள்ளிட்ட பெரியதொரு வழக்கறிஞர் பட்டாளம் இந்திய தேசியப்படை அதிகாரிகளின் சார்பாக வாதிட்டது; அந்த அதிகாரிகள் விடுதலை செய்யப்பட்டனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவ நதி

ஆடிக்காற்றின் வீச்சத்தில் ஏனோ ஓர் இனம் புரியாத அமைதி கலந்திருப்பது போலத் தென்பட்டது. பனைகளும் தென்னைகளும் எந்தவித எதிர்க்குரலும் இல்லாமல் அசைந்தாடின. கொட்டில் கிடுகுகள் எல்லாம் ஒரு தடவை உயரக் கிளம்பி அமர்ந்தன.

கொட்டிலைவிட்டுவெளியே ஒரு மெலிந்த உருவம் வெளி வந்தது. அது மீனாட்சிக் கிழவி என்பது சிறிது கூர்ந்து பார்த்தால் புலப்படும். கடந்த சில வருடங்களில் அவளின் தோற்றம் பலவிதமாக மாறிவிட்டது. வாழ்வில் இழக்கக் கூடாத ஒன்றை இழந்ததால் அவள் இப்படியாகி விட்டாள்.

வெளியே வந்த மீனாட்சி அண்ணாந்து பார்த்தாள். முற்றத்து மூலையில் நின்ற ஒற்றைப் பனையில் முட்டி ஒன்று நாரினால் அனாதரவாக ஆடிக்கொண்டிருந்தது. அதில் இறுதியாய் எத்தனை முட்டிகள் இருந்தன? ஏழா? எட்டா? எல்லாம் உடைந்து போய்விட்டன. கடைசியாயும் எத்தனை இருபத்தைந்து போத்தல் இறக்கியிருப்பானா?

மீனாட்சி கொட்டிலின் கப்பில் சாய்ந்து கொண்டு பெருமூச்சு விட்டாள். ஒரே மகன்—ஆசைமகன்—ஆளாக்க எவ்வளவு கஷ்டப்படவேண்டி இருந்தது. தகப்பன் இல்லாத போது நாரிமுறியக் கூலி வேலை செய்தல்லவா இரத்தம் ஊறவைத்தது? எத்தனை ஏச்சுக்கள், வம்புச்சேட்டைகள், கேலிகள் தாண்டி வர வேண்டி இருந்தது. ஆண் இல்லாத வீடென்றால் அது

**சஞ்சீவி சிறுகதை**

வேசை வீடென்று நினைப்பவர்களின் மத்தியில் எப்படியெல்லாம் அவனை வளர்க்க கஷ்டப்பட வேண்டியிருந்தது!

எல்லாத்துயரும் கரைய ஒரு நாள் நிமிர்ந்து நின்றானே ஆண் மகன் தானென்று. வீச்சு நடையும், —— விண்ணென்ற அதிர்வும்! திமிரென்ற பேச்சும். அடடா! அவனைப்பிரிந்துஎப்படி வாழ



'ஸ்' என்ற சத்தத்துடன் இரையும் கள்ளைப் பார்க்கும் போது மனதில் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும். விளைபொருளைப் பார்க்கும் போது யாருக்கு சந்தோஷம் வராது? சின்ன வயதில் எத்தனை கெட்டிக்காரனாக, தொழில் நுணுக்கம் தெரிந்தவனாக இருந்தான்! தகப்பனுக்குக்கூட இவ்வளவு இலாவகம் தெரிந்ததில்லை.

ஊர் முழுக்க பனை. ஓடி ஓடி ஓய்வில்லாமல்த்தொழில். சங்கத்தில் எத்தனையோ வயதான அனுபவமான தொழிலாளிகள் இருந்த போதில்கூட சம்பளம் எடுப்பது அவன்தான். சம்பளக் காசை முன்னால் இருந்து எண்ணி, அவளிடம் தரும் போது அவன் முகத்தில் இருக்கும் மகிழ்ச்சி, சந்தோஷம், எல்லாம் ஏன் ஒரு நாளில் முடிந்து போயிற்று? கனவாகி கலைந்துபோயிற்று? விதியா? விளையாட்டா?

முடிகின்றது? பனையேறத் தொடங்கிய பத்தாம் நாளில் ஓடிப்போயிற்று வறுமை வீட்டைவிட்டு. சகல ஆசைகளையும் தீர்த்து வைக்க எப்படி மாடாய் உழைத்தான்? அவையெல்லாம் தேவையில்லை. அவனாவது திரும்பி வருவானா?

பதினைந்துவயதில்தொழில் தொடங்கி இருப்பான். ஒவ்வொரு போகமும் ஐம்பது பனைக்குக் குறையாது. அவனின்ரை ஊக்கத்தைப் பார்த்த பின்தான் ஊரில் பலர்உழைக்கப் புறப்பட்டனர்.

ஆனால்அவனுடன் போட்டி போடமுடியாமல் இருக்கும் இந்த சக்தி அவனுக்கு கடவுள் கொடுத்ததா? அதுதான் பறித்து விட்டானா? இல்லை அவன் எப்படியும் திரும்பி வருவான்.

ஒரே மகன். ஆசை மகனை இருபது வயதில் இழக்க மனம் வருமா? பார்த்தால் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

எத்தனை குமரிகள் வாய் விட்டுச் சொல்வார்கள். ''உன்ரை மோன்தானெனை ...'' மிகுதியை சொல்ல விக்குவார்கள். மிகுதி என்ன அழகனா? ஆம்பிளையா? எதுவும் வேண்டாம். ஒரு தடவை — ஒரேயொரு தடவை — அவன் முகத்தை, முகத்தை மட்டும் பார்க்க முடியுமா? வருவானா? இந்த ஆச்சியைத் தேடி, ''ஆச்சி''......என்று உச்சி குளிர ஒரு தடவை கூப்பிடுவானா?

நேற்றுக் கூட கனவில் வந்தான். கட்டுமஸ்தான உடம்பு முழுக்க ஏதோ தழும்புகள். மெலிந்து சுருண்டு போயிருந்தான். கண்கள் குழிக்குள் ஒளிந்து போய்க் கிடந்தன. நொண்டி, நொண்டி மணலுக்குள்ளால் நடந்து வருகின்றான். ''ஆச்சி'' கூப்பிட்ட குரலுக்கு இவள் எழுந்து ஓடுகின்றாள். இவள் கிட்டப் போகப் போக அவன் பின்னுக்குப் பின்னுக்குப் போகிறான். இவள் இரு கைகளையும் நீட்டுகின்றாள். ஆனால் அவன் வேகமாகப் பின்னுக்குப்போய் கட்டை ஒன்றில் பிடரியடிபட விழ, இவள் ''தம்பி'' என்று பெலத்துக் கத்த, விழிப்பு...

ஓ...கனவா எல்லாம் கனவா? எழுந்திருந்து விடியுமட்டும் அழுது தீர்க்கத்தான் முடிந்தது.

**- கோகுலராகவன் -**

எப்போதுமில்லாதவாறு இப்போது மூப்பு முட்டிக் கொண்டு வந்துவிட்டது. அவனைக் காணாத நாளில் இருந்து இவ்வுலகம் அவளிடம் இருந்து அந்நியப்பட்டுப் போய்விட்டது. இரவு, பகல், காலை, மாலை, பேதம் எதுவும் தெரியவில்லை. உடல் மட்டும் இவ்விடம் — உயிர் மகனிடம்.

காலையில் பனிமூட்டம் நிறைந்த பொழுதுகளிலும் அவன் சுருண்டு படுத்திருப்பதில்லை. பொழுது வெளிக்க முன் அவன் தீட்டுக் குற்றியில் கத்தி தீட்டிக்கொண்டிருப்பான்.

''ஆச்சி தேத்தண்ணியை வையெணை எழும்பி...''

அங்கிருந்து குரல் கொடுப்பான். அதன் பின்தான் இவள் எழும்பி அடுப்பு மூட்டுவாள். ஒற்றைத் தேத்தண்ணியோடு போனால் பொழுது உச்சிக்கு வருவதற்குக் கொஞ்சம் முன்னாகத்தான் தொழில் முடித்து வருவான். அவன் காணாமல்போன பிறகு தீட்டுக் குற்றி கறையான் பிடித்து அரித்துப் போய்க் கிடந்தது.

ஒருநாளும் களைத்து எரிந்து விழுந்ததில்லை. மத்தியானம் சங்கத்துக்குப் போய் விட்டு வந்தால் கொஞ்ச நேரம் படுப்பான். பின்னரும் மூன்று மணிக்கு தொழிலுக்குப் புறப்பட்டுவிடுவான். எல்லாம் ஒழுங்கான நேரத்துக்குத்தான செய்வான். அவனின் வேகம், தோற்றம் எல்லாம் பார்த்தால் நோஞ்சானுகளுக்குக் கடுமையான பொறாமை வரும். அவன் நடை நேர்த்தியாக, நிதானமாக இருக்கும்.

அன்றொருநாள் கூட வீட்டுக்கு வந்த ஒருவன் இவனை முறைத்து, முறைத்துப்பார்த்தான். உடம்பைத் தட்டிப் பார்த்தான். கையை ஓங்கினான். இவள் ஓடிப்போய் இன்ன தொழில் என்று சொன்ன பின்தான் விட்டு விட்டுப் போனான். ஆனால் அடுத்தமுறை வந்த போதும் அவ்விதமே முறைத்தான். அப்போதுதான் இவள் உணர்ந்தாள் இவன் தோற்றத்தில் வந்தவனுக்கு எரிச்சல் ஏற்பட்டு இருக்கின்றது என்று.


ஐயோ! அவன் தோற்றம் தான் அவனுக்கு எதிரியாகிறது; அவன் தோற்றம் அப்படி வர இவள் எவ்வளவு கஷ்டப்பட்டாள் என்று அவளுக்கு அல்லவா தெரியும்?

[illegible] யிருக்க வந்தார்கள். நிம்மதி

(XIII ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 70



சொற்சிலம்பம் இல. 70
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ....................................................

விலாசம்: ....................................................

....................................................

.................... இங்கே வெட்டுக .....................

**முடிவு திகதி; 09 — 10 — 1998**

**இடமிருந்து வலம்**

1. துணிவில்லாதவருக்கு இங்கு எலும்பு இல்லை என்பர். 4. நீங்கள் வாசிப்பது இதில். 7. ஆலயத்தில் பேரொலி எழுப்புவது. 9. சாப்பிடு. 10. தழும்பு. 11. வாயிலில் இருப்பது. 12. காணச் சகிக்க முடியாதது. 13. பழமையைக் குறிப்பது. 14. ஊனீர். 15. திருடு. 16. வெளிச்சம் இருக்கும் வேளை. 17. பிறன்மனை நோக்கா இயல்பை இப்படிக் கூறினார் திருவள்ளுவர். 19. பசுமையான தன்மை. 20. கடினமானது என்பதைக் குறிக்கும். 21. இது விட்டால் மாணவருக்குக் கொண்டாட்டம். 22. சூறாவளியுடன் வருவது.

**மேலிருந்து கீழ்**

1. விலாசம். 2. வெட்டினால் வருவது. 3. மூன்று பக்கம் தரை சூழ்ந்த கடல் பகுதி. 4. கூட்டல், கழித்தல் பாடம். 5. தோழி என்றும் பொருள். 6. சிறியது. 8. ஓர் இராசி. 12. நேர் அற்றது. 13. வேறுபாட்டால் வருவது. 14. சொற்பயன் விளக்கும் அகராதி. 15. ஒரு சரக்குப் பொருள். 16. போட்டி இதற்குத்தான். 17. பெண் பறவை. 18. காதல். 20. களங்கம்.

**சொற்சிலம்பம் — 68 விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. அநாதி. 4. தகராறு. 7. திட்டவட்டம். 9. காடு. 10. தடம். 12. மனம். 13. மதி. 14. பலம். 15. சணல். 16. தண்டி. 17. விரல். 18. வடி. 19. சடாயு. 21. சிகைக்காய். 22. சோடி.

**மேலிருந்து கீழ்**

1. அதிகாரி. 2. நாட்டு. 3. திட. 4. தட்டம். 5. கடம். 6. ராம். 8. வதனம். 11. பதில். 12. மலடி. 13. மணல். 14. பண்டிகை. 15. சரயு. 16. தவசி. 17. விடாய். 19. சகா. 20. நாடி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற் பரிசு:** ஜெயந்தினி யோகேஸ்வரன்,
களபாவோடை,
ஏழாலை தெற்கு, ஏழாலை.

★ **இரண்டாம் பரிசு:** சு. யசோதரன்,
குடமியன்,
வரணி.

★ **மூன்றாம் பரிசு:** க. இந்திரன்,
198, அரசடி வீதி,
கந்தர்மடம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்,

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:. | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 69 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாந்தி பேதி!

'வாந்திபேதி' அல்லது 'கொலரா' எனும் நோயைப்பற்றி நாம் எல்லோரும் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

வாந்தியுடன் கூடிய வயிற்றோட்டத்தை ஏற்படுத்தும் இந்நோய் குறித்து கடந்த வாரத்தில் இருந்து யாழ். குடாநாட்டில் எச்சரிக்கை மணி எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ் விசேட கவனம் கடந்த ஆண்டு இறுதியில் நீர்கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட — இலங்கையின் தென்மேற்கு கரையோர — மாவட்டங்களில் ஏற்பட்ட திடீர் 'கொலரா' பரவுகையைத் தொடர்ந்து இருந்து வருகிறது.

இலங்கை சுகாதார அமைச்சு மிகுந்த அக்கறையுடன் இருந்தாலும் கொலரா கடந்த ஒருவருட காலப் பகுதியில் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில் கடந்த வருடத்திலும் பார்க்க அதிகளவில் பரவி வருகின்றது.

வயிற்றோட்டம் என்பது எம்மில் அநேகருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் கொலரா வயிற்றோட்டம் என்றதும் ஏன் இப்படி எல்லோரும் ஆரவாரப்படுகிறார்கள்?

கொலரா ஓர் உலகளாவிய தொற்றுநோய். ஒரு குறித்த நாட்டில் தொடங்கி உலகின் பல நாடுகளுக்கும் விரைவில் பரவி விடும். பின் சில ஆண்டுகளுக்கு ஓய்ந்திருக்கும். அதன்பின் மீண்டும் இவ்வாறு பரவும்.



வாந்திபேதி நோய் கண்டவரை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பது சிறந்தது.

இவ்வாறு ஏழு தடவைகள் கொலரா உலகைத் தாக்கியுள்ளது. இப்பொழுது நடப்பது ஏழாவது தாக்குதல். முதலாவது தாக்குதல் (Epidemic) 1815 ஆம் ஆண்டளவில் என பதியப்பட்டுள்ளது.

ஆரம்பகால தாக்குதல்கள் மேற்குலகையும் பாதித்தன என்றாலும் பின்னர் இது ஆசியா கண்டம், ஆபிரிக்கா கண்டம், தென் அமெரிக்கா ஆகிய பகுதிகளையே அதிகம் பாதித்திருக்கிறது, அதிலும் குறிப்பாக இந்திய தேசத்திலிருந்தே இது உலகம் எங்கும் பரவுவதாக அறியப்பட்டுள்ளது.

போக்குவரத்து அதிகம் விருத்தியடையாத — 19 ஆம் நூற்றாண்டிலேயே — கண்டம் விட்டுக் கண்டம் பரவியதிலிருந்து, இந்நோய்க்காரணியின் பரம்பல் வீரியத்தை நாம் புரிந்து கொள்ளலாம். கண்டம் விட்டுக் கண்டத்துக்கு கப்பலில் செல்லக்கூடிய இக் கிருமிக்கு, திருமலையிலிருந்து யாழ்ப்பாணம் வருவதில் கஷ்டம் இருக்க முடியாதுதானே!

### நோய்க்காரணி

இந்நோயானது Vibrio Cholera எனும் ஒரு பக்றீரியாவினால் ஏற்படுகின்றது. மனிதனில் மாத்திரமே இந்த பக்றீரியா உயிர் வாழ்ந்து, பெருக்கமடைகிறது. எனினும் நன்னீரில் 14 நாள்கள் வரையிலும் உவர் நீரில் (கடல் நீரில்) மற்றும் இறால், நண்டு, கணவாய், கடல் பிளாந்தன்கள் போன்றவற்றில் 7 நாள்கள் வரையிலும் இது உயிருடன் இருக்கும். நீரைக் குளோரினேற்றும் போதும் கொதிக்க வைக்கும்போதும் உடனடியாக இறந்து விடும். அதே போல் உலர்நிலையிலும் விரைவில் இறந்து விடும்.

### பரம்பலும் தொற்றலும்

மனிதனின் சிறுகுடலில் பெருக்கமடைந்து பெரும் எண்ணிக்கையில் மலத்துடன் இந்த பக்றீரியாக்கள் வெளியேறுகின்றன. ஒரு மில்லி லீற்றர் மலத்தில் பத்துக் கோடி பக்றீரியாக்கள் காணப்படும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

இவை பல்வேறு வழிகளில் மனிதன் உள்ளெடுக்கும் நீர், உணவு ஆகியவற்றைச் சென்றடைகின்றன.

அவற்றுள் சாத்தியமான சில வழிகளாவன.

★ நோயாளியின் அல்லது நோய்க்காவியின் சுத்தம் செய்யப்படாத கைகளில் இருந்து —

★ இலையான்களின் ஊடாக —

★ கிணற்றினுள் வெள்ளநீர் சேரும் சந்தர்ப்பத்தில் —

★ கடற்கரை மற்றும் மலம் வெளிகளில் கழிக்கும் போது —

ஆகியனவாகும். சுருக்கமாகச் சொன்னால் நோயாளியின் அல்லது காவியின் மலம் எமது உணவை அல்லது நீரை சென்றடைய வழியிருந்தால் Vibrio Cholera வும் அங்கு செல்லலாம்.

இவ்வாறு உட்செல்லும் இந்த பக்றீரியா சிறுகுடலினுள் சென்று பெருக்கமடையும். இவை குடலின் அகவணிக் கலங்களின் வெளிப்புறத்தில் காணப்படுமே தவிர அவற்றை ஊடறுத்து குருதிக் கலன்களினுள் செல்வதில்லை. இங்கிருந்த வண்ணம் அவை ஒரு மோசமான நச்சுப் பதார்த்தத்தை (Enterotoxin) சுரக்கின்றன. இந்தப் பதார்த்தம் அகவணிக் கலங்களினுள் சென்று அவற்றின் கலத்தொழிற்பாடுகளுக்குரிய கட்டளை ஒழுங்குகளில் குழப்பத்தை உண்டுபண்ணி விடுகின்றன. இதனால் இந்த அகவணிக் கலங்கள் வழமையாக தாம் சுரக்கும் காரத் தன்மையான கனியுப்பு கரைசலை கட்டுப்பாடின்றி சுரக்கத் தொடங்கி விடுகின்றன. இச்சுரப்பு சளியத்துடன் சேர்ந்து வயிற்றோட்டமாக அதிகளவில் வெளிப்படுகிறது. இவ்வாறு வெளியேறும்போது பெரும் எண்ணிக்கையான பக்றீரியாக்களையும் சேர்த்தே வெளியேற்றுகின்றது,

இந்த பக்றீரியா குடலைச் சென்றடைந்ததிலிருந்து 6 மணித்தியாலங்களிலிருந்து 4 நாள்களுக்குள் மேற்குறிப்பிட்ட மாற்றம் நிகழ்ந்து விடும். வயிற்றோட்டம் ஆரம்பத்தில் சிறிதளவு 'மலத்தைக்' கொண்டிருப்பினும் மோசமடைய அடைய நீரும் சளியமும் கொண்ட திரவமாக நோயாளியின் கட்டுப்பாட்டை மீறி வெளியேறத்தொடங்கும். அது அரிசிக் கஞ்சிபோல் ஏறக்குறைய காணப்படும். மோசமாக பாதிக்கப்படுவர்களில் ஒரு நாளில் 10 தடவைக்கு மேல் வயிற்றோட்டம் காணப்படும். சிலருக்கு வாந்தியும் சேர்ந்து கொள்ளும். இன்னும் சிலருக்கு வயிற்றில் நோ இருக்கும். இவையே Vibrio Choleraவின் நேரடிப் பாதிப்பால் ஏற்படும் அறிகுறிகள். இவை தவிர தலைச்சுற்று, நெஞ்சு படபடத்தல், கண்கள் உள்ளடங்கல், மயக்கம் போன்ற அறிகுறிகளும் காணப்படும். இவை அதிகரித்த நீரிழப்பின் அறிகுறிகளாகும்.

எமது குருதிச் சுற்றோட்டத் தொகுதி வினைத்திறனுடன் இயங்குவதற்கு அதன் கனவளவு (நான்கு முதல் நாலரை லீற்றர்) ஓரளவிற்கு மேல் குறைவுபடாமல் இருக்க வேண்டும். எமக்கு தெரிந்தது போல் குருதிதான் எமது உடலின் எல்லாக் கலங்களுக்கும் உணவு மூலக்கூறுகளையும், ஒட்சிசனையும் கொண்டு செல்கிறது. அதேவேளை அவற்றில் உருவாகும் கழிவுப் பொருள்களையும் அங்கிருந்து அகற்றுகிறது. இச்செயற்பாடுகள் மெல்ல மெல்ல ஸ்தம்பிதம் அடைவதாலேயே மேற்குறித்த விளைவுகள் ஏற்படுகின்றன.

வயிற்றோட்டத்தால் நீரிழக்கப்பட — அதனால் குருதியின் கனளவு குறைவுபட — ஏற்படும் நேரடி விளைவுகளே இவை.

### சிகிச்சையும் நோய்த்தடுப்பும்

மேலே குறிப்பிட்டதிலிருந்து எமால் ஊகிக்கக்கூடிய ஒரு விடயம்— இந்நோய்க்கு முதல் சிகிச்சை நீர் மற்றும் கனியுப்பு இழப்பை ஈடுசெய்தல் என்பதாகும்.

இதற்கு சிறிது கறியுப்பு கலந்த நீர், இளநீர், தேநீர், கோப்பி ஆகியவறறை தனியாகவோ மாற்றி மாற்றியோ கொடுக்கலாம். அது தவிர ஜீவனி என்று அழைக்கப்படும் (Oral Rehydration Salt) உப்பு பக்கெற் இருப்பின் நல்லது. இதில் 1 பக்கற்றை ஒரு லீற்றர் கொதித்தாறிய நீரில் (அண்ணளவாக ஐந்து டம்ளர்) கரைத்து தொடர்து வழங்கலாம். இந்த ஜீவனியை உங்கள் பகுதி பொதுக் சுகாதார அதிகாரியிடம் அல்லது பொதுச் சுகாதார மாதுவிடம் கேட்டு வாங்கலாம்.

இவ்வாறு நீரிழப்பை தகுந்த முறையில் ஈடு செய்தால் மருந்து மாத்திரையின்றி ஓரிரு நாள்களில் வயிற்றோட்டம் நின்றுவிடும். எனினும் இந்நோயால் பீடிக்கப்பட்டால் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அருகிலுள்ள மருத்துவ மனையை நாடவேண்டும். ஏனெனில் நீரிழப்பினால் ஏற்படும் சிக்கல்கள் பலவாகும், அதைத் தவிர்பதற்கு விரைந்து மருத்துவ உதவி பெறுவது அவசியம்.

இங்கு குறிப்பாக அறிய வேண்டிய மற்றொரு விடயம் யாதெனில் பலர் இந்த பக்றீரியாவைக் காவித்திரிந்தாலும் அதற்கான அறிகுறி எதையும் காட்டமாட்டார்கள் என்பதாகும்.

நோயால் பாதிக்கப்படுவோர்களிலும் 90 வீதமானோருக்கு மிதமான அல்லது ஓரளவு கடுமையான வயிற்றோட்டம் மட்டுமே ஏற்படும். வாந்தி அநேகருக்கு இருக்காது. இவர்களே —சுகாதார பழக்கவழக்கங்களை உதாசீனம் செய்யும் பட்சத்தில்-பிரதானநோய்பரப்புவோராகின்றனர். பத்து வீதமானோருக்குகே மேலே குறிப்பிட்ட கடும் அறிகுறிகள் தென்படும். அவர்களிலும் அதிகம் சிறுவர்களையே இந்நோய் மோசமாக பாதிக்கின்றது.

நீர், கனியுப்பு இழப்பானது பெரியோரைவிட சிறுவர்களிலும், குழந்தைகளிலும் விரைவில் பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றது. எனவே வயிற்றோட்டம் என்று கண்டால் அது கொலராவாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்துடன் செயற்படுங்கள்.

இக்காலப் பகுதியில் நாம் பின்வரும் சுகாதாரப்பழக்கவழக்கங்களை கைக்கொள்வதன் மூலம் இந்நோய்த் தொற்றலையும் பரம்பலையும் தடுக்க முடியும்.

★ எப்போதும் கொதித்தாறிய நீரைப் பருகுங்கள்.

## வருமுன் காப்போம்!!

★உணவு சமைப்பதற்கு முன்பும் மலசலகூடம் சென்று வந்த பின்பும் கைகளை சவர்க்காரம் கொண்டு கழுவுங்கள்.

★ கீரை, இறால், நண்டு, கணவாய் போன்ற உணவு வகைகளை நன்கு கொதிக்கும் வரை சமைத்த பின்பே உண்ணுங்கள்.

★ எப்பொழுதும் மலங்கழிப்பதற்கு மலசலகூடமொன்றைப் பாவியுங்கள்.

★ சிறுபிள்ளைகளின் மலத்தை மலசல கூடத்திற்குள் போடுங்கள்.

**ச. ராஜசேகரன்**
(யாழ். மருத்துவபீட மாணவன்)

★ உங்கள் குழந்தைகளை திறந்து வைக்கப்பட்ட உணவுவகைகள் சந்தேகத்திற்கிடமான ஐஸ்பக்கற், ஐஸ்கிறீம் என்பவற்றை உண்ண வேண்டாமென அறிவுறுத்துங்கள்.

★ பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு கொதித்தாறிய நீரைக் கொடுத்து விடுங்கள்.

★ சமைத்து ஆறிய உணவை மீண்டும் சூடாக்கி உண்ணுங்கள். உணவை மூடிவையுங்கள்.

★ பழவகைகளை நன்கு கழுவி உண்ணுங்கள்.

★ கூடிய எல்லாச் சந்தர்ப்பத்திலும் சமைத்த உணவையே உண்ணுங்கள்.

''சுத்தம் சுகம் தரும்''

# சாணக்கியரின் அரசியல் நீதி

'சந்திரகுப்தர்' என்ற அரசரிடம் தலைமை அமைச்சராக இருந்தவர்தான் சாணக்கியர்.

அவர் ஒரு குடிசையில்தான் வாழ்ந்து வந்தார்.

அந்த ஊரில் ஏழை எளிய மக்கள் குளிரால் கஷ்டப்படுகிறார்கள் என்று அரசர் கேள்விப்பட்டார்.

உடனே அவர் நிறைய கம்பளிப் போர்வைகளை வாங்க ஏற்பாடு செய்தார்.



அரசர் அந்தப் போர்வைகளை யெல்லாம் சாணக்கியரின் குடிசைக்கு அனுப்பி, "இவற்றை விரைவில் எல்லோருக்கும் விநியோகம் செய்யுங்கள்" என்று கூறினார்.

அதனால் அன்றைய தினம் அந்தப் போர்வைகள் அனைத்தும் சாணக்கியரின் குடிசைக்குள் ஒரு பக்கமாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தன: இன்னும் விநியோகம் செய்யப்படவில்லை.

இந்தச் சமயம் பார்த்து அந்த ஊரில் இருந்த சில திருடர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது.

''ராஜா கொடுத்தனுப்பிய கம்பளிப் போர்வைகளெல்லாம் இப்போது சாணக்கியர் குடிசையில்தானே இருக்கும்... இன்றிரவு எல்லோரும் தூங்கிய பிறகு நாம் அங்கே போவோம்... அங்கிருக்கும் கம்பளிப் போர்வைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகக் கிளப்பிக்கொண்டு வந்து விடுவோம்... பிறகு வேறு ஊருக்குப் போய் அவற்றை விற்றுப் பிழைத்துக்கொள்ளலாம்!''

இதுதான் அந்தத் திருடர்கள் போட்ட திட்டம்.

அந்தத் திட்டத்தின்படியே அவர்கள் நடு இரவில் கிளம்பினார்கள்.

மெதுவாக சாணக்கியர் குடிசையை நெருங்கினார்கள். சத்தம் போடாமல் உள்ளே நுழைந்தார்கள்...

ஒரு பக்கம் கம்பளிகள் குவிந்து கிடந்தன.

இன்னொரு பக்கம் சாணக்கியரும் அவரது தாயாரும் உறங்கிக்

(XIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்களைத் தேடுங்கள்!

கீழே தரப்பட்ட தகவல்கள் குறிக்கும் சொற்களைக் கண்டு பிடியுங்கள். ஒவ்வொரு சொல்லும் மூன்று எழுத்துக் கொண்டவை. எல்லா சொல்லிலும் நடு எழுத்தில் மட்டும் மாற்றம் இருக்கும். எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

அ) வகுப்பைக் குறிப்பது.
ஆ) செல்வம் எனப்படும்.
இ) ஞான நிலை.
ஈ) பத்து.
உ) சுவட்டுப் பாதை.
ஊ) வழங்கும்.
எ) பொருந்தும்.
ஏ) புண்ணிய இடம்.
ஐ) களம்.

— நா. மகேந்திரலிங்கம் —

## பள்ளிச் சிறுவர் நாம்

**துள்ளித் துள்ளிப் பள்ளி செல்லும்**
**சின்னஞ் சிறிய சிறுவர் நாம்.**
**பள்ளி சென்று பாடம் படிக்கத்**
**துடிக்கும் செல்லச் சிறுவர் நாம்.**
**அம்மா அப்பா சொல்லைக் கேட்கும்**
**அருமையான சிறுவர் நாம்.**
**நல்ல பழக்கம் பழகச் சொல்லும்**
**ஆசிரியரின் சிறுவர் நாம்.**

**கா. ரூபாஜினி,**
(ஆண்டு 6, யாழ். சன்மார்க்க ம.வி.)

## ஐந்தின் பெருமை

ஐங்கணை:- தாமரை, அசோகு, குவளை, மாம்பூ, முல்லை.
ஐங்கதி:- மல்ல நடை, குதிரையின் நடை, மயில் நடை, குரங்கு நடை. முயல்நடை, மனநடை.
ஐங்கனி:- எலுமிச்சை, நாரத்தம், மாதுரம், தமரத்தம், குளஞ்சி.
ஐங்காயம்:- கடுகு, ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங்காயம்.
ஐங்காலம்:- பிராத காலம், சங்கவ காலம், மத்தியான காலம், அப்ரான்ன காலம், சாயன்ன காலம்.
ஐங்குரவர்:- அரசன், ஆசிரியன், தாய், தந்தை, தமையன்.
ஐங்கூந்தல்:- கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள்.
ஐந்தரு:- சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம்.
ஐந்திணை:- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.
ஐம்படை:- சக்கரம், வில், வான், தடி, சங்கு.
ஐம்பூதம்:- நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்.
ஐம்பொறி:- மெய், வாய், கண், மூக்கு, செவி.
ஐம்பெருங்குழு: அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதுவர், சாரணர்.

**— வி. அனிஸ்ரா —**
(உயர்தர வகுப்பு, கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம. வி)

## மிதிவண்டி

மிதித்து ஓடும் வண்டியாம்
மிதித்தால் உழைக்கும் வண்டியாம்
அதிகச் செலவு இல்லாத
அதிசய ஏழை வண்டியாம்!

எரிபொருள் எதுவும் கேட்காது
எங்கும் செல்லும் வண்டியாம்
இருவர் என்ன மூவரை
ஏற்றத் தயங்கா வண்டியாம்

**- கி. சுவர்ணா -**
(மானிப்பாய் மகளிர் கல்லூரி)

## சேவல் கூவ எழுந்தனர்!

சேவல் கூவ எழுந்தனர்
தேய்த்துப் பல்லைத் துலக்கினர்
ஆவல் கொண்டே ஓடினர்
அள்ளி அள்ளிக் குளித்தனர்

தலையைச் சீவிக் கொண்டனர்
சட்டை போட்டுப் பார்த்தனர்
நிலையாய் நின்று உணவு உண்டு
நேரே ஓடிச் சென்றனர்


தண்ணீர் போத்தல் ஒரு கையில்
சாப்பாடோ தம் மறு கையில்
அண்ணன் தங்கை ஓடினர்
சுற்றுலாவில் செல்லவே.

## நகர்ந்து செல்லும் நத்தை

உயிரினத்தில் மெல்லுடலிகள் என்னும் தொகுதியைச் சேர்ந்தது நத்தை. நத்தையின் உடல் மிக மிருதுவானது. உடலின்மேல் கைட்டின் (Chitan) என்னும் சுண்ணாம்புப் பொருளாலான கூடு இருக்கும். கூடு பல சுருள்களாக அமைந்திருக்கும். கூட்டை நத்தை எப்போதும் சுமந்து செல்லும். தீங்கு வருவதாகத் தெரிந்தால் இந்தக் கூட்டுக்குள் நத்தை உடலை இழுத்துக் கொண்டு விடும்.

நத்தைகளில் 40 ஆயிரம் இனங்கள் உள்ளன.

நந்தைகள் உப்புக்கடலிலும், உவர்க் கழிமுகத்திலும், நன்னீர் நிலைகளிலும், ஆறுகளிலும் வாழும். இவை பெரும்பாலும் தாவரப்பொருள்களையே உண்ணும். இலையையும், அரும்பையும், பூவையும், மெல்லிளம் பசுந்தண்டையும் தனது நாடா போன்ற நீண்ட அராவு நாவினால் அராவி அராவித் தின்னும். இந்த நாவிலே கடினமான கைட்டின் பொருளாலான பல பற்கள் வரிசை வரிசையாக அமைந்து அரம்போல இருக்கும். நாவை நீட்டியும், உள்ளுக்கு இழுத்தும் அரத்தால் அராவுவது போல இலை முதலியவற்றைத் துருவி உண்ணும். நத்தையின் தலையில் இரண்டு சோடி உணர்கொம்புகள் உள்ளன. அவற்றில் ஒருசோடி நீண்டது. மற்றையது குட்டையானது. நீண்ட கொம்பின் உச்சியில் கருநிறமான சிறுபுள்ளி போன்ற கண் இருக்கும். சில நத்தைகளில் கண் குறுங் கொம்புகளின் அடிப்பாகத்தில் இருக்கும். இந்த உணர்கொம்புகளை நத்தை, தலையணை உறையின் மூடிய முனையை உள்ளிழுத்து வெளியே



இழுத்துக் கொள்வதுபோல் உள்ளுக்கு இளுத்துக் கொள்ளும். முகம் பார்க்கும் கண்ணாடியினாலே சூரிய வெளிச்சத்தை பிரதிபலிக்கச் செய்து நத்தையின் தலை மேலே விழச் செய்தாலும் நத்தை கண்ணுள்ள உணர் கொம்பை உள்ளிழுத்துக் கொள்ளும். எனினும் இக்கண்கள் நத்தை பொருள்களின் உருவத்தை அறிந்து கொள்ளக் கூடியளவுக்கு அத்துணை சிறந்த அனைப்புள்ளவை அல்ல.

கடலில் வாழும் நத்தைகள் மிகப் பெரியவை. இவற்றில் சில 30 சதம மீற்றர் (சமார் ஓர் அடி) வரை நீளமிருக்கும். 'சங்கு' என்பது நத்தையின் ஓர் இனமே.

**பிராணிகள் உலகம்**

நத்தையின் உடலின் அடிப்பாகத்தில் தடிப்பான தசை உண்டு. இதுவே நத்தையின் கால். இதில் அலை அலையாகச் சுருக்கங்கள் உண்டாகும். இச்சுருக்கங்களால் நத்தை முன்னே நகர்ந்து செல்கிறது. அப்போது வழவழப்பான திரவத்தை நகரும் தளம் மீது இது சுரக்கும். எளிதாக நகர்ந்து செல்ல இத்திரவம் உதவுகிறது.


நுரையீரல் நத்தைகள் ஒரு வகையைச் சேர்ந்தவை. இவற்றில் மூச்சுறுப்பாக ஒரு பை போன்ற எளிய அமைப்புள்ள அறை உதவுகிறது. அது உடலின் நடுப்பாகத்தில் வாலைக் காட்டிலும் தலைக்கு அருகிலே இருக்கிறது. நத்தைக் கூட்டின் வாய்க்கு அருகிலே நத்தையுடலிலே ஒரு பக்கத்திலே ஒரு துவாரம் அவ்வப்போது திறப்பதும் மூடுவதுமாக இருக்கக் காணலாம். இதுவே மூச்சுத் துளை. இதன் வழியாகக் காற்று மூச்சறைக்குள் போகவும் வெளிவரவும் செய்யும். அறையின் சுவராக அமைந்துள்ள உடலின் தோலின் மடிப்பு அல்லது போர்வைக் (Mantle) குள்ளே இரத்த நாளங்கள் செல்லும்.

தோட்டத்தில் திரியும் நத்தையோட்டை உற்றுப் பார்த்தால் இதயமும், பிரிந்து செல்லும் நாளங்களும் மெல்லிய ஓட்டின் வழியாகத் தெரியும். இரத்த ஓட்டத்தையும் காணலாம்.

நீருக்குள் மூச்சுவிடும் நத்தைகளில் இலை போன்ற 'செவுள்' மடிப்புக்கள் நுண்மையான குஞ்சம் போல நீண்டிருக்கும். இச் செவுள்களின் மேல் நீர் ஓடிக்கொண்டிருக்கும். அதிலிருந்து பிராணவாயுவை இந்த செவுள் மூலம் நத்தை உறிஞ்சி எடுத்துக் கொள்ளும்.

நத்தை தாவரங்களைத் தின்று தள்ளுவதால் அதனை 'விவசாயிகளின் எதிரி' என்று சொல்வர்.

நத்தை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். நத்தை வளர வளர அதன் கூடும் வளரும். நத்தையைச் சிலர் உண்பது உண்டு. ★




## வலையாய் சிக்கிய எலி!

**பாட்டியின் வீட்டுப்ப மும்பானை அந்த**
**பானை ஒருபுறம் ஓட்டையடா**
**ஓட்டைவ ழியொரு சுண்டெலியும் அதன்**
**உள்ளே புகுந்து நெல் தின்றதடா**

**உள்ளே புகுந்து நெல்தின்று தின்று — வயிறு**
**ஊதிப் புடைத்துப் பருத்ததடா**
**மெள்ள வெளியில் வருவதற்கும் ஓட்டை**
**மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா**

**பானையைக் காலை திறந்தவுடன் — அந்த**
**பாட்டியின் பக்கமாய் வந்து ஒரு**
**பூனை எலியினைக் கண்டதடா — ஓடிப்**
**போய் அதைக்கௌவியே சென்றதடா**

**கள்ள வழியினிற் செல்பவரை — எமன்**
**காலடி பற்றித் தொடர்வானடா**
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**—எஸ். சுஜித்தா—**
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

## இயலுமா?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | வி | ஜ | ய | ன் | லா | தை | சீ |
| ரீ | லி | பீ | ம | ன் | ப | இ | ன் |
| ச | கி | னு | ட | ண் | ர | ரு | ண |
| ன் | அ | ன் | ம | ண | த | பா | வ |
| ந | க | த | கூ | னி | ன் | ம | ரா |
| கு | கோ | ர | கு | ம | ண | ல் | யி |
| ல | ல | ச | ரு | வி | ர் | வா | கே |
| ன் | க் | த | லை | அ | க | லி | கை |

மேலேயுள்ள அட்டவணையில் ராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு காப்பியங்களில் இடம்பெற்றுள்ள இருபது பாத்திரங்களின் பெயர்கள் ஒளித்துக் கொண்டுள்ளன.

அவை மேலிருந்து கீழோ, கீழிருந்து மேலோ, பக்கவாட்டிலோ, பின்னுக்கு இருந்து முன்னாகவோ, முன்னுக்கிருந்து பின்னாகவோ உள்ளன. அவற்றில் ஒரு பாத்திரத்தின் பெயர் (சகுனி) வட்டமிட்டுக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு எஞ்சிய 19 பாத்திரங்களையும் காட்டுங்கள் பார்க்கலாம்.

**—வயலூரன்—**
(விடை XIII ஆம் பக்கத்தில்)

## உங்களால் முடியுமா?

கிரிக்கெட் அணி ஒன்றின் ஆறு வீரர்கள் அடித்த ஓட்டங்கள்மற்றும் வீழ்த்திய விக்கெட்டுக்கள் பற்றிய பத்துத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை வைத்துக்கொண்டு அந்த இலக்கங்களை உள்ள அட்டவணையில் நிரப்பி அதைப் பூர்த்தி செய்யுங்கள் பார்க்கலாம்.

| | ராஜன் | மோகன் | தருமன் | ஈசன் | விஜி | தயாளன் |
|---|---|---|---|---|---|---|
| ஓட்டம் | | | | | | |
| விக்கெட் | | | | | | |

1. தயாளனும் விஜியும் சேர்ந்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.
2. தயாளன் வீழ்த்திய விக்கெட்டுக்களின் இருமடங்கு ராஜன் பெற்ற ஓட்டங்கள்.
3. மோகன் ஈசனிலும் பார்க்க நான்கு மடங்கும், தயாளன் தருமனிலும் பார்க்க இரண்டு மடங்கும் ஓட்டம் பெற்றனர்.
4. ஓரிலக்க எண்ணில் ஆகக்கூடி எதுவோ அதுவே ஈசன் பெற்ற ஓட்டங்கள்.
5. ஆறு பேரும் பெற்ற மொத்த ஓட்ட எண்ணிக்கை 84.
6. தருமன் விக்கெட் எதுவும் வீழ்த்த வில்லை.
7. ஈசன் வீழ்த்திய விக்கெட்டுகளும் விஜி பெற்ற ஓட்டங்களும் ஒரே அளவே.
8. மோகன் விக்கெட்டுக்களை வீழ்த்தியது உண்மையே. ஆனால் அது தயாளன் வீழ்த்தியதிலும் குறைவு. விஜி வீழ்த்தியதிலும் கூட.
9. ராஜன் அடித்த ஓட்ட எண்ணிக்கை அளவு விக்கெட்டே அவரது அணி வீழ்த்தியது.
10. ஈசன் பெற்ற ஓட்டத்தின் வர்க்கமூலம் தயாளன் வீழ்த்திய விக்கெட்டுகளுக்குச்சமன்.

(விடை XIII ஆம் பக்கத்தில்)

## நொடிப் பொழுது

1. காலால் மிதித்தால் காற்றாய்ப் பறப்பான். அவன் யார்?
2. பழுக்காத பழம் என்ன பழம்?
3. செம்பு நிறைய முத்து. அது என்ன?
4. அண்ணாவுக்கு எட்டாது. தம்பிக்கு எட்டும். அது என்ன?
5. ஏறேறு சங்குலி. எட்டாத கொப்பெல்லாம் தொட்டுவா சங்கிலி. அது என்ன?
5. வானுக்கும் பூமிக்கும் ஒரு கம்பி. அது என்ன?
7. ஒட்டு உடல்காரனுக்கு ஓட்டத் தெரியாது. அது என்ன?
8. வெள்ளை றோட்டிலே கறுப்புக்கார் ஓடுது. அது என்ன?
9. கத்திபோல் இலை இருக்கும். கவரிமாப் பூக்கும். தின்னப் பழம்பழுக்கும். தின்னாத காய்காய்க்கும். அது என்ன?

**—க. திருக்குமரன்—**
(ஆண்டு 3,
மிருசுவில் றோ. க. த.க. பா.)

### விடைகள்

1. சைக்கிள். 2. ஐஸ்பழம். 3. மாதுளம் பழம். 4. சொண்டு. 5. அணில். 6. மழை. 7. ஆமை. 8. கண். 9. வேம்பு.

# 'முதுமையை' நோக்கி உலகம்!

முதியோரின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக ஐ. நா. சபை 1999 ஆம் ஆண்டை முதியோர் நலன் பாதுகாப்பு வருடமாகப் பிரகடனம் செய்துள்ளது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வெறும் 160 கோடி என்ற எண்ணிக்கையுடன் நடைபோட்ட உலக சனத்தொகை 21 ஆம் நூற்றாண்டை வரவேற்கும் இத்தருணத்தில் 600 கோடியை எட்டியுள்ளது.

மக்கள் தொகை பெருக்கத்தில் சீனாவும், இந்தியாவும் முறையே முதலாவது, இரண்டாவது இடங்களை வகிக்கின்றன. 2010 இல் அமெரிக்காவும் இந்தோனேசியாவும் மூன்றாவது, நான்காவது இடங்களைப் பிடித்துவிடும். பாகிஸ்தான் ஐந்தாவது இடத்தையும் பிரேசில் ஆறாவது இடத்தையும் பெறும் ஜப்பான், ரஷியாவின் நிலைமையோ தலைகீழாக உள்ளது. இந்நாடுகளில் மக்கள் தொகை இறங்குமுகத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் மக்கள் தொகைப் பெருக்கத்தைவிட மிகவும் முக்கிய பிரச்சினை ஒன்று எதிர்ப்பட உள்ளது. அதுதான் முதியோர் பெருக்கம். பிறப்பு—இறப்பு பெருமளவில் குறைந்துபோனதே இதன் காரணம் எனலாம்.

உலகளவில் 65 வயதுக்கு மேற்பட்ட முதியோரின் எண்ணிக்கை தற்போதைய நிலவரப்படி 39 கோடி. இன்னும் மூன்றாண்டுகளில் இது 60 கோடியைத் தாண்டிவிடும். 2025 ஆம் ஆண்டில் 800 கோடி உலக மக்கள் தொகையில் இந்த எண்ணிக்கை 120 கோடியாய் பெருகிவிடும். 1950 ஆம்ஆண்டுடன் ஒப்பிட்டால் இது 6 மடங்கு அதிகம். 1995 ஆம் ஆண்டு நிலைவரப்படி 20 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு நூறு பேரிலும் 65 வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை 16 ஆகும். இன்னும் இருபதாண்டுகளில் இதுஇரட்டிப்பாக மாறக்கூடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பல்வேறு வளர்முக நாடுகளில் அதிலும் குறிப்பாக லத்தீன் அமெரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் முதியோர் எண்ணிக்கை 300 வீதம்வரை பெருகுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஐஸ்லாந்து, சுவீடன், இத்தாலி, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இதில்முதல் இடத்தில் இருக்கும். 2020 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஒவ்வொரு நாலு பேரில் ஒருவரும் ஜப்பானில் 30 வீதமானோரும் முதியவர்களாகவே இருப்பார்கள். இதில் சீனா தலைமை இடத்தை வகிக்கும். தற்போதைய நிலைமையின் தீவிரத் தன்மைக்கு இவை உதாரணங்களாகும்.

வளர்ச்சியுற்ற நாடுகளில் 2025 ஆம் ஆண்டில் பிறப்பவர்கள் சராசாரியாக 82 ஆண்டுகள் வரை உயிர் வாழலாம் என்று 'உலக மக்கள் நல அமைப்பு' நடத்திய ஆய்வுகள் புலப்படுகின்றன. 70 விழுக்காடு முதியவர்களின் இருப்பிடமாய் வளர்முக நாடுகள் திகழ்வது கவனிக்கத்தக்கது.

முதியோர் எண்ணிக்கைப் பெருக்கம், குழந்தைகள் மற்றும் இளையோரின் எண்ணிக்கையை விட மிஞ்சி பெரும் பிரச்சினையாக உருமாறும் ஆபத்துக்கள் அதிகம். இதனால் இளையவர்களைச் சார்ந்து வாழும் முதியோருக்கு பல சிரமங்கள் ஏற்படும். இப்படிச் சார்ந்து வாழும் முதியோர் எண்ணிக்கை 1995ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 12. 3 வீதமாகும். இது இன்னும் 20 – 25 ஆண்டுகளில் 17. 2 வீதமாக உயரும். இதை மனதில் கொண்டுதான் 1999 ஆம் ஆண்டை முதியோர் நல பாதுகாப்பு ஆண்டாக ஐ. நா. சபை அறிவித்தது.

வாழ்வின் கடைசிக் கட்டத்தில் வாழும் முதியோரின் சமூக, பொருளாதார, உடல் நலப் பாதுகாப்புக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அது வலியுறுத்தியுள்ளது. அதற்கான பல்வேறு நலத் திட்டங்களையும் வடிவமைத்துள்ளது.

முதியோர் பிரச்சினைகளின் தீவிரத்தன்மைகளில் சிக்கிக்கொண்டுள்ள குறிப்பிடத்தக்க நாடுகளாக சீனாவையும் ஜப்பானையும் சொல்லலாம். சீனா, ''ஒரு குடும்பம்! ஒரு குழந்தை!'' திட்டத்தை வலியுறுத்தி சட்டங்களைக் கடுமையாக்கியதன் விளைவாக தற்போது அது பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. சீனர்கள் ஆண் குழந்தைகளுக்காக பெண் சிசுக்களைக் கொலை செய்வதும், முதியோர்—இளையோர்இடையே பெரும் இடைவெளி ஏற்பட மற்றொரு காரணமாகும். 120 கோடி மக்கள் கொண்ட சீனாவில் தற்போதையநிலைவரப்படி முதியோர் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. இன்னும் இரண்டாண்டுகளில் 60 வயதைத் தாண்டிய முதியோர் எண்ணிக்கை 15. 4 வீதமாகவும் (அதாவது 13. 6 கோடி) இன்னும் முப்பதாண்டுகளில் 25. 8 வீதமாகவும் அதிகரிக்கும் என்று சீனாவின் மக்கள் தொகை கணக்கெடுப்பு அமைப்பு அச்சம் தெரிவித்துள்ளது.

## பிறப்புவீதம் வீழ்ச்சி

ஒருபுறம் முதியோர்களது தொகை கணிசமாக பெருகி வரும் அதேசமயத்தில் மறுபுறம் பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. சீனக் குடும்பம் ஒன்றில் சம்பாதிப்போர் எண்ணிக்கை குறைந்து போய், ஒவ்வொருவரும் ஐந்தாறு முதியோர்களைப் பராமரிக்கும் பொறுப்புச் சுமை தாங்காமல் அவதியுறுகிறார்கள். ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட பணிகள் இல்லாமலும், அரசு உதவித் தொகைகள் கிடைக்காமலும் சீனாவில் முதியோர் பெருந்தொல்லைக்கு ஆளாகி வருகிறார்கள். இது அந்நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் சவாலாகத் திகழ்கிறது,



ஜப்பானின் நிலையும் வேறொரு விதத்தில் ஏறக்குறைய சீனாவைப் போன்றேயுள்ளது. இவ்வாண்டு ஏப்ரல் மாத நிலைவரப்படி ஜப்பானில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை 3 லட்சத்து 30 ஆயிரத்துக்கு மேல் குறைந்துபோனது அதிர்ச்சி தரத்தக்க தகவலாகும். ஜப்பானின் மொத்த மக்கள் தொகையில் குழந்தைகள் எண்ணிக்கை 15.2 வீதமாகும். 16 வீதத்துக்கும் அதிகமானோர் 65 வயது தாண்டிய முதியவர்களே!

வேலையே கதி என்றிருக்கும் ஜப்பானியர்கள், முதியோரைப் பராமரிக்கச் சிரமப்படுகிறார்கள். இத்துடன் சமூகச் சூழல்களும் அதன் நிர்ப்பந்தங்களும்ஜப்பானியர்களை 'இனி குழந்தைகளே வேண்டாம்' என்று சொல்லுமளவுக்குச் செய்து விட்டுள்ளன. இதனால் 21 ஆம் நூற்றாண்டு ஜப்பானில் அலுவலர்கள், தொழிலாளர் ஆகியோருக்குப் பற்றாக்குறை ஏற்படும் ஆபத்தும் உண்டு. முதியோர் பிரச்சினையின் விளைவுகளில் ஜப்பான் சிக்கித் தவிக்கிறது.

இந்தியாவை எடுத்துக் கொண்டால், இந்தியர்களின் சராசரி ஆயுட்காலம் 45 லிருந்து 68 வயதாக அதிகரித்துள்ளது. இந்தியாவில் தற்போதைய நிலைவரப்படி 6 கோடி முதியோர் இருக்கிறார்கள். நாட்டின் மொத்த மக்கள் தொகையில் இது 7 வீதமாகும். இன்னும் 20 ஆண்டுகளில் 10 கோடியாக, அதாவது 10 வீதமாக இது உயரும். இந்தியாவில் 90 வீதமான முதியோருக்கு ஓய்வூதியம் போன்ற வசதிகள் இல்லை. இந்நிலையில் கூட்டுக் குடும்ப அமைப்பும் நசிந்து வருகிறது. இந்தியாவில் தற்போது 356 முதியோர் நல இல்லங்கள் மட்டுமே உள்ளன. ★

நன்றி: தினமணி

## ஏற்றம் தரும் ஏணி



அறியாமை நோயை அகற்றிடும் வைத்தியா
அகமதி திர ஓட்டு!
தெரியாமை அகற்றும் தெள்ளிய புருஷா
தெளிவினைத் தந்து காட்டு!
சிரியாமை தொலைத்து சீர்மிகு வாழ
சிந்தனை உயர்வை ஊட்டு!
புரியாமை நீங்கி புத்தறி வோங்க
புட்களம் தனை நாட்டு!

ஐந்திலே வளைத்திடும் ஆற்றலின் பேறே
சிந்தனை, சொல், செயல் சீரினைத்தாராய்
தந்துமை எனக்கு திருவழி காட்டும்
உந்தனின் பணியில் உயருமே உலகம்!


பொறியியல் வைத்தியம் பிரதம (ர்) பதவிகளும்
புரிபவர் யாவர்க்கும் புகுவழி ஆசான் தானே
சிறியோர் பெரியோரென சீரற்ற குலம் பாரார்
வறியோர்க்கும் வழிகாட்டும் வல்ல நல் ஆசானே!

தேடிப் புது விடயங்களை தெளிவுடனே தரும் பேறே
கூடி வாழும் பண்பதனை குற்றமறச் சொல்லுவீரே
வாடிடாது கல்விப் பயிர் வளரச் செய்யும் வண்ணத் தேரே
நாடி உயர் வழிகாட்டி நமை வளர்க்கும் அன்புச் சிரே

தேனி உழைப்பு போல நிதம் தேறும் அறிவு பெற்றுஎமை
கூனிப் போக விடாது உயர் குன்றைப் போல நிமிர்ந்திடுவீர்
கோணிடாத வாழ்வு பெற கொள்கை தரும் ஆசானே
ஏணி நீரே நாம் உயர, ஏற்றிடுவோம் உம் உயர்வை!

- மானியூர் ரட்ணேஸ் -
(ஒக்டோபர் 6 ஆசிரியர் தினம்)

## மௌன மொழி



மேலே உள்ள ஓவியம் உங்களில் ஏற்படுத்தும் மனப் பதிவை சிறு கவிதையாக வரையுங்கள். எண்ணிக்கை குறைந்த வரிகளில் வரும் உங்கள் எண்ணக் கவிதைகள் சஞ்சீவியில் வெளியிடப்படும்.

உங்கள் ஆக்கங்களை வெள்ளிக்கிழமைக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டிய முகவரி:

மௌன மொழி இலக்கம் — 2
'சஞ்சீவி'
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ நவீன மற்றும் மரபுப்பாணி ஓவியங்களை வரைவதில் ஆர்வமுடையோர் இப்பகுதிக்குத் தகுந்த ஓவியங்களையும் வரைந்து அனுப்பலாம்.

★ 'மௌனமொழி இலக்கம் 1' ஓவியத்துக்கான உங்கள் கவிதைகள் அடுத்த வாரம் வெளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| வி கே சந் | இராசிச் சக்கரம் | | |
| | | | செ ரா |
| | | | சூ புத வெ |

# இந்த வார இராசி பலன்

## [03 - 10 - 1998 முதல் 09 - 10 - 1998 வரை]

மாற்றம்:

3-10-1998 இல் சதயம் நட்ஷத்கிரத்தில் கும்ப இராசியில் சந்திரன் நிற்கும்.

4-10-1998 இல் துலாம் இராசியில் புதன் மாறும்.

*ஐ.நா. சபையில்மேற்கு நாடுகளால் ஏற்படும் அழுத்தம் காரணமாக இலங்கையின் அரசியலில் புதிய திருப்பம் ஏற்பட, அரசியல்வாதிகள் பேச்சுவார்த்தைகள் செய்ய நிர்ப்பந்திக்கப்படுவர். சமயவாதிகள் குழப்புவார்கள். சில எதிர்பாராத இழப்புகளால் மக்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் வேதனைப்பட்டு குழப்பநிலை அடைவர்.*

*இந்திய அரசியலில் சோதனையான காலமாகும். பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கானகதையாக மாறலாம் புதிய திருப்பம் ஏற்படும். மேற்கு உலகம்—வழமையான உத்திகளை மத்திய கிழக்கு நாடுகளில் செலுத்தி இயற்கை, செயற்கையான அழிவுகளைச் செய்து பொருளாதார அழுத்தங்களைக் கொடுத்தபடி இருக்கும்.*

**மேடம்:** நாலு மனிதர்கள் நாலுவிதமாக நல்லதைப் பேசி என்னைப் புகழட்டும் என்று நினைக்கின்றீர்களா? அதற்காகக் காசை அள்ளி வீச மனம் வரும். ஒரு கூட்டம் கூடி வாழ்த்தும்; பணம் பத்தும் செய்யும் அல்லவா? இருப்பினும் செலவழிப்பது உங்கள் காசு என்பதை மறவாதீர்கள். தொழில் ஸ்தானத்தில் கலகலப்பாக இருப்பீர்கள். அங்கும் இங்கும் ஓடி ஓடித் திரிவீர்கள். நல்லதைச் செய்வதற்கு ஓடி ஓடிக் களைப்பதில் பாவம் இல்லை. காசு, பொருள் தேடிவரும். வாதவாய்வு, உஷ்ணபீடைகள், சலமலச் சிக்கல்கள் இடைக்கிடை கொடுக்கும். சனீஸ்வரன் தாக்கம் கொடுத்தாலும் சமாளிக்க இடம் உண்டு. தெய்வ வழிபாடு செய்துவரவும்.

★ அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.

**இடபம்:** உங்களுக்கு இக்காலத்தில் புதிய திட்டங்கள் ஏற்பட்டபடி இருக்கும். சக்தி பொருந்தியவர்களுடன் போட்டி போடுவதனால் சக்தி குறைந்தவர்கள் பல இழப்புக்களை அடைவார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? தொழில் ஸ்தானத்தில் பொறுமையின் சிகரமாக இருப்பீர்கள். அதனால் பலரின் அபிமானத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். பொருளாதாரச் சிக்கல்களை ஓரளவு சமாளித்து வருவீர்கள். சகோதரங்களுக்கு நல்லதல்ல; காணிபூமிக்காக அதிக செலவுகள் செய்வீர்கள். கைகால் விறைப்பு, சலமல வருத்தங்கள், உஷ்ணபீடைகள், வாய்வுத் தொல்லை, நெஞ்சு நோ என்பனவற்றால் வருந்துவீர்கள். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வெள்ளி.

**மிதுனம்:** திரும்பத் திரும்ப இந்தத் தொழிலைத்தானே செய்கின்றோம். அலுப்பும் களைப்பும் அல்லவா இதைச் செய்யவருகின்றன! ஏதாவது மாற்றங்கள் வராதா என ஏங்குகிறீர்களா? ஓடி ஓடிப் பலரிடம் ஆலோசனை கேட்கிறீர்களா? உலகம் என்பது ஒரு நியதிக்குட்பட்டது. உங்கள் கடமையில் சிந்தனையாக இருங்கள். வேலை வேண்டாம் எனஅல்லது மாற்றங்கள் செய்ய முற்பட்டு—வேலைத்தலத்தில் முரண்பட்டபடி இருப்பீர்கள். அதனால் பின்பு வேதனைதான் வரும். தேகத்தைக் கவனியுங்கள். உடல்நிலைத் தாக்கங்கள் அடிக்கடி கொடுக்கும். வாய்வு—வாதம், நாரி நோ, மூட்டுநோ எனச் சொல்லுவீர்கள். கைகால்களில் பிடிப்பு, தலைவலி, உஷ்ணபீடைகள், மலச்சிக்கல்கள் என்பன வருத்தும். கொஞ்சம் ஒய்வு இடைக்கிடை எடுத்துவாருங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன், வெள்ளி.

**கடகம்:** மெல்லெனப்பாயும் தண்ணீர் கல்லையும் தள்ளிப்பாயும் என்பதுபோல உங்கள் காரியங்கள் செயற்படும். ஏன் பயந்து பயந்து வாழுகிறீர்கள்? இந்த உலகத்தில் பிறந்த பலனைத் தைரியத்துடன் அனுபவிக்க முன்னெடுத்துச் செல்லுங்கள். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டு, கௌரவப் பிரச்சினையாக மாறும். பிறருக்குப் பல உதவிகளைச் செய்து வரும் நீங்கள், பல நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் ஆதரவு, புகழ், பொருள் வரவைக் கண்டு அயலவர்களில் சிலர் மனம் புழுங்கி வேண்டாத பல வீண் பழிகளைச் சுமத்துவார்கள். கைகால் தாக்கம் சிலருக்கு ஏற்படும். சளி, நெஞ்சு நோ, விறைப்பு, அடிக்கடி உணர்ச்சிவசப்படுதல் என்பன ஏற்படச்செய்யும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

**சிங்கம்:** கலகம் பிறந்துதான் எங்கும் நியாயம் பிறக்கும். பயபக்தியால்தான் உலகில் பலகாரியங்கள் நிறைவேறியபடி இருக்கின்றன. தொழில் ஸ்தானத்தில் நல்லதும் கெட்டதும் நடக்கத்தான்செய்யும். கொஞ்சம் பொறுமையாக இருக்கவும். உங்களை நேரடியாக எவரும் எதிர்க்கத் துணியமாட்டார்கள். வெற்றி அடையவும் முடியாது. நெஞ்சு நோ, கைகால் நோ, முதுகுவலி, தொண்டைநோ என வருந்துவீர்கள். உணவில் ஒருமிதமான போக்கு அவசியம். அல்லது வாய்வுத் தொல்லை கொடுக்கும். மலச்சிக்கல் ஏற்படும். உங்கள் இலட்சியம், புதிய திட்டங்கள், தொழில் அல்லது தொழிற் கல்விகளில் திடீர் முன்னேற்றமான காலமாகும். ஆலயத் தொண்டு மன அமைதியைத் தரும்.

★ அதிஷ்டநாள்: சனி, வியாழன், வெள்ளி.

**கன்னி:** உலகம் முழுவதும் உங்கள் தலையில் இருப்பது போன்றும் சரி, பிழைக்காக அடிக்கடி வருந்துவதும் பயப்படுவதுமாக இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் எப்பொழுதும் சுழன்றுகொண்டு இருப்பீர்கள். எதிலும் அளந்து, அளந்து கணக்காகச் செலவழிக்கும் இயல்புள்ளவர் நீங்கள். சளி, நரம்புத்தளர்ச்சி, வயிற்றுநோ, வாய்வு, வாத உளைவுகள் கொடுக்கும். மலச்சிக்கலால் வருந்துவீர்கள். அதிகமான உழைப்பால் அடிக்கடி உடம்பு களைத்துவிடும். அதிகமாக எதையாவது பெரிதாக எண்ணி எண்ணிக் கலங்குவீர்கள். பரந்தாமன் பாதங்களையும், பரமபிதாவின் ஆசீர்வாதத்தையும் பெற ஆலயங்களுக்கு அடிக்கடி சென்று வாருங்கள். அமைதி பெறுவீர்கள்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

**துலாம்:** சமநீதி, தர்மசிந்தை, சட்டதிட்டங்கள், சமாதானம் எனப் பேசி வருவீர்கள். சமயோசித புத்தியாலும் உங்கள் அறிவுத்திறனினாலும் மயங்கிய பலர் நீங்கள் கேட்கும் உதவிகளைச் செய்து தருவார்கள், தொழில் ஸ்தானத்தில் உறுதியுடன் பல திட்டங்களை உருவாக்குவீர்கள். சிரிப்பதுவும் அழுவதுவும் உலகியலில் சகஜம்தானே. உணர்ச்சிபூர்வமாக எதையும் செய்துவிட்டு மனவேதனையைச் சோதனையாக்குவீர்கள். வயிற்றில் பொருமல், தலையிடி, பித்தமயக்கம், சலமல வருத்தங்கள், குடல் உபாதைகள் என்பன ஏற்படச் செய்யும். கொஞ்சம் கலகலப்பாக இருக்க யோசனை உண்டு. ரீ. வி, சினிமா, கலைத்தொடர்புகள் தாராளமாக இருக்கும்.

★ அதிர்ஷ்டநாள்; சனி, வெள்ளி.

**விருச்சிகம்:** உலகில் உயர்வுக்கோ, தாழ்வுக்கோ போராடுவீர்கள். நீங்கள் இவ்வுலகில் எதையும் எதிர்த்துப் போராடித்தான் பெறுவீர்கள். எதையும் அடக்க ஒடுக்கமாக, புத்திக்கூர்மையாக, சிக்கனமாகச் செயற்படுத்தி வருவீர்கள். ஆயினும் இக்காலத்தில் ஏன் பெற்றோருடனும், எதிர்ப்பாலாருடனும் அடிக்கடி எதிர்த்து வெறுப்புக்களைச் சம்பாதித்துக் கொள்ளுகிறீர்கள்? அயலவர்களுடன் மிக அவதானமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் அமைதியற்ற தன்மைகள் அடிக்கடி ஏற்பட்டபடி இருக்கும். மேலதிகாரிகள் நல்லதைச் செய்து தருவார்கள். ஆயினும் திருப்தி இருக்காது. நெஞ்சு நோ, அடிவயிறு நோ, வாய்வுத் தொல்லை, வலி, தலையிடி, பித்தரோகம், கிருமித்தாக்கம், அடிகாயங்கள் என்பன ஏற்படலாம். எதிலும் ஒரு நிதானம் வேண்டும்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, வெள்ளி,

**தனுசு:** நஞ்சுக்குள்தான் அமிர்தம்; அமிர்தத்துக்குள்தான் நஞ்சு. நன்மைக்குள்தான் தீமை; தீமைக்குள்தான் நன்மை. கடவுளுக்குள்தான் மனிதன்; மனிதனுக்குள்தான் கடவுள். பரமாத்மாவுக்குள்தான் ஆத்மா: ஆத்மாவுக்குள்தான் பரமாத்மா. இந்த உண்மைகளை உணர்வுகளாலும், ஞானத்தாலும் உண்மையுள்ளவர்கள் அறிவார்கள். அறிவாற்றலும், தீர்க்கதரிசனமும் கொண்ட

## மகாதேவா ஜோதிடம்

இராசிக்காரரான உங்களுக்கு இதெல்லாம் நான் சொல்லியா தெரிய வேண்டும்? தொழில்ஸ்தானத்தில் எதிர்ப்பாலாருடன் பகைமை ஏற்படும். இடுப்புநோ, நெஞ்சு நோ, நாரிவலி, வாய்வுத் தொல்லை, உஷ்ணபீடைகள் என்பன அடிக்கடி ஏற்படலாம். தகுந்த வைத்தியம் செய்யுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

**மகரம்:** எதிலும் ஒரு நிதானம் உங்களுக்கு. இந்த உலகத்தில் எந்தப்புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ? நல்லவன் எனப்பெயர் எடுக்க அப்பாவித்தனமாக இருக்கக் கூடாது. நல்லதும் — கெட்டதும் எமது மனதிலேயே தங்கியுள்ளது. இடாம்பீகமற்ற உள்உணர்வு மிக்க உங்களுக்கு நான் சொல்லியா தெரிய வேண்டும்? வயிற்றுக் கோளாறு, நரம்புத்தளர்ச்சி, மனதில் அடிக்கடி பயவுணர்வு, கிருமித்தாக்கம், வாய்வு, வாதக் குழப்பங்கள் என்பன ஏற்பட்டபடி இருக்கும். இடமாற்றங்கள் பிரயாணங்களால் ஓரளவு நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வியாழன்.

**கும்பம்:** கலக்கமா? மயக்கமா? கடுகடுப்பு உள்ளமனம் ஒரு புறம்; அடிக்கடி கருணை உள்ளம் மறுபுறம். உங்களை நம்பவே முடியவில்லை. தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி அழகு, துப்புரவு என்று புலம்பியபடி இருப்பீர்கள். அங்கு ஒழுங்கற்ற நிலைகளை கண்டு உணர்ச்சிவசப்படுவீர்கள். உலகமே குழம்பியநிலையில் உள்ளது. உலகவல்லரசுத் தலைவனோ பாவைகளால் குழம்பியபடி இருக்கும் காலம்; நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்? கொஞ்சம் பொறுமையாக இருக்கவும். நரம்புச் சோர்வு, நெஞ்சுச் சளி, கைகால் உளைவு, குளிர், வெயிலால் உடல் நிலைபாதிப்பு ஏற்படும். அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள்.

**மீனம்:** பாவத்தைப் பார்த்தால் பணத்தைச் சம்பாதிக்க முடியுமா என்று சொல்லப் போகிறீர்களா? ஏழரைச்சனி பயமுறுத்தியபடி இருக்கிறார். திடீர், திடீரென ஏதாவது கஷ்டநஷ்டங்கள் வர இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில்—பொருள் விஷயத்தில்—அவதானமாக இருக்கவும். மேலதிகாரிகள் சினந்து கொண்டிருப்பர். சக தொழிலாளர்களும் நல்லதைச் செய்ய மாட்டார்கள். ஏதோ சமாளித்துக் கொள்ளுங்கள். சளி, கிரந்தி, கிருமித்தாக்கம், வயிற்று நோ, வாய்வுத் தொல்லை என ஏற்படும். ஆஸ்பத்திரிக்குஅலையப்பலன் உண்டு. குலதெய்வ வழிபாடு நல்லது. ஆலயங்களின் வீதிகளில் அடிக்கடி உலாவிவருவீர்கள். ஒரு சிலர்அமைதியற்றுக் காணப்படுவார்கள். பிரச்சினைகளை பொறுமையுடன்எதிர்ப்பாலாரின்ஆலோசனைகள் பெற்று செயற்படுத்தப்பாருங்கள். அதனால் பாதிக்கஷ்டம் நிச்சயம்தீரும்; வழிபிறக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

## அவல இரவு

நிலவு
வானக் கடலிடை
ஒளிந்து கொண்டது.

பூமி
இருளின் மடியினில்
முகம் புதைத்தது.

மரங்கள்
கிளைகளை அசைக்க
மறந்து இருந்தன.

நிசப்தத்தின்
சுருதியைப் 'பூட்ஸ்' கால்கள்
கலைத்துக் கொண்டிருந்தன.

தெருநாய்கள்
உச்ச ஸ்தாயியில்
முகாரி பாடின!

எங்கோ
துப்பாக்கி வேட்டுக்கள்
நெஞ்சைப் பிளந்தன...

கதிரவன்
வைகறைப் போர்வையை
விலக்கி எழுந்தான்.

அங்கே
அப்பாவி மனிதங்கள்
மண்ணை முத்தமிட்டபடி
நீள்துயில் கொண்டிருந்தன.

—ப. பிறேமலதா—

## குறள் வெள்ளம்

என்புதோல் போர்த்த உடம்பு என்று அசிங்கத்தை அழகாக வருணித்தவர் வள்ளுவர்.

பார்ப்பவர்களுக்கு அன்பிலா உன் உருவம் அசிங்கமாகத் தெரியும். பண்பில்லா உன் செயல்கள் அருவருப்பைத் தரும். உன்னோடு பழகவும் பேசவும் விரும்பார் உயர்ந்தோர்.

துட்டனைக் கண்டால் தூரவிலகு என்று ஒதுங்கிவிடுவர் அறிவுடையோர். உன் உயிரோடு அன்பு கலவாத பாவம் உன் உடம்பை உற்றாரும் மற்றாரும் வெறுக்க வைக்கிறது.

அன்பு கலந்து வாழும் வாழ்வில் போலி பிறக்காது. உண்மையினை உலகம் அடையாளங் கண்டு மதிக்கத்தான் செய்யும்? உன் உடலழகோ குறைபாடுகளோ பெரிதுபடுத்தப் படமாட்டா.

உலகம் உன்னிடம் அன்பைக் காணாத போது எஞ்சி நிற்பது உன் உடம்பு மட்டும் தான். அங்கே உயிர் இருந்தென்ன இல்லாவிட்டாலென்ன? எவர் கவலைப்படப் போகின்றார்கள்?

என்பு தோல் போர்த்த உடம்பு. பிரித்துப் பார்த்தால் தெரியும் உள்ளே புழுப் போல நெளியும் அசிங்கங்கள் ஆயிரம்.

இதற்குத்தானோ வெளியே இத்தனை பூச்சு; மெழுக்கு அலங்காரம், ஆரவாரம் எல்லாம். நோய்வந்தால் நெடி தாங்கமுடியாது. பட்டென்று போயும் விடும். சுட்டுப்பொசுக்கி விடுவார்கள் சுற்றத்தார். அதற்குக்கூட ஆளில்லாமல் காகம் கொத்தும் நிலைமையும் வரக் கூடும்.

ஆனால் அன்பிருந்தால் நிச்சயம அருகினிலே உருகி நிற்க ஆள் இருக்கும். மறைந்தாலும் மறையாத பெயரிருக்கும்; புகழ் இருக்கும்.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

—080
(அன்புடைமை)

—அம்பிகைபாகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

(II ஆம் பக்கத் தொடர்)

நாவற்குழி, கைதடி ஆகிய பகுதிகளில் காணாமற் போனதாகக் கருதப்படுவோரின் உறவினர்களை யாழ்ப்பாணம் வரும் மனித உரிமை ஆணைக் குழுவின் உபதலைவர் விசாரித்து விவரங்களைபதிவுசெய்வார்.

அவற்றை ஆராய்ந்து குறிப்பிட்டதொகையினர் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் சடலங்களைத் தோண்டும் போது பிரசன்னமாக இருக்க வசதி செய்யப்படும்.

இந்தப்பணியை முடிக்க எவ்வாறாயினும் குறைந்தது இரண்டு மாதங்களாவதுசெல்லும். ஐ. நா. நிபுணர்களும் முதலில் வந்து பூர்வாங்கப் பணிகளைச் செய்து மீண்டும் நிபுணர்கள் வருவதற்கும் மூன்றுமாதங்கள் ஆகலாம். அதனால் மாரி தொடங்குவதற்கு முன்னர் செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்படும் — உண்மை கண்டறியப்படும்—சாத்தியம் அறவே இல்லை.

நடைமுறைகள் காலத்தை மேலும் விழுங்கும் என்பது நிதர்சனமே ஆயினும் தமது பிள்ளைகள் கணவனை இழந்தோர் இனிமேல் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பாதுகாவலர் சங்கக் கூட்டத்தில் தமது உறவுகள் குறித்த விவரத்தைத் தெரிவிக்க முடியாவிடில் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் எதற்கு என்று கேட்டுப் பலரும் குரல் எழுப்பினார்கள். தமது போராட்டத்தைத் தீவிரமாக்கித் தொடர்வது எனவும் அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். ★

## அடுத்த நூற்றாண்டில்....

(I ஆம் பக்கத் தொடர்)

ஆனால் 2015 முதல் 50சதவீதமானகாரின் உதிரிப்பாகங்கள் மீண்டும் பயன் படுத்தப் படக் கூடியவையாகத் தயாரிக்கப்படும்.

அதிவேகமாக ஊடுருவிச் செல்லும் சுப்பர் கண்டக்டர் (Super Conductor) மூலம் மின் விசை தகவல், ஒளி பரப்புக்கள் ஓரிடத்தில் இருந்து தொலை தூரத்திற்கு கண்ணிமைக்கும் நேரத்தில் கொண்டு செல்லப்படும். இது 2015 இல் சாத்தியமாகும்.

காபர்னில் இருந்து தயாரிக்கப்பட்ட ''பாக்கி— பால்'' (Baccky Ball) என்ற புதிய மூலப்பொருள்ஒன்று2011 இல் புழக்கத்தில் வரும்.

**விண்வெளி ஆராய்ச்சி**

விண்வெளி ஆராய்ச்சியில் 2019 ஆம் ஆண்டு முதல் தனியாரும் ஈடுபடுவார்கள். செவ்வாய்க் கிரகத்திற்கு 2037 முதல் மனிதன் செல்லக் கூடும். சந்திரமண்டலத்தில் ஒரு தங்குமிடம் (Base) 2028 இல் சாத்தியமாகலாம்.

நம்மைச் சுற்றியுள்ள நட்சத்திர மண்டலத்தை ஆராய ஓர் விண்கலம் 2042 ஆம் ஆண்டு தயாராகலாம்.

2062இலிருந்து விண்வெளிக் கலங்கள் ஒளியின் வேகத்தில் செல்லக்கூடிய வையாக இருக்கும். விண்வெளியிலுள்ள உயிரினங்கள் 2049 முதல் தென்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய நூற்றாண்டில் ஒரு புதிய உலகம் நம் இளம் தலைமுறையினருக்காகக் காத்திருக்கின்றது. அதை வரவேற்க இன்றே தயாராகி விட்டது மேற்குலகம். நாம்...?

மூலம்:- 'சக்தி'

## ஜீவ நதி.....

(VIII ஆம் பக்கத் தொடர்)

ஒன்று இருந்ததுதான். ஆனால் அந்த நிம்மதியில் இவளுக்கு துளிகூட நம்பிக்கை இருக்கவில்லை. அதனால் அவள் கண்ணும் கருத்துமாய் இருந்தாள். அடிக்கடி மகனை எச்சரித்தும் இருந்தாள்.

''ஆச்சி நாங்கள் ஒரு பாவமும் செய்யேல்லையணை. அண்ணாமார் தானணை துணை... சும்மா வீட்டுக்கை இருந்தா உழைக்கேலாது''

அவளும் கூட மணற்கூடல் அண்ணாமாரை நம்பித்தான் அவனை வெளியில் போகவர விட்டாள். அன்றும் கூட வீட்டிலிருந்து தொழிலுக்கு புறப்பட்டான். ஊருக்கு வெளியே ஒரு பனை அதற்கு போவதற்கு காட்டுப் பாதையால் தான் வழி. மிகவும் பயம்.

''அந்தப் பனையை விடு தம்பி...''

''எணை, ஒருதரம் முப்பது, நாப்பது போத்தில் ஊர்ற பனை. அதை விடேலா தணை...''

அன்று அந்தப் பனைக்கு போனவன்தான். அதற்கு பிறகு திரும்பவில்லை. அவள் அழுது குளறினாள். அவளுக்கு யார் ஆறுதல் சொல்வது? அல்லது உதவி செய்வது? தெய்வம்தான்துணை; அண்ணாமாருக்கும் முனியப்பருக்கும் அவள் வைத்த நேர்த்திகள் கொஞ்சமா?

ஆனால் நாள்கள் நகர்ந்தன. அவன் திரும்பிவரவே இல்லை. அவன் காணாமற் போன அன்று மூட்டாமல் விட்ட அடுப்பு இன்று ஒரு வருடத்துக்கு மேலாக மூட்டப்படவேயில்லை. முன் கொட்டில் சின்னனின் மகள் தரும் சோற்றை அவளின் வில்லங்கத்துக்கு ஒரு வேளை சாப்பிடுவாள். உணவின்மையை மனம் தாங்கும்; உடல் தாங்குமா? துரும்பாக இளைத்துப் போனாள் மீனாட்சி. இருமல் வேறுபிடித்துக் கொண்டது. இருமத் தொடங்கினால் பல நிமிடங்கள் நீடிக்கும்.

பலர் முறைப்பாடுகள் பல செய்தனர்; உண்ணாவிரதம் இருந்தார்கள். இவளுக்கு அதற்கு எல்லாம் போக விருப்பந்தான்; ஆனால் எழும்பி நடக்கத் திராணி இல்லையே. ஆனாலும் அவையெதுவும் வெற்றியளித்ததாகவும் இல்லை. காணாமற் போனவர்கள், போனவர்கள் தான். இவளுக்கு மட்டும் ஒரு நம்பிக்கை மனதில். எப்படியும் அவன் வருவான்; தனக்கு கொள்ளிபோட வேணும் என நம்பினாள். மேலும் நாள்களாகின. மீனாட்சியால் எழுந்து நடக்கவே முடியாமற் போனது. படுத்தபடுக்கையாகிவிட்டாள். சின்னனின் மனைவியும் மகளும் ஏதோ தங்களால் இயன்ற வரைபராமரித்தனர். கண் விழிக்கும் நேரமெல்லாம் ''தம்பி வந்தானா...? தம்பி வந்தானா?'' மீண்டும் கண்கள் மூடிவிடும்.

மீனாட்சியின் உடல்நிலை மேலும் மோசமாகியது. சின்னன் ஊர்ப்பரியாரியாரை கூட்டிவந்து காட்டினான். அவரும் 'என்ன செய்வது' என்று கண்கலங்கத்தான் முடிந்தது. உடலுக்கு வைத்தியம் செய்யலாம்; மனதுக்கு வைத்தியம் செய்ய யாரால் முடியும்? நல்ல சாப்பாடு கொடுக்கச் சொல்லிவிட்டுப் போனார்.

சாப்பிடும் நிலையிலா மீனாட்சி இருந்தாள்? அவளுக்கு சாப்பாடு அவன் மகனல்லவா? அவனை ஒரு தடவை கொண்டு வந்து காட்டினால் அவள் துள்ளிஓடுவாள் உலகெல்லாம் சுற்றி. யார் அதைச்செய்யப்போகின்றனர்? வாழ்வின் துயரின் கொடுமைகளை எத்தனை விதமாய் இந்த மண்ணில் அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

காலை மீனாட்சிக்கு முகம் கழுவிவிடலாம் என்று வீட்டுக்குள் நுழைந்த சின்னனின் மனைவி மீனாட்சியின் கோலத்தைப் பார்த்து வீரிட்டுக் கத்தினாள். மீனாட்சி அவளின் ஆசை மகனின் முகத்தைக் கடைசியாயும் ஒரு தடவை பார்க்காமல் தன் வாழ்வை முடித்திருந்தாள். இனி அவளின் ஆசை மகனை யாருக்கும் தெரியாமல் பிடித்துப் போனவர்கள் அவனை விட்டுவிடவேண்டிய அவசியம் என்று எதுவும் இல்லை.

(யாவும் கற்பனை)

## விடைகள்

(X ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

**சொற்களைத் தேடுங்கள்**

அ) தரம். ஆ) தனம். இ) தவம்.
ஈ) தசம். உ) தடம். ஊ) தரும்.
எ) தகும். ஏ) தலம். ஐ) தளம்.

**உங்களால் முடியுமா?**

| | ராஜன் | மோகன் | திருமன் | ஈசன் | விஜி | தயாளன் |
|---|---|---|---|---|---|---|
| ஓட்டம் | 6 | 36 | 11 | 9 | 0 | 22 |
| விக்கெட் | 0 | 2 | 0 | 0 | 1 | 3 |

**இயலுமா?**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | வி | ஜ | ய | ன் | லா | தை | சீ |
| ரீ | லி | பீ | ம | ன் | ப | இ | ன் |
| ச | கி | னு | ட | ண் | ர | ரு | ண |
| ன் | அ | ன் | ம | ண | த | பா | வ |
| ந | க | த | கூ | னி | ன் | ம | ரா |
| கு | கோ | ர | கு | ம | ண | ல் | யி |
| ல | ல | ச | ரு | வி | ர் | வா | கே |
| ன் | க் | த | லை | அ | க | லி | கை |

## சாணக்கியரின் அரசியல்....

(IX ஆம் பக்கத் தொடர்)

கொண்டிருந்தார்கள். அவர்கள் கிழிந்துபோன ஒரு பழைய கம்பளித்துணியால் தங்களைப் போர்த்திக் கொண்டு உறங்கினார்கள்.

அவர்கள் போர்த்தியிருந்த கம்பளி முழுவதும் ஒரேகிழிசல் மயம்! அதனால் அவர்களின் உடல் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது.

இதைப் பார்த்ததும் திருடர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

'என்ன இது!... ஒரு பக்கம் இவ்வளவு புத்தம் புதிய கம்பளிகள் குவிந்து கிடக்கின்றன...அதையெல்லாம் விட்டு விட்டு இவர்கள் கிழிந்து போன ஒரு கந்தல் கம்பளியைப் போர்த்திக்கொண்டு இப்படி குளிரில் கஷ்டப்படுகிறார்களே!' என்ற வியப்புத் திருடர்களுக்கு ஏற்பட்டது.

உடனே அந்தத் திருடர்கள் வந்த காரியத்தையும் விட்டுவிட்டு சாணக்கியரை எழுப்பினார்கள்!

''ஐயா...கொஞ்சம் எழுந்திருங்கள்!'' என்றார்கள்.

அவர் எழுந்து உட்கார்ந்து ஒன்றும் புரியாமல் இவர்களைப் பார்த்தார்.

அவர்கள் அவரிடம் ''ஐயா ...நாங்கள் எல்லோரும் திருடர்கள்...நாங்கள் கம்பளி திருடுவதற்காகத்தான் இங்கே வந்தோம். ஆனால் உங்கள் நிலையைப் பார்த்ததும் எங்களுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது......அதைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காகத் தான் இப்போது உங்களை எழுப்பினோம்'' என்றார்கள்.

''உங்கள் சந்தேகம் என்ன?'' என்று கேட்டார் சாணக்கியர்.

''உங்கள் குடிசைக்குள்ளேயே ஒருபக்கம் நல்ல கம்பளிப் போர்வைகள் குவிந்து கிடக்கின்றன...அதை விட்டு விட்டு இப்படி ஓட்டைக் கம்பளியால் உடம்பை மூடிக் கொண்டு இருக்கிறீர்களே... நீங்கள் ஏன் இப்படிச்செய்ய வேண்டும்?'' என்று திருடர்கள் வினவினார்கள்.

அவர்களிடம் ''அந்தக்கம்பளியை நான் எடுத்துப் பயன் படுத்தினால்...நானும் உங்களைப்போன்றவன் தானே!'' என்று கேட்டார் சாணக்கியர்.

வந்த திருடர்களுக்கு ஒன்றும் புரிபவில்லை; சாணக்கியர் விளக்கம் கூறினார்.

''நான் கிழிந்துபோன கம்பளி வைத்திருக்கிறேன்...இது போன்று கிழிந்துபோன கம்பளி கூட இல்லாத ஏழை எளிய மக்களுக்குக் கொடுப்பதற்காக மன்னர் அந்தக் கம்பளியைக் கொடுத்தனுப்பியிருக்கிறார். அந்த ஏழைகள் தான் இந்தப் புதுக்கம்பளிகளுக்குச் சொந்தக்காரர்கள். அதை எடுத்து நான்போர்த்திக்கொண்டால் நானும் திருடன் என்றுதான் ஆகும்! அதனால் அதை நான் எடுக்க மாட்டேன்!'' என்றார்.

திருடர்களுக்கு மனதில் முள்ளால் குத்தியது போல் இருந்தது.

அவர்கள், ''இனிமேல் நாங்கள் திருடவே மாட்டோம்'' என்று சொல்லி... அங்கு வந்ததற்காக சாணக்கியரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விடை பெற்றுச் சென்றார்கள்.

உயர்ந்த பதவியிலும், அரசியலிலும் இருப்பவர்களின் முன் உதாரணம்தான் அடிமட்டத்தில் இருப்பவர்களின் மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

இந்தக் காலம் அப்படியா இருக்கிறது? ★

## ஒரு பிரஜை....

(V ஆம் பக்கத் தொடர்)

யோசித்தாள். அவனை மெதுவாகத் தூக்கி, மெதுவாக மண்ணில் படுக்க வைத்து விட்டு பதுங்கு குழியிலிருந்து வெளியே வந்தாள். யாரும் இல்லை. வேகமாக வீட்டினுள் ஓடினாள். சமையலறையில் புகுந்து சாப்பாடு தேடினாள். அகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டாள். படுக்கை அறையில் புகுந்து பரபரப்பாகத் தேடினாள். கொஞ்சம் தாமதத்தின் பின், டிஸ்பிறின் அகப்பட்டது. எல்லாவற்றுடனும் வெளியே வரும்போதுதான் அவள் கவனித்தாள்.

சின்ன இடைவெளிக்கு அப்பால் நீட்டிய துப்பாக்கிகளுடன் இராணுவம் வந்து கொண்டிருந்தது.

கணேசனுக்கு நா வரண்டது, தலைபாரமாகஇருந்தது. 'அம்மா' என்று முனகினான். சிரமப்பட்டு தலையை தூக்கிப் பார்த்தான். அம்மாவைக் காணவில்லை!

''அம்மா'' என்று கூப்பிட்டான். அவனுடைய குரல் அவனுக்கே கேட்கவில்லை. கண்கள் நன்றாக திறக்க முடியவில்லை. உடம்பு முழுவதும் கொதித்தது. சில எறும்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன...'அம்மா எங்கே?'' அவனுக்குப் பயமாகவும், கவலையாகவும் இருந்தது. அம்மாவுக்காகக் காத்திருந்தான்.

அம்மா வரவில்லை 'அம்மா எங்கே?' பயம் அவனைக் கலவரப்படுத்தியது.

'அம்மாவை ஆமிக்காரன் பிடிச்சுக் கொண்டு போட்டானோ?'

'இனி நான்தானே, அடுத்த தாய் என்னைத்தானே பிடிப்பாங்கள்! பிடிச்சா சுட்டுப் போடுவாங்களோ?'

பயம்... பயம்...

அழுகையும் வந்தது.

இந்த இடம் போதுமான பாதுகாப்பாக இல்லை என்று கணேசன் நினைத்தான். வெளியில்போகேலாது. அங்க கட்டாயம் ஆமிக்காரன்கள் நிப்பாங்கள்.

அப்ப என்ன செய்யலாம்? இன்னும் கீழே ஆழத்துக்கு போகவேணும்...

''நல்ல ஆழத்துக்கு போக வேணும்'' கணேசன் தன்னை சுதாகரித்துக்கொண்டான். சின்னக் கைகளால் மண்ணைத் தோண்ட ஆரம்பித்தான். தலை கனத்தது. கண் எரிந்தது. பசித்தது. ஆனாலும் கணேசன் மண்ணைத் தோண்டிக் கொண்டிருந்தான். அவன் தப்பியாக வேண்டும்.

சின்னக் கைகளில் மெல்ல மெல்ல இரத்தம் கசிந்தது.

✶ ஓவியம்:
மானியூர் ரட்ணேஸ்

## இந்திரன் கட்டிய....

(III ஆம் பக்கத் தொடர்)

அரண்மனையைத் தாங்கள் இது வரையில் வேறு எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா?'' என்று மிகவும் பெருமையாகக் கேட்டான்.

''நான் பார்த்ததில்லை! ஆனால் என்னை விட வயதில் மூத்தவர் மகரிஷி லோமேசர். அவர் ஒரு வேளை பார்த்திருக்கிறாரோ என்னவோ?'' என்றார் நாரதர்.

உடனே மகரிஷி லோமேசரை மனதில் நினைத்து நாரதர் தியானம் செய்தார்.

அடுத்த கணம் லோமேசர் அங்கே தோன்றினார். இடையில் ஒரு சிறிய துண்டு. கையில் ஒரு கமண்டலம்... தலையிலேயே ஒரு பாய். அவ்வளவுதான் அவரிடம் இருந்தன,

''எதற்காகத் தலையில் இந்தப் பாய்?'' என்று இந்திரன் லோமேசரிடம் வினவினான்.

''என்னைப் போன்ற அற்ப ஆயுள் கொண்ட ஒரு ஜீவன் தனியாக வீடு கட்டிக் கொண்டு திண்டாட வேண்டுமா? இந்தப் பாய்தான் ஒரு வீடு போல் இருந்து எனக்கு நிழல் கொடுகிறது'' என்றார் அவர்.

''என்ன! உங்களுக்கு அவ்வளவு கொஞ்சமான ஆயுளா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் இந்திரன்.

''ஆமாம்! இதோ பார்... என் மார்பில் ஒரு பொற்காசு அளவுக்கு ரோமம் உதிர்ந்து விட்டது! எப்போது என் உடம்பிலுள்ள எல்லா உரோமங்களும் உதிர்ந்துவிடுமோ அப்போது என் ஆயுள் முடியும்!'' — என்றார் லோமேசர்.

''எப்போது அந்த ரோமங்களெல்லாம் உதிரும்?'' என்று கேட்டான் இந்திரன்.

''ஒரு பிரம்மாவுக்கு 100 தேவ வருஷம்... ஒவ்வொரு தேவ வருஷத்திற்கும் 365 தேவ நாள்கள். ஒவ்வொரு தேவ நாளிலும் உன்னைப் போன்ற 14 இந்திரர்கள் தோன்றி மறைகிறார்கள்!'' — என்றார் லோமேசர்.

இவ்விதம் லோமேசர் சொன்னதைக் கேட்டதும் இந்திரன் அப்படியே ஆடிப் போய்விட்டான்.

''இவ்வளவு அதிகமான ஆயுளைக் கொண்ட இவரே தம்முடைய ஆயுளை 'அற்ப ஆயுள்' என்று சொல்கிறார்! அப்படியிருக்கும்போது நான் என்னுடைய ஆயுளைப் போய் பெரிதாக நினைத்துக் கொண்டு பிரம்மாண்டமான அரண்மனை கட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறேனே...!'' என்று நினைத்துச் கொண்டான்.

அதைத் தொடர்ந்து அவன் தேவதச்சரை அழைத்து,'' எனக்கு வீடு கட்டின வரைக்கும் போதும்!''என்று சொல்லி விட்டான்.

ஆதலால் நாம் அனைவரும் நம்முடைய தேவைக்கு ஏற்ப ஆசைப்படுவதுதான் நியாயம். ஆனால் நாம் அப்படியா நடந்து கொள்கிறோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் ஹெல்மட் கோலின்
# 16 வருடகால ஆட்சிக்கு முடிவு!

**உலக உலா**

என்.பி.சீலன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் கிறிஸ்தவ ஜனநாயகயூனியன் கட்சி தோல்வி அடைந்தது.

இடதுசாரிப் போக்குடைய சமூக ஜனநாயகக் கட்சி வெற்றி அடைந்து அதன் தலைவர் ஜெர்ஹாட் ஸ்குரூடர் (Gerhard Schroeder) ஜேர்மனியின் புதிய அதிபராக—அதாவது சான்சிலராக — பதவி ஏற்க உள்ளார்.

1990 ஆம் ஆண்டு ஜேர்மனி மீண்டும் இணைக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற மூன்றாவது தேர்தல் இது ஆகும்.

ஜேர்மனியின் அரசமைப்பின் பிரகாரம் ஜேர்மன் நாடாளுமன்றமான ''பண்டெஸ்ராக்' கின் (Bundestag) ஆயுள்காலம் நான்கு வருடங்கள்.

இணைக்கப்பட்ட ஜேர்மனியில் வாக்களிக்கத் தகுதி பெற்றோரின் எண்ணிக்கை 6 கோடியே 50 லட்சம். இதில் 20 சதவீதமான வாக்காளர்கள் கிழக்கு ஜேர்மனியில் வசிப்பவர்கள.

அதிபர் ஹெல்மட் கோலின் தலைவிதியை இம்முறை கிழக்கு ஜேர்மன் வாக்காளர்களே நிர்ணயித்துள்ளார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

மேற்கு ஜேர்மன் அதிபராகவும் பின்னர் ஒன்றிணைக்கப்பட்ட ஜேர்மன் அதிபராகவும் ஹெல்மட் கோல் (Helmat Kohl) 16 வருடகாலம் பதவியில் இருந்தார்.

உலகில் ஜனநாயக முறையில் பொதுத்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களில் நீண்டகாலம் பதவியில் இருந்தவர்களில் இவரும் ஒருவர்.

கடந்த ஞாயிறு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் அவர் வெற்றி பெற்று 5 ஆவது தடவையாக அதிபராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தால் ஜேர்மனியில் நீண்ட சரித்திரம் படைத்த சாதனையைப் பெற்றிருப்பார்.

19 வருடகாலம் பதவியில் இருந்த அதிபர் பிஸ்மாக்கின் சாதனையை முறியடித்திருப்பார்.

ஜேர்மனி இணைக்கப்பட்ட பின்னர் 1990 இல் நடைபெற்ற தேர்தலில் கிழக்கு ஜேர்மன் மக்கள் ஹெல்மட் கோலுக்கு ஆதரவாகவே வாக்களித்தனர். சர்வாதிகாரி ஹிட்லர் காலத்துக்குப் பின்னர் சுதந்திரமாக நடைபெற்ற தேர்தல் ஒன்றில் கிழக்கு ஜேர்மன் மக்கள் பங்குபற்றியது இதுதான் முதற்தடவை.

கம்யூனிஸ்ட் ஆட்சி முறையில் ஏற்பட்டிருந்த வெறுப்பு, பொருளாதார நெருக்கடி, மேற்குநாடுகளின் வளர்ச்சியால் ஏற்பட்டிருந்த கவர்ச்சி ஆகியவை 1990 தேர்தலில் ஹெல்மட் கோலை கிழக்கு ஜேர்மன் மக்கள் ஆதரிக்கத் தூண்டின.

1994 தேர்தலிலும் கிழக்கு ஜேர்மன் மக்களின் வாக்குகள் ஹெல்மட் கோலுக்கே பெரும் அளவு கிடைத்தன. இதனாலேயே அவர் 4 ஆவது தடவையும் ஆட்சியைப் பிடிக்க முடிந்தது.

1990, 94 ஆம் ஆண்டுத் தேர்தல்களில் ஹெல்மட் கோல் தோற்பார் என்று பொதுசன அபிப்பிராய வாக்குக் கணிப்புக்கள் தெரிவித்தன. ஆனால் வாக்குக் கணிப்புக்கு மாறாக ஹெல்மட் கோலின் கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலிலும் —தேர்தல் பிரசாரங்கள் நான்கு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்திருந்த சமயம் — ஹெல்மட் கோலின் தோல்வி குறித்து ஊகங்கள் எழுப்பப்பட்டன.

அப்பொழுது எடுக்கப்பட்ட பொதுசன அபிப்பிராய வாக்குக் கணிப்புகளும் அதனையே தெரிவித்திருந்தன.

ஆனால் தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் எடுக்கப்பட்ட வாக்குக் கணிப்புகளில் மாற்றம் தெரிந்தது.

ஹெல்மட் கோலுக்கும் ஜெர்ஹாட் ஸ்குரூடருக்கும் இடையில் கடும் போட்டி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

''நான் வெற்றி அடைவது நிச்சயம். கடந்த தேர்தல்களில் நடந்ததுபோல் இம்முறையும் பொதுசன அபிப்பிராய வாக்குக்கணிப்புகள் பொய்த்துவிடும்'' என்று ஹெல்மட் கோல் வாக்களிப்புக்கு முன்னர் தெரிவித்தார்.

ஆனால் எதிர்பாராதவிதமாக அவருக்குத் தோல்வி ஏற்பட்டது.

### வேலை இல்லா பிரச்சினை

ஹெல்மட் கோலின் கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் தேர்தலில் தோல்வி அடைவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று ஜேர்மனியில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினை.



ஜேர்மன் தேர்தலின் போது ஹெல்மட்கோல் மற்றும் ஜெர்ஹாட் ஸ்குரூடர் ஆகியோரின் படங்கள் தலைநகர் பொன்னில்.

சுமார் 44 லட்சம் மக்கள் ஜேர்மனியில் வேலை இல்லாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பெரும்பாலும் கிழக்கு ஜேர்மனியே வேலையில்லாப் பிரச்சினையால் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறு தேர்தலில் கிழக்கு ஜேர்மன் மக்களின் வாக்குகள் ஜெர்ஹாட் ஸ்குரூடருக்கே கூடுதலாகக் கிடைத்தன. ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் போன்று கிழக்கு ஜேர்மனியிலும் கம்யூனிஸ்ட்டுக்கள் மீண்டும் செல்வாக்குப் பெற ஆரம்பித்திருப்பதும் இதற்கு ஒரு காரணம். அத்துடன் மேற்கு ஜேர்மன் அதிகார தலைமைத்துவத்தினால் தாம் இரண்டாந்தரப் பிரஜைகளாக மதிக்கப்படுவதாகப் பெரும்பாலான கிழக்கு ஜேர்மன் மக்கள் கருதுகின்றனர்.

### தேர்தல் முறை

ஜேர்மன் அதிபர் ''சான்சிலர்'' (Chancellor) என்று அழைக்கப்படுகிறார்.

ஜேர்மன் அதிபரை மக்கள் நேரடியாகத் தெரிவு செய்வதில்லை. விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையை ஒத்த தேர்தல் நடைமுறை ஜேர்மனியில் அமுலில் இருக்கிறது.

தேர்தலில் வாக்காளர் ஒருவருக்கு இரு வாக்குகள உண்டு. கீழ்சபையான ''பண்டெஸ்ராக்'' குக்கு உறுப்பினரைத் தெரிவு செய்வற்கு ஒரு வாக்கு பயன்படுத்தப்படும். மற்றைய வாக்கு தேர்தல் மாவட்ட ரீதியாக கட்சிகளின் வேட்பாளர் பட்டியலில் இருந்து மாவட்டம் தோறும் ஒரு வேட்பாளரைத் தெரிவு செய்ய பயன்படுத்தப்படும். ஜனாதிபதியைத் தெரிவு செய்வது கீழ்சபையான பண்டெஸ்ராக்கே. சாதாரண பெரும்பான்மையுடன் கீழ்சபை அதிபரைத் தெரிவு செய்ய முடியும்.

கடந்த ஞாயிறு தேர்தலில் ஜெர்ஹாட் ஸ்குரூடரின் சமூக ஜனநாயகக் கட்சிக்கு 41 சதவீதமான மக்கள் வாக்களித்தனர். ஹெல்மட் கோலின் கிறஸ்தவ ஜனநாயக யூனியனுக்கு 38 சதவீதமானோர் வாக்களித்தனர்.

இந்தத் தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் எடுக்கப்பட்ட பொதுசன அபிப்பிராய வாக்குக் கணிப்புக்களும் இதனையே தெரிவித்தன.

### கட்சிகள்

ஜேர்மனியின் பிரதான கட்சிகள் கிறிஸ்தவ ஜனநாயக யூனியன், சமூக ஜனநாயகக்கட்சி.

கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சியும் கிறிஸ்தவ சமூகக் கட்சியும் இணைந்தே கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் என்ற பெயரில் இயங்கி வருகின்றன.

இரண்டாவது உலக மகாயுத்தித்தின் பின்னர் ஜேர்மனி துண்டாடப் பட்ட பின்னர் மேற்கு ஜேர்மனியில் இந்த இரு கட்சிகளும் இணைந்து நீண்ட காலம் கூட்டாட்சி நடத்தின. 1994 தேர்தலில் 41.5 சதவீத வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தின்கீழ்ச்சபையில் 294 ஆசனங்களை கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் பெற்றது.

ஆனால் 1994 தேர்தலின் பின்னர் கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் செல்வாக்கு இழக்க ஆரம்பித்தது. அதிபர் ஹெல்மட்கோல் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியது இதற்கு ஒரு காரணம்.

### கோலின் பலமும் பலவீனமும்

கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் தலைவர் ஹெல்மட் கோல் 1982 ஆம் ஆண்டு அதிபர் ஆனார்.

முன்னர் பதவியில் இருந்த வில்லி பிராண்ட், ஹெல்மட் சிமிட் ஆகியோரின் 13 வருடகால சோஷலிச பாணியிலான தவறான ஆட்சியில் இருந்து ஜேர்மனியை விடுவிக்கப் போவதாக அவர் அறிவித்தார்.

ஹெல்மட்கோலின் பதவிக்காலத்தில் ஜேர்மனியில் பொருளாதாரம் மேம்பட ஆரம்பித்தது. தனியார் துறையினரின் முதலீடுகள் அதிகரித்தன. ஐரோப்பிய ஒற்றுமைக்கு ஹெல்மட் கோல் பாடுபட்டார். ஐரோப்பிய யூனியனின் பொதுவான நாணயமான ''யூரோ'' வில் (Euro) ஜேர்மனியையும் இணைப்பதற்கு அவர் நடவடிக்கை எடுத்தார். 1989இல் கிழக்கு ஜேர்மன் வீழ்ச்சி அடைந்த பின்னர் ஜேர்மன் இணைப்பில் ஹெல்மட்கோல் முன்னணியில் நின்றார். ஆனால் ஜேர்மன் மக்கள் அவரது ஆட்சியில் எதிர்பார்த்த பொருளாதார சுபீட்சம் கிட்டவில்லை. கிழக்கு ஜேர்மன் மக்களின் மனோநிலையை சரியாக எடைபோடத் தவறி இருந்தார் ஹெல்மட்கோல்.

### சமூக ஜனநாயகக் கட்சி

தற்போது தேர்தலில் வெற்றி பெற்றுள்ள சமூக ஜனநாயகக்கட்சிஜேர்மனியில் நீண்ட கால வரலாறு கொண்டது. உலகில் தற்போதும் இருந்து வரும் பழைமை வாய்ந்த கட்சிகளில் இதுவும் ஒன்று.

1959 ஆம் ஆண்டு இந்தக் கட்சி மார்க்சியக் கொள்கைகளைக் கைவிட்டது. எனினும் இடதுசாரிப் போக்குடைய கட்சியாகவே தொடர்ந்து இயங்கி வருகிறது. கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவு இந்த கட்சிக்கு உண்டு.

1992 இல் அமெரிக்காவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சிமாற்றதின் அவசியம் குறித்து ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எதிராகக் கிளின்ரன் பிரசாரம் செய்தார். 1994 ஜேர்மன் தேர்தலிலும் ஜெர்ஹாட்ஸ்குரூடர் இதே தந்திரத்தை கையாண்டார். ஆட்சிமாற்றம் தேவை என்பதை ஜேர்மன் வாக்காளர்களுக்கு அவர் உணரவைத்தார். 1994 தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயக யூனியனிடம் தோல்வி அடைந்தபோதிலும் 36.4 சதவீதவாக்குகளைப் பெற்று 252 ஆசனங்களை கீழ் சபையில் சமூக ஜனநாயகக் கட்சி பெறக் கூடியதாக இருந்தது.

### ஸ்குரூடரின் கொள்கைகள்

குடும்ப அலவன்ஸை அதிகரிப்பது, அரசின் கல்விச் செலவீனங்களை இரண்டு மடங்காக அதிகரிப்பது, செல்வந்தர் மீது பிரத்தியேகவரி அறவிடுவது ஆகியவை ஸ்குரூடரின் தேர்தல் பிரசாரவாக்குறுதிகள் ஆகும்.

1980 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு முதல் தடவையாக அவர் வெற்றி அடைந்தர். மேற்கு ஜேர்மனியில் நேட்டோவின் ஏவுகணைகளை பொருத்தும் நடவடிக்கையை அவர் வன்மையாக எதிர்த்தார். கடந்த தேர்தல் பிரசாரத்தின்போது ஹெல்மட் கோலை பதவியில் இருந்து அகற்றுவதற்கான நேரம் வந்து விட்டதாக ஸ்குரூடர் தெரிவித்திருந்தார்.

### வெளிவிவகாரம்

ஜேர்மன் தேர்தலில் ஜெர்ஹாட் ஸ்குரூடரின் வெற்றி பிரிட்டன், பிரான்ஸ். இத்தாலி ஆகிய நாடுகளுடன் ஜேர்மனி மிக நெருங்கிய உறவுகளை வைத்துக் கொள்ள உதவும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

ஸ்குரூடர் சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்த சமயம், சமூக ஜனநாயகக் கட்சி பதவிக்கு வந்தால் ஜேர்மனியின் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றம் ஏற்படமாட்டாது என்று தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவில் ஜனாதிபதி ஒருவரின் தேர்தல் வெற்றி வெளிநாட்டுக் கொள்கையிலேயே கூடுதலாகத் தங்கியுள்ளது. 1962 கியூபா ஏவுகணை நெருக்கடியை அப்போதைய ஜனாதிபதி ஜோன் எவ் கென்னடி கையாண்ட விதம் கென்னடியின் செல்வாக்கை பெருமளவு உயர்த்தியது,

ஆனால் ஜேர்மனியைப் பொறுத்தவரை வெளிவிவகாரக் கொள்கைகளைவிட உள்நாட்டுக் கொள்கையே தேர்தல்வெற்றியைநிர்ணயிக்கிறது. முக்கியமாக பொருளாதார நிலை, வேலையில்லாப் பிரச்சினை.

### முக்கியகாலகட்டத்தில் ஜேர்மனி

ஐரோப்பா முக்கியமான ஒரு காலகட்டத்தில் இருக்கும் போது ஜேர்மனியில் இம்முறை தேர்தல் நடைபெற்றிருக்கிறது.

ஐரோப்பிய யூனியனின் தலைமைப் பதவி ஜேர்மனியிடமே இந்த ஆண்டு உள்ளது.

அத்துடன் பொது நாணயமான ''யூரோ'' நாணயமும் பாவனைக்கு வர உள்ளது.

### ரஷ்யாவுக்கு உதவி

தற்போது கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் ரஷ்யாவுக்கு உதவுவதில் ஹெல்மட் கோலின் கிறிஸ்தவ ஜனநாயக யூனியனும் ஸ்குறூடரின் சமூக ஜனநாயகக் கட்சியும் ஒத்த கொள்கைகளையே கடைப்பிடித்து வருகின்றன.

ரஷ்யாவுக்கு பெருமளவு நிதி உதவி வழங்குவது ஐரோப்பிய பொருளாதாரத்துக்கு ஊறுவிளைவிக்கும் என்று ஐரோப்பிய வங்கியாளர்களும் நிபுணர்களும் கருதுகிறார்கள்.

எனினும் சீர்திருத்தக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் ரஷ்யாவுக்கு உதவ வேண்டும் என்று ஹெல்மட் கோலும் ஸ்குரூடரும் தெரிவிக்கின்றனர்.

சோவியத் யூனியன் வீழ்ச்சி அடைந்த பின்னர் 6 ஆயிரத்து 700 கோடி டொலரை கடனாகவும் அன்பளிப்பாகவும் ரஷ்யாவுக்கு ஜேர்மனி வழங்கி உள்ளது. ரஷ்யாவில் சீர்திருத்தங்கள் நடைபெறும் வரை இத்தகைய உதவிகளை தொடர்ந்து வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒன்றிணைக்கப்பட்ட ஜேர்மனி எதிர்நோக்கும் பிரதான சவால்கள் இன்று உள்நாட்டிலேயே உருவாகின்றன.

இவற்றை எதிர்கொள்வதிலேயே புதிய அதிபர் ஸ்குரூடரின் எதிர்காலம் தங்கி உள்ளது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org